௪௧

# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

[தொகுதி - ௧] | சுக்கில௵ - சித்திரை௴ | [பகுதி - ௪

No. 17 APR 1929 MADRAS

## உள்ளடக்கம்


பத்திரிகாசிரியர் முன்னுரை .... ௧௩௩
ஒழுக்கப் பகுதி : நமது தலைவர் கட்டுரை ... ௧௩௫
தமிழ் நூலாராய்ச்சி : திருமுருகாற்றுப்படை ௧௩௭
தமிழ்மொழி ஆராய்ச்சி: தொடர்மொழி விளக்கம் ௧௩௯
அறிவியல் பகுதி : வானவில் உண்டாவதெப்படி? ௧௪௧
மழை பெய்தபின் காற்று ஏன் ஆரோக்கிய
மானதாயிருக்கிறது? ... ௧௪௨
கிரகணங்கள் எப்படி உண்டாகிறது? .... ௧௪௨
மாதர் பகுதி : பால்ய விவாகம் .... ௧௪௩
தமிழர் மணமுறை .... ௧௪௫
சுகாதாரப் பகுதி : சுகாதாரம் .... ௧௪௯
குலதிலகர் பகுதி : மந்திரி முதலியார் .... ௧௫௨
சமயப் பகுதி : செங்குந்தரும் சிவதீக்கையும் ௧௫௩
இந்திய ராயல் கமிஷன் ... ௧௫௬
ஆன்றோர் அமுத மொழி .... ௧௫௯
புது உலகம் : சிங்காரவன வீதி ... ௧௬௦
செங்குந்தர் கிளர்ச்சி .... ௧௬௧
ஒரு நிருபம் .... ௧௭௦
செங்குந்த மித்திரன் பஞ்சாங்கம் .... ௧௭௨


தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

நெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

## விளம்பரங்கள்

அதியத்தை

நகியம் ஒன்றே
செல்லாம் நாயகம்.

திருவாரூர், டாக்டர்
கண்ணுசாமி பிள்ளையின்

ஜீவ ரக்ஷாமிர்த
செந்தூரம்.

எல்லா நோய்களுக்கும் ஒரே மருந்து.

பரீக்ஷைபாருங்கள்! திருப்தியடைவீர்கள்!!

ஒரு குடும்ப வைத்தியன் போன்றது.

குழந்தைகள் முதல் கெர்ப்பிணிகளும் கூட சகல வியாதியிலும் சீனியில் கலந்து அரிசியிடை சாப்பிட உடனே குணம் செய்யும்.

(சித்தமருந்து) வேளைமருந்து காலணு

கஸ்தூரி கோரோஜனை குங்குமப்பூ பச்சைகல்பூரம முதலிய மருந்துகள் சேர்ந்திருக்கிறது.

இதில் கண்ட "ஜீவரக்ஷாமிர்தம்" என்ற மருந்தை ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு யாத்திரைவாசிகளிடத்திலும் வைத்துக்கொண்டால் ஒரு கைதேர்ந்த சாதுரியமான வைத்தியர் உங்கள் கூடவே யிருப்பது போலிருக்கும்.

இன்று பிறந்த குழந்தைமுதல் கெர்ப்பிணிகளானுலும் சாதாரண மாணவர்களும் சீர்க்கோர்வை, தலைவலி, ஜுரம், இருமல், கபம், வாந்தி, அஜீர்ணம், அஜீர்ணபேதி, விக்கல், உடம்புவலி, வாயு, சீதபேதி, தேக அசதி, நெஞ்சுகரிப்பு, வயற்றுக் கோளாறுகள், நெரிஜுரம், மலைஜுரம், பித்தவாத ஜுரம், சுபஜுரம் முதலியதிலும் பிரசவகாலத்திலும் இந்த மருந்தை காலை மாலையில் சீனியிற்கலந்து கொடுத்துவந்தால் வேறு மருந்து தேவையில்லை. குழந்தைகளுக்கேற்படும் மாந்தம், கணை முதலிய சகலவியாதிக்கும் சஞ்ஜீவிபோன்றதாகும். தாய்ப்பால், நெய், இஞ்சி, தேன், சித்தரத்தை கஷாயம் முதலிய எதிலாவது சமய உசிதப்படி உபயோகிக்கலாம்.

குறிப்பு:—உங்களின் வியாதிபூர்வ விபரம் எழுதினுல் அதற்குரிய மருந்துகள் வி. பி. மூலம் அனுப்புகிறோம்.

குமார் 50- வேளை மருந்து சீசா 1-க்கு 1—0—0.

ஷண்முகானந்த வைத்தியசாலை, திருவாரூர்.

நம் மருந்துகள் கிடைக்குமிடம்:—

நா. சி. ராம. சி. கம்பெனியார்,
56-அப்பாக்ஸ்ட்ரீட், கோலாலம்பூர்.

சித்த வைத்தியாபிவிர்த்தி சங்கம், திருவாரூர்.

நடமாடுங் கோயில் திருப்பணி.

இதுதான் ஏழைகளுக்குப் பேருதவி.

திருவாரூரில் சித்தவைத்தியாலயம் கட்டுவதற்குப் பொருளுதவி செய்யுங்கள்.

உங்கள் ஊழியன்
ஜீ. கண்ணுசாமி
காரியதரிசி, & முனிசிபல் சித்தவைத்தியசாலை
வைத்திய ஊழியன்.

N. B:—வசூல் புத்தகத்தில் கையெழுத்து செய்த கனவான்கள் அடியில் கண்ட விலாசத்தார்களுக்கும் மணியார்டர் செய்யலாம்.

பிரசிடெண்டு,
ராவ்சாகெப்:—K. V. திருவேங்கட முதலியார்,
ஆனரெரி பெஞ்சு மாஜிஸ்டிரேட்,
T. N. சபாபதி முதலியார்,
முனிஸிபல் வைஸ்சேர்மன்,
திருவாரூர்.

---

விளம்பரம்.

கோடைக்காலத்திற்குச் செல்வ முதல் ஏழைகள் வரையில் எவரும் அணியத் தகுந்ததும் நீடித்து உழைக்கக்கூடியதும் குறைந்த விலையுள்ளதுமான கதர், உலை பனியன்களும் (Socks & Stockings) நீள மேஜோடுகளும் இந்திய மக்களால் உயர்ந்த செட்டிசாய நூலினுல் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு தரம் ஆர்டர் செய்பவர்களுக்கு உண்மை விளங்காமற்போகாது.

கலர் நீள மேஜோடுகள்

6 அங்குலம் முதல் 11 அங்குலம் வரையில்
டஜன் 1-க்கு ரூ. 3—8—0 முதல் 7 வரையில்.

பனியன்கள்.

22 அங்குலம் முதல் 34 அங்குலம் வரையில்
டஜன் 1-க்கு ரூ 3—8—0 முதல் 7 வரையில்

வி. பி. சார்ச்சு பிரத்தியேகம் விபரம் எழுதி தெரிந்துக்கொள்ளவும். மாதிரி வேண்டியவர்கள் 8 அணு மணியாடர் அனுப்பினுல் ஜதை கலர் நீள மேஜோடு அல்லது 1 பனியன் எந்த அளவில் வேண்டுமானுலும் பார்சலில் அனுப்பப்படும்.

K. R. சக்கரபாணி,
23, இராமானுஜ ஐயர் தெரு,
வண்ணாரப்பேட்டை, சென்னை



# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

[ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

தொகுதி - க. | சுக்கிலவருடம் - சித்திரைமாதம் | பகுதி - ௪


முருகன் துணை:

பத்தித்திருமுக மாறுடன் பன்னிருதோள் களுமாயத்
தித்திக்குமமரர் கண்டேன் செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத்துருகிப் பெருகிப் புவன மெற்றித்
தத்திக் கரைபுரளும் பரமானந்த சாகரத்தே.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### மகாநாடு.

ஈரோட்டில் கூடிய நம்மவர் மகாநாடு நமது சமூக சரித்திரத்தில் என்றும் மறக்கமுடியாத ஒரு முக்கிய சம்பவமாகும். நம்மினத்தவர்களேயன்றி ஏனைய இனத்தவர்களும் அதை வெகு சிலாக்கியமாக மதித்துப்பேசுகின்றனர். பல கக்ஷிப் பத்திரிகாசிரியர்களும் ஜாதிய மகாநாடுகளுள் இதைப்போன்ற பெரிய மகாநாடு இதுவரையும் கூடியதில்லை என்றும், கூடியிருந்தவர்களின் தொகைப் பெருக்கத்தாலும், மகாநாட்டுக் கூட்டங்களை நடத்திய ஒழுங்காலும், கண்காட்சிகளின் சிறப்பாலும், மகாநாடு சம்பந்தமான பல ஏற்பாடுகளாலும் இதைக் காங்கிரசுக்கு இரண்டாவதாக மதித்தும், பேசியும், எழுதியும் இருக்கிறார்கள். செங்குந்த குலத்தின் முன்னேற்ற மாளிகைக்கு நமது தலைச்சங்கம் போட்டு வைத்திருந்த அஸ்திவாரத்தை நம்மவர் முதலாவது மகாநாடு தரைமட்டம் வரைக்கும் எழுப்பிவிட்டது. மேலெழுமேலன்டிய கட்டடத்தினை ஒழுங்காகவும் பலமாகவும் விரைவாகவும் முடித்துக் கொடுப்பது இனி நம் குலாபிமானிகளின் அரிய கடனாகும்.

### பொருளும் உழைப்பும்.

இத்தொழில் முற்றுப் பெறுவதற்குப் பொருளும் உண்மை உழைப்பாளிகளும் அவசியமென்பதை எவரும் உணருவர். ஆயினும் பொருளுள்ள இடத்தில் உழைப்பின்மையும், உழைப்புள்ள இடத்தில் பொருளின்மையும் நற்காரியங்கள் அனைத்திற்கும் இடையூறுகளாக அமைகின்றன. இவ்விடையூறுகள் நீங்கினுலொழிய நாமெடுத்துள்ள வேலை செவ்வனே முற்றுப்பெறுதல் அரிது. ஆயினும், நம் குல முன்னேற்றத்திற்கு இவ்விரு அவசியமான சாதனங்களும் நமக்கு வெகு இலகுவில் அமையும் என்னும் உண்மையை நமது மகாநாடு உள்ளங்கை நெல்லிக்கனியென விளக்கி இருக்கின்றது. இவ்வளவு விமரிசையான மகாநாட்டினைக் கூட்டிய ஒரு சமூகத்தாரிடையே குல

முன்னேற்ற கைங்கரியங்களுக்குப் பெரும் பொருளும் நல்லுழைப்பும் சித்திக்குமென்றே நம்பலாம்.

**கல்வியின் அவசியம் " செங்குந்தர் கல்வி நிதி."**

நெடுநாளாகப் பின்னடைந்து கிடந்த நமது சமூகத்தை முன்னேற்றப் படிகளில் கைதூக்கி விடுவது கல்வியே யாகும் என்னும் உண்மையானது மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்த பிரதிநிதிகள் அனைவராலும் அங்கீகரிக்கப் பெற்றிருக்கின்றது. இக்கல்வி சிறுவர்களிடையிலும், சிறுமியர்களிடையிலும் பரவுதலோடு, வயது முதிர்ந்த ஆண் பெண்களிடையிலும் பரவவேண்டுவது வெகு அவசியம். இவ்விதமாகப் பரவவேண்டிய கல்வி, தற்கால நாகரிகத்திற்கும், வியாபார அனுபவத்திற்கும், இராஜீய நோக்கங்களுக்கும் இயைந்ததாக இருத்தல்வேண்டும் என்பதும் யாவரும் அங்கீகரிப்பதே. இதனை மேற்குறிப்பிட்டுள்ள நோக்கங்களுக் கிணங்க நம்மவரிடையே வியாபிக்கச் செய்வது நமது குலத்தொண்டர்களின் பெருங் கடனாகும். அக்கடனையும் எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாக நாம் ஆற்றுகின்றேமோ அவ்வளவுக் கவ்வளவு சீக்கிரமாக நமது குலம் மேன்மையுறும்.

124408

ஆகவேதான் நமது தலைச்சங்கத்தின் ஆதரவில் கடந்த மகாநாட்டின்கண் செங்குந்தர் கல்வி நிதி என்பது ஆரம்பிக்கப் பெற்றிருக்கின்றது. இதற்கு மகாநாட்டுப் பந்தலிலேயே ஏறக்குறைய 1700 ரூபாய்கள் வாக்களிக்கப் பெற்றிருக்கின்றன. தலைச்சங்கத்தின் சேமநிதியிலிருந்தும் இதற்கு 1000 ரூபாய்கள் சேர்க்கப்பட் டிருக்கின்றன. இவையன்றிப் பல செங்குந்த பிரபுக்கள் நிதிக்குப் பெரும் பணம் அனுப்புவதாக எம்மிடம் நேரில் உறுதி கூறியிருக்கின்றனர். வியாபாரிகளும் இச்செங்குந்தர் கல்வி நிதிக்குச் சாசுவதமான மகமை ஏற்பாடுகளைச் செய்துகொண்டு வருகின்றனர். தலைச்சங்கத்தினரும் சித்திரை மாதம் தொடங்கிச் செங்குந்தர் கல்விநிதிக்குப் பெரும் பொருள் திரட்டத் தீவிரப் பிரசாரம் செய்யப் புறப்படப் போகின்றனர். அவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்போரும், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய முன்வருவோரும், அவர்களோடு ஊர் ஊராகச் சென்று அருந்தொண்டாற்ற எண்ணமுடையோரும் பலர் பல ஜில்லாக்களிலுமிருந்து உற்சாகமூட்டும் கடிதங்கள் எழுதிக்கொண்டிருக்கின்றனர். தலைச் சங்கத்தினரின் தூண்டுதலின்றியே ஏற்படுத்தப் பெறும் செங்குந்தர் சங்கங்களும், கல்விநிதிக்கு ஒதுக்கி வைக்கப் பெறும் தரும மகமைகளும் எதிர்பாராத இடங்களிலும் தோன்றி யிருக்கின்றன. நமது சமூகத்திற்கு இம்முதலாவது மகாநாடு அளித்துள்ள ஊக்கமும், உவகையும், மனவெழுச்சியும், மதிப்பும் அளவிடற்பாலன வல்ல. இவ்விதம் கிளைத்துள்ள முன்னேற்ற விருட்சம் பசுந்தளிர் விட்டு, நறுமலர் நிறைந்து, தீங்கனி பயக்க இறைவன் அருள் புரிவாராக.

# செங்குந்தர் கல்வி நிதி

இக் கல்வி நிதி நமது முதலாவது மகாநாட்டின்கண் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் ஆதரவில் நம்மவர் கல்வி யபிவிருத்திக்காக ஏற்படுத்தப்பட்டது.

இதற்கு அன்பர்கள் மகாநாட்டின்கண் நிறைவேறிய தீர்மானத்தின்படி

1. மகமை ஏற்பாடு செய்யவும்,
2. உண்டி வசூலித்து அனுப்பவும்,
3. சடங்குகளில் கட்டணம் செலுத்தவும்,
4. ஊர்ப் பொதுப் பணங்களிலிருந்து பங்கு தரவும்
5. நன்கொடை அளிக்கவும்

வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர்.

ம. சண்முகசுந்தர முதலியார்,
பி. செ. மாணிக்கவாசக முதலியார்,
தலைச்சங்க அமைச்சர்கள்.

☞ மேற்படி தரும நிதிக்கு நமது தலைச்சங்கத்தின் ஆதரவில் ஒரு லாட்டரி போடப்படும். இதன் விவரத்தை அடுத்த சஞ்சிகையிலும் தனித் துண்டுப் பிரசுரங்களிலும் அன்பர்கள் அறிந்துகொள்ளலாம்.



17 APR 1929

## ஒழுக்கப் பகுதி

### நமது தலைவர் கட்டுரை.

மானிட வாழ்க்கை இனிது நடைபெறவும், மனிதப் பிறவியினாலாக வேண்டிய வேலை முற்றுப் பெறவும், அதற்கு மேலாயதொரு நிலையை யடைவதற்காகவும் அமைந்துள்ள அல்லது அமைத்துக் கொள்ளும் வழியே ஒழுக்கமாகும்.

ஒழுகுதல், நடத்தல், என்பது அசைந்து செல்லும் உயிர்களுக் கெல்லாம் பொதுவாகவுளதெனினும், மிருகாதிகளுக்கு ஒழுக்கமென்பது இல்லை. அவைகளின் வாழ்க்கை எவ்விதமாக நடைபெறுகிற தென்பதை நோக்குவோமானால், இயற்கையா யமைந்துள்ள (அல்லது, கடவுளா லமைக்கப்பட்டுள்ள வென்றும் வைத்துக் கொள்ளலாம்) சில சட்டங்களுக் குட்பட்டு அவைகளை யறியாமலே மிருகங்கள் நடந்துக் கொள்ளுகின்றன. பசித்தால் இரைதேடி உண்டு உறங்கும். உருசிக்காக உணவு தேடுவதில்லை. வருக்க விருத்திக்காக சேர்க்கைக்குட்படுவ தன்றி சிறு இன்ப நுகர்ச்சிக்காக உடல் சேர்க்கை செய்வதில்லை. இம்மாதிரியான பொதுச் சட்டங்கள் தான் மிருக வாழ்க்கையில் முக்கியமாகக் காணப்படுகின்றன. இதோடு சிறு பகுத்தறிவும் அவைகளிடத்தே காண்கின்றேம். உணவு முதலியவைகளில் பகுத்தறிந்து தங்களுக்கு வேண்டியவைகளையே கொள்ளுகின்றன. தங்கள் குழவிகளிடம் அன்பு பாராட்டி அவைகளைக் காப்பாற்றச் சில சமயங்களில் தங்கள் உயிரையும் கொடுக்கின்றன. இன்னும் மனிதர்களோ டியைந்து வாழும் யானை, நாய், குதிரை முதலியவைகள் தங்கள் எசமானிடம் காட்டுகிற பற்றுதலானது மனிதர்களிடையிலேயும் போற்றப்படும் அருங்குணமாக விளங்குகிறது.

இத்தனை விசேடங்க ளிருந்தும் மிருகாதிகளுக்கு ஒழுக்கம் உண்டென்று நாம் சொல்லுகிறேமில்லை. ஒழுக்க மென்பது மனித வருக்கத்திற்கே உரியது என்று கொள்ளுகிறேமல்லவா? ஆகையால் விலங்குகளினின்றும் மனிதர்களை வேறுபடுத்தி இவர்களுக்கு உயர்வை யளிப்பது ஒழுக்க மென்றே சொல்ல வேண்டி யிருக்கிறது. பகுத்தறிவு வுள்ளதாலேயே மனிதன் சிறந்து விளங்குகிறானில்லை. இப்படிச் சொல்வது நமக்கெல்லாம் சற்று மனம் புண்படக் கூடியதே. ஆனால் என் செய்வது? மிருகங்களிடம் விளங்கும் சில நற்குணங்கள் முதலாய நம்மிடம் காணப்பட வில்லையானால், நம்மை எவ்வகையிலே உயர்த்திச் சொல்லிக் கொள்வது? இது நியாயத்திற் கொத்ததா? பாருங்கள். இம்மாதிரியான வார்த்தைகள் நண்பர்களுக்குப் பிடியாது? உண்மையை மறைத்து, நமக்குக் கிடைத்திருக்கிற மனிதப் பிறவி உயர்ந்தது, நாமே உயிர் வருக்கங்களிற் சிறந்தவர்கள், என்பதாக நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளும் மொழிகளானால் நிரம்ப இன்பந் தருவனவாக விருக்கும்.

மனித உருவ மிருந்தால் மாத்திரம் போதாது உடலமைப்பினால் மனிதனும் சில விலங்குகளும் பொதுவாக ஒத்திருக்கின்றே மென்பது மறக்க முடியாத வுண்மை யாகும்.

ஆகையால் உடலால, உணவால், உறக்கத்தால், உடற் சேர்க்கையால் (பகுத்தறிவாலென்றும் சேர்த்துக் கொள்ளலாம்) மனிதனும் விலங்கும் ஒத்திருக்கின்றார்கள்.

" ஆராய்ந்தறிதல " என்னும் உயிர் அடையாளமே மனிதனை வேறு படுத்துகிறது. இவ்வறிவின்றேல், இவ்வறிவு உண்டாகிற வரைக்கும், மனிதனும் விலங்கும ஒன்று என்பதாகக் கொளவதே, ஒழுக்க மென்பதனை நாம் ஆராய்வதற்கு இடந்தரக் கூடியதா யிருக்கும். அன்றேல வீண ஆக்ஷேபனைகள் உண்டாகலாம.

ஆனது பற்றியே முதன் முதலில் ஒழுக்கமாவது, மானிட வாழ்க்கை இனிது நடைபெறவும, மனிதப்பிறவியினாலாக வேணடிய வேலை முற்றுப பெறவும அதற்கு மேலாயதோர் நிலையை யடைவதற்காகவும அமைந்துள்ள அல்லது அமைத்துக் கொள்ளும் வழி யென்பதாகக் குறிப்பிடப்பட்டது.

இதில் மூன்று பகுதிகள் உள: இன்பவாழ்க்கை நடத்தல, மனித வருக்க வேலையைச் செய்தல், அதற்கு மேலாயதோர் உயர் நிலையை யடைதல, இம்மூன்றிற்கும் ஒழுக்கம் வேண்டிய தென்பதே. அதாவது ஒழுக்கமென்ற ஒன்றினால் தான இன்ப வாழ்க்கை நடத்தலாம்; மனிதப் பிறவியின் நோக்கமாகிற வேலையைச்

செய்து முடிக்கலாம். அப்படி முடிப்பதால் இம்மனித வருக்கத்திற்கு மேலானதோர் நிலையை யடையலாம்.

இவ்வகையாகப் பகுத்து நமது ஆராய்ச்சி நன்கு நடைபெறுவதற்கேயன்றி, இப்படித்தான் பகுதி பகுதியாய் ஒன்றன்பின் னொன்றாய் ஒழுக்கம் அமைந்திருக்க வேண்டுமெனக் கொள்ளுதல் சில சமயங்களில் சந்தேகத்தையும் விபரீதத்தையும் உண்டுபண்ணிவிடும்.

நம் வாழ்க்கை இனிது நடைபெற வேண்டுவதற்கு எந்த வெந்த விதமாக நாம் நடந்து கொள்ள வேண்டுமோ அந்தவந்த விதமான ஏற்பாடுக ளெல்லாம் ஒழுக்கமே யாகும். இதனால் நமக்குப் பிரியமானபடி நடந்து கொள்ளலாம் 'பார்த்தீர்களா? இந்த நாஸ்திக முடிவிற்கு வருவதற்காகத்தான் இத்தனை தூரம் வளைந்து வளைந்து சென்று நம்மை யிழுத்து வந்தார் இந்த ஆசாமி!' யென்பதாக நுனியில் மேயும் போராற்றலையுடைய சில நண்பர்கள் வாய் கூசாது சொல்லி விடுவார்கள். அவர்களுக்கும் யாம் விடையளிப்பது: "ஐயா, நீர் முன்னதாகவே எங்கள் மீது ஒரு அபிப்பிராயத்தை ஆதாரமின்றி யேற்படுத்திக் கொண்டு, எம்மிடமிருந் தெழும் அபிப்பிராயங்களை அதற்குத் தக்கவாறு அமைத்துக் கொள்ளுகிறீர்களே யன்றி நிதானித்து ஆராய்ந்து பார்த்தீர்களேயானால் அப்படிப் பதட்டமாய்ச் சொல்லமாட்டீர்கள்" ளென்பதே யாகும்.

வாழ்க்கை யினிது நடைபெறுவ தென்றால், தூலமாக நமதுடலும் அதனுள் வீடுபட்டு நிற்கும் உயிரும் இன்பம் நுகரவேண்டும். உடல் நிலையும் உயிர் நிலையும் கோணாமல், குன்றாம லிருப்பதே யின்ப மனுபவித்தலின் பயனாகும். அன்றி நாக்கு ருசிக்காகச் சாப்பிட்டுவிட்டு வயிற்று வலிப்படுவதும், புத்திமயக்கிற்காக அருந்திவிட்டு பிதற்றுவதும் நோய் வாய்ப்பட்டு நிற்பதும் இன்ப மனுவித்த லாகாது. பசி நோய் நீங்குவதற்கும், உயிர் நோயாகிற மயக்கம் தெளிவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளே இன்பந்தரக் கூடியவைகள். சொறியச் சொறிய அதிகமாகும் தினவுபோல அருந்தவருந்த உடலைக் கெடுப்பதும் பொருந்தப் பொருந்த உயிரைக் குறைப்பதுமாக வாழ்வது இன்ப வாழ்வல்ல வென்பதை நன்குணர வேண்டும். அப்படி யுணராத வரையில் நாமும் விலங்குகளே யாவோம்; விலங்குகளினும் கடையர்களாவோம் ஏன்? சிற்றின்ப நுகர்ச்சிக்காக நாம் அமைக்கின்ற அமைப்புக்கள் விலங்குகளிடையே காண்கிலம். ஆகையால் அவைகளுக்கு நம்மைப் போல தொல்லைக ளில்லாமலே இயற்கை வாழ்க்கை நன்கு நடைபெறுகிறது.

இம்முறையில் விலங்கினும் நாம் இழிந்தவர்களா என்பதை உணர்ந்தோமானால் அப்போது நாம் மனிதர்களாகிறோம். மனிதனுடைய அடையாளம் இதுவேயாகும். (தொடரும்)

ஆ. வே. முத்தைய முதலியார், பி.ஏ., பி.எல்.

---

வர்த்தமானங்கள்.

**முனிவர் உடல் நிலை.**

நமது குலப் பெரியாராகிய ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்களுக்கு முதுகில் இடது பக்கம் கட்டி கண்டிருப்பதால் உடல்மெலிவு ஏற்பட்டுள்ளது சிறந்தவைத்தியர்களால் கவனிக்கப்படுகிறார் அவர் உடல் நலங் கருதி இன்னும் சின்னாட்களில் பெங்களூருக்குச் செல்லுவார்.

**குன்றத்தூர் திருநாகேஸ்வரத்தில்.**

ஸ்ரீ காமாக்ஷியம்பாள் சமேத ஸ்ரீ நாகேஸ்வாருக்குச் சுக்கில ஞு சித்திரை மீ 2 தேதி (14-4-29) முதல் சித்திரை மீ 12௳ (24 4-29)வரை பிரதி தினமும் காலை மாலை உற்சவம் நடைபெரும். (16-4-29) காலை அதிகாரநந்தி சேவையும்,(18-4-29)இரவு ரிஷபவாகனக்காக்ஷியும், (20-4-29) காலை இரதோற்சவமும், மாலை ரதத்திலிருந்து கோயிலுக்குளெழுந்தருளுதலும் நடைபெரும். தேவார பாராயணம் நடைபெறும்.

**சைதாப்பேட்டை**

**திருக்காரணீஸ்வரர் தேவாலய பிரமோற்சவம்.**

சைதாப்பேட்டைத் திருக்காரணியில் சுக்கில ஞு சித்திரை மீ 2 தேதி (14-4-29) ஞாயிற்றுக்கிழமை முதல் (24-4-29) வரை பிரதிதினமும் பகல் இரவு இரண்டு வேளையும் வாகனாதிகளுடன் பஞ்சமூர்த்தி உற்சவம் நடைபெரும். (18-4-29) இரவு வெள்ளி இரஷபவாகன சேவையும் (21-4-29) அறுபான்மும்மை நாயன்மார் உர்சவமும் நடைபெரும். பிரதி தினத்திலும் இரவு 9½-மணிக்குத் திருவாளர் T. M. அப்பாதுரை ஆச்சாரி அவர்களால் இன்னிசைக் கருவிகளுடன் தேவாரபாராயணம் நடைபெரும்.

**மதிப்புரை.**

ஸ்ரீ வள்ளிகாந்தன் தோத்திரமஞ்சரி என்னும் இவ்வரிய புத்தகம் நம்பார்வைக்குக் கிடைத்தது. அதை முற்றும் கண்டு மகிழ்ந்தோம். பழைய பெருமபுலவர்களால் ஸ்ரீ முருகப்பெருமானை வாயாரப்புகழ்ந்து ஓதப்பெற்ற திருப்பாடல்களிலிருந்து திரட்டப்பட்ட சில அடங்கிய நூலாகிய இது முருகனை வழிபடுகின்ற மெய்யன்பர்களது நியானத்திற்கு உரியதாகும். மிக்க அழகிய தாளில் அச்சிடப்பட் டிருக்கின்றது. இதைத் திரட்டி வெளியிட்டவர் திருமயிலை திருவாளர் கி. வை. துரைக்கண்ணுப் பிள்ளை என்பவராவர். இதன் விலை அணா எட்டு (0—8—0)

கிடைக்குமிடம்:—சுந்தர மூர்த்திப் பிள்ளை,
2 நெ. கந்தப்ப முதலித்தெரு, கிருஷ்ணாம்பேட்டை,
திருவல்லிக்கேணி போஸ்டு, சென்னை.



# தமிழ் நூலாராய்ச்சி

## திருமுருகாற்றுப்படை.

(கூ௱௭௭ — பக்கத் தொடர்ச்சி.)

இங்ஙனம் நக்கீரர் முருகனது தோற்றத்தைத் தெரித்தவகையால் சிற்றறிவும் சிறுதொழிலும் உடைய யாம் உணரத்தக்கது ஒன்று உண்டு. சிந்திப்புழி அது முருகனுக்கும் இயற்கைக்கு முள்ள தொடர்பு என்பது தேற்றம்.

அஃதாயின் முருகனுக்கும் இயற்கைக்கு முள்ள தொடர்பு தானென்னை? வேண்டிடின் அதனை ஒரு சிறிது கூறுதும்.

நுண்மாண் நுழைபுலமுடையீர்! உலகில் தோன்றும் பொருள்தான் இருவகைத்து. அவைதான் கட்புலனாகும் பொருள் என்றும் கட்புலனாகாப்பொருள் என்றும் பகுக்கப்படும். கட்புலனாகும் பொருளைப் பருப்பொருள் என்றும் (Concrete) கட்புலனாகாப் பொருளை நுண்பொருள் என்றும் (Abstract) அறிவியல் நூல் பகரா நிற்கும். இவ்விரண்டு பொருடனில் அழகு என்பது நுண்பொருளின்பாற் படுமெனப. என்னை? அழகு கட்புலனாகாமையானென்க.

இக்கட்புலனாகாத நுண் பொருளை உடைய வனாக மிளிர்கின்ற முருகன் அந்த நுண்ணிய உள்பொருளை இயற்கை வாயிலாக உலகிற்கு உதவுகின்றான். இயற்கை அன்னையே அழியா அழகினையுடைய முருகனுக்கு உடலாக அமைகின்றாள். எனவே, முருகன் இயற்கை முகத்தானே உயிர்கட்குச் செய்து வரூஉம் உறுதுணை ஓரற்பாற்று. முருகன் தனது அழகினை இயற்கையில் பலப்பல வடிவங்களாகக் காட்டி உலகத்தைத்தன் மருங்கு ஈர்க்கின்றான். ஆகவே யாம் இயற்கையில் காண்குறாஉம் அழகுடைப் பொருளெல்லாம் முருகனது அழகை அவனருளால் பெற்றனவேயன்றி வேறில்லை. எவ்வெப் பொருளில் அழகு காணப்படுகிறதோ அவ்வப் பொருளில் முருகன் உள்ளுறையாக வீற்றிருக்கின்றான் என்பது அங்கைக நெல்லியாம். இப்பெற்றித்தாய முருகனுக்கும் இயற்கைக்கு முள்ள தொடர்புபற்றி அஃதே இஃதென்றும், இஃதே அஃதென்றும் கொள்ளலாமென ஆன்றோர் கருதுப. அன்றியும் இயற்கையாகிய அவனது அழியா அழகினை அவனருளாலன்றி உயிர்கள் துய்த்தலரிது; காண்டலுமரிது. அதனை நீக்குவான் நம்மையாளுடை யண்ணல் நாடொறும் நாடொறும் இயற்கை வாயிலாகக் காட்சி அளிக்கின்றான்; பொழுது புலர்ந்ததும் இயற்கையில் படிந்து நின்று தான் மயில்மிசை தோன்றுவது போன்று நீலக்கடலினின்றும் செஞ்ஞாயிறாக எழுகின்றான். அவ்வாறு செஞ்ஞாயிறாகக் காலையில் தோன்றுவது உலகம் உய்தற் பொருட்டாகலின் நக்கீரர் முதலில் "உலகம் உவப்ப" என்று கழறுவாராயினர். இவ்வுண்மையை உள்ளுந்தொறும் உள்ளுந்தொறும் உள்ளொளி பெருகி அழற்படு இழுதென உள்ளம் உருகுமென்பதும், நவிறொறும் நவிறொறும் நாச்சுவை பெருகுமென்பதும், பயிறொறும் பயிறொறும் பேரின்பம் தோன்றுமென்பதும் திண்ணம்.

இதுகாறும் முருகனுக்கும் இயற்கைக்குமுள்ள தொடர்பை ஒருவாறு மேலே சுட்டினோம். ஆனால் முருகனுக்கும் இயற்கைக்கு முளதாய தொடர்பினால் உயிர்களால் அறியக்கிடப்பதென்னை என்பதைச் சுட்டிற்றிலம். அதனை ஈண்டு ஒரு சிறிது சுட்டுதும்.

முருகன் குணங்குறி கடந்தவன்; அழியா அழகினை உடையவன். "எண்ணிய எண்ணியாங்கு எய்துப" என்ற ஆன்றமொழிக்கு இணங்கத் தற்சேர்ந்தவர்க்கு வேண்டியவற்றை வேண்டியவாறு நல்கும் பெருமைசால் நல்லறம் பூண்டவன். உலகத்தைத் தன் பொருட்டாதல் தேவர்களின் பொருட்டாதல் நடாத்தும் கருத்துடையவனல்லன். புலரியில் எழுந்து புண்ணியப் புனலாடி புனைவன புனைந்து புத்தியைத் தன்பால் செலுத்தியவற்கு வீடளிக்கும் பெருங் கருணையங் கடலாய், இன்னமுதாய் தோன்றுகின்றவன். அவன் இயற்கை யழகில் ஒன்றி நின்று தினே தினே நமக்குத் திருவருள் புரிவது, பூமியில் வாழ் மாந்தர்க்குத் தான் யாண்டும் நீக்கமற நிறைந்து நிற்கும்

மெய்ப்பொருள் என்பதனைக் காட்டுவான்வேண்டியும், உயிர்கள் தன்னை அடையவேண்டுமென்பதாகிய ஒன்றினையே குறிக்கோளாகக் கொள்ளல் வேண்டுமென்பதையும் சுட்டுதற் பொருட்டாமென்க. இதுவே இயற்கைக்கும் முருகனுக்குமுள்ள தொடர்பினால் நாம் அறியக்கிடப்பது.

அறியக் கிடப்பது முருகனது இணையடி நீழல் புகுவதேயெனின், அவனை அடைதற்கு நெறி உண்டுகொல்? நோக்குழி உண்டு என்பது யார்க்கும் அளவை. முருகனது கழலடிகளை அடைவதற்குப் பலர் தத்தமக்குத் தோன்றியவாறு பல மார்க்கங்களை வகுத்திருக்கின்றார்கள். அவற்றுள் சில வழிகள் புன்னெறிகளாக அமையும்; சிலவழிகள் செந்நெறிகளாக அமையும். காண்பன வெல்லாம் காட்சியாகா. அங்ஙனே நெறிகளெல்லாம் நெறிகளாகா. ஆகலின் நெறியல்லா நெறியை நெறியென் றெண்ணுதல்இழுக்காதல் காண்க.

இனி, நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையில் கிளந்த செந்நெறி எத்தன்மையது என்பதனை ஆராய்வோம். அவர் வகுத்த நெறியானது மிகவும் அருமையானது; போற்றத் தகுந்தது; சிறு மகாரும் கடைப்பிடித் தொழுகத் தகுந்தது. அவரது நெறியினைக் கடைப் பிடித்ததற்குப் பணச்செலவு வேண்டுவதின்று; வயிறு கிழிய உண்பான் வேண்டி சிலர் தவறுக்கொள்ளும் விரதம் வேண்டுவதின்று. ஆனால் வேண்டப்படுவது என்னை யெனின், முருகனது செந்தாமரைப் பாதங்களை அடைதல் வேண்டும் என்னும் விழுமிய எண்ணம். அவ்வெண்ணமானது அகத்திலும் புறத்திலும் தூய்மையுடைத்தாக அமைதல் வேண்டும்; அஃதின்றேல் பயனுமின்றாம். இவ்வுண்மை

> சேவடிபடருஞ் செம்மலுள்ளமொடு
> நலம்புரிகொள்கைப் புலம்பிரிந்துறையுஞ்
> செலவு நீ நயந்தனையாயில்"

என்னும் நக்கீரரது வாக்கானே அறியப்படும்.

ஆனால் முருகனை எவ்வாறு சிந்திப்பது? பன்னூல் பயின்ற நல்லிசைப் புலவரும், மெய்யன்பருமாகிய நமது நக்கீரனார் சிந்தித்த வண்ணமும், ஐயாண்டளவும் மூங்கைப் பிள்ளையாயிருந்து "கந்தர் கலிவெண்பா" முதலிய தெய்வநூல்களைச் செய்தருளிய குமரகுருபர சுவாமிகள் சிந்தித்த வண்ணமும் சிந்தித்தல் சாலுடைத்து. பிறவாறு சிந்திப்பவர் சிந்திக்க. ஆனால்

> 'நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சமே
> புக்குநிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்
> பொக்கமிக்கவர் பூவு நீருங்கண்டு
> நக்கு நிற்பனவர் தமை நாணியே';

என்றவண்ணம் உள்ளன்புடன் விழிநீர்பெருக்கி அங்கை குவித்து அவனை அகத்தின் கண் அருத்தியுடன் இருத்திவைத்தல் குறிக்கொளற்பாற்று. குமரகுருபர சுவாமிகள் முருகனை வழுத்தியதை அன்னார் பிரபந்தங்களில் கண்டுகொள்க.

இனி நக்கீரர் மெய்யன்புடன் முருகனுக்குப் பூமாலை யென்னும்படி சூட்டிய பாமாலையினின்றும் சிலவற்றை எடுத்து காட்டாக ஈண்டு தருதும். மெய்யன்புடையார் அதனை நன்கு ஓர்க.

"அரும் பெறன் மரபின் பெரும் பெயர் முருக" என்று முருகின் பெயர் வழித்தொன்மைக் குறித்துப் புகழ்ந்ததூஉம்

> "அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
> மணங்கமழ் தெய்வத்தின நலங்காட்டி"

என்றும்,

"குன்ற மெறிந்தாய்" என்ற வெண்பாவில் "என்றும் இளையாய் அழகியாய்" என்றும் முருகனது இளமைப் பருவத்தையும், கடவுட்டன்மையையும் விதந்தோதியதூஉம்,

> "உன்னை யொழிய வொருவரையு நம்புகிலேன்
> பின்னை யொருவரையான் பின் செல்லேன்—பன்னிருகைக்
> கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளா
> வேலப்பா செந்தி வாழ்வே"

என்று தமது உருகிப்பாட்டினை உலகிற்குக் காட்டியதூஉம்,

> "வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
> வாண்டாண்டுறைதலும்"

என்று முருகனது தண்ணளியைத் தெரித்ததூஉம்,

> "அறுவர் பயந்த வாறமர் செல்வ
> வால்கெழு கடவுட் புதல்வ மால்வரை
> மலைமகண் மகனே மாற்றோர் கூற்றே
> வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ



> விழையணி சிறப்பிற் பழையோள் குழவி
> வானோர் வணங்கு விற்றானைத் தலைவ
> மாலை மார்ப நூலறிபுலவ
> செருவிலொருவ பொருவிறன் மள்ள
> வந்தணர் வெறுக்கை யறிந்தோர் சொன்மலை
> மங்கையர் கணவ மைந்த ரேறே
> வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ"

என்று முருகனது பிரதாபத்தை கூறியதூஉம் நக்கீரர் முருகனுக்குத் தொடுத்த பாமாலை என்பது தெளிக.

முருகனது இணையடி நீழல் புகுதல் வேண்டும். புகுதல்வேண்டும் என்றால் பொருளென்னை? அன்னான் சேவடியை அடைதலாய பயனென்கொல்? அன்னான் சேவடி வீடு பயக்கும் பான்மைத்தோ? ஆம், வீடு பயக்கும் பான்மைத்து. அதை,

"சேவடி படரும் செம்மலுள்ளமொடு"

என்ற நக்கீரரது வாய்மொழிக்கு மெச்சும் புலமை நச்சினார்கினியர் தெரித்த உரையானே யாம் உணரற் பாலம். அவர் சேவடி படரும்" என்றதற்கு "திருவடியே வீடாயிருக்கு மென்றும்," அது,

> "'தென்னன் பெருந்துறையான்—காட்டாதன
> வெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்—
> தாட்டாமரை காட்டித் தன் கருணைத்தேன்காட்டி'

என்பதனானும், பிறரும் திருவடியைக் கூறுமாற்றானுமுணர்க" என்று கூறியதனானுமென்க. அன்றியும், காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வரும் பிறவிப் பெருங்கடலை நீந்தி வீட்டுலகில் அழிவின்றி வாழ்வதற்குத் திருவடியே புணையாம் என்பது.

> "மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
> நிலமிசை நீடு வாழ்வார்"

> "அறவாழி யந்தணன்றாள் சேர்ந்தார்க் கல்லாற்
> பிறவாழி நீந்தலரிது"

> "பிறவிப் பெருங் கடல் நீந்துவர் நீந்தா
> ரிறைவனடி சேரா தார்"

என்று திருவள்ளுவர் கூறுவதினானும்

> "அறவியங் கிழவோ னடியிணையாகிய
> பிறவியென்னும் பெருங்கடல் விடூஉ
> மறவி நாவாய்" என்று 'மணி மேகலை'

ஆசிரியர் கூல வாணிகச் சீத்தலைச் சாத்தனார் சாற்றியதினானும் திருவடி அடைதலே வீடடைதலாம் என்பது புலனாம்.

(தொடரும்)

S. கணபதி,
திருநெல்வேலி.

# தமிழ்மொழி ஆராய்ச்சி

## தொடர்மொழி விளக்கம்.

(மித்திரன் தொகுதி 2, 416-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆலங்காட்டுப்பேய்:— இது நந்தண்டமிழ் நாட்டின் பழமொழித் தொடர்களிலொன்று. இது எடுத்துக்காட்டுவமையணியின்பாற்பட்டுப் பழயனூ ராலங்காட்டின் நீலியென்கிற பெண்பேய் பழிக்குப் பழியாகத் தன் புருஷனை வஞ்சித்துக் கொன்ற சாமர்த்திய செய்கையை உலகினர்க் குணர்த்துவ தொரு தொடர்மொழியாமென்க. இதனை நந்தமிழ் மக்கள் ஒருவன் ஒருவேலையில் (காரியத்தில்) அதனைச் சீக்கிரம் செய்யாமல் காலப்போக்குச் செய்கிறபோதும், ஒருவன் ஒரு பொருளைக் களவாடியவிடத்து, கண்டு பிடித்தும் உண்மை சொல்லாமல் மாற்றம் மொழிந்து வீண் காலப்போக்குச் செய்யுமிடத்தும், அவனை நோக்கி "ஆளைக்கண்டு ஏய்க்கிற தாலங்காட்டுப் பேய்" எனப் புகன்று அவனைக் கண்டிக்கவோ தண்டிக்கவோ முயல்கின்றனர். ஆனலித்தகைய சமயத்தில் பிரயோகிக்கப்படு மித்தொடர்மொழியானது எக்காலத்தில் யாரால் எது காரணம் பற்றி அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்பட்ட தென்பனவாதிகளை யூகித்தறிய முற்படுவோர் வெகு சிலரே. ஆகையானிது சம்மந்தமான சரித்திரத்தையும் எதுமுதல் நம்மவர்களால் உலகவழக்கில் கொணரப்பட்ட தென்பதையுங் குறித்து மீண்டாராய்ச்சி செய்யப் புகுவாம்.

"தொண்டைநாடு சான்றோருடைத்து" எனப் புலவர்களால் அணிபெறப் புகழ்ந்து பாடப் பெற்ற தொண்டை நன்னாட்டிலே இறைவன்

துர்க்கையுடன் வாதாடி ஊர்த்துவதாண்டவஞ் செய்தருளிய திவ்யக்ஷேத்திரமாய் விளங்கும் பழையனூர் ஆலங்காட்டிற்கு தெற்கே அருகிலுள்ள ஒரு குக்கிராமத்தில், கல்வியறிவொழுக்கங் கேள்விகளிற் சிறந்த வைசியகுலத் தோன்றலாகிய செட்டி யொருவ ரிருந்தனர். அவர் முற்பிறப்பில் அதிகாமுகனாய்ப் பிறமங்கையரிடஞ் சென்று நட்புற்றிருந்ததை அவர் மனைவி யறிந்து தடுத்துத் தன் வசமாகும்படி வேண்டிய வுபாயங்கள் சொல்லியுங் கேளாமல், அவள் தன்னெண்ணத்திற்கோ ரிடையூறா யிருக்கிறாளென்று கருதிய அவர் அவளை வஞ்சகமாய்க் கொல்ல நினைத்து ஒரு நாள் அடுத்தவூரில் நடக்கும் விழாவை அவளுக்குக்காட்ட விருப்பமுள்ளவர் போலிதங்கூறி, அழைத்துக்கொண்டுபோய் நடுக்காட்டி லவளைக்கொன்று போட்டு, வீடுதிரும்பி எண்ணியாங் கின்புற்றுப் பிறமங்கையரிடஞ் சுகித்துக் காலங்கழிப்பாராயினர். மறுபிறப்பில் இவர் மேற்சொல்லிய செட்டியாராக, அநியாயமாய் மாண்ட அவர் மனைவி யொரு பிசாசாகி (பேய்) அவரைப் பழியாகக் கொலைவாங்கக் கருதி யவ்வாலங்காட்டைச் சார்ந்த வோராரணியத்தின் புராதனமான பெரிய மரமொன்றில் வசித்து வந்தனள். நிற்க, செட்டியாரோ யௌவன பருவமடைந்து வேதவிதிப்படி யொரு கன்னிகையை மணந்து, அவளுடன்கூடி இல்லறமேற்கொண்டு, ஒரு நன்மகவை யீன்று, தன் குலத்தொழிலாகிய வியாபாரத்தொழிலை மேற்கொண்டு சந்தோஷமாய்க் காலங்கழித்து வருநாட்களி லொருநாள், சோதிட சாஸ்திரி யொருவர் மேற்கண்ட செட்டியாரிடஞ் சென்று சோதிடம் பார்த்து "நீ வடதிசை நோக்கிச் சென்றால், அங்கு ஒரு பேயினா லிறப்பாய். அது தவறாது. ஆயினு மப்பேய் உன்னைத் தொடராமலிருக்கும்படி நான் ஒரு மந்திரவாளைத் தருகிறேன். அஃதுன்னிட மிருக்குமளவு மப்பேய் உன்னை அணுகாது" எனக்கூறி தன்னிடமிருந்த மந்திரவாளொன்றை அவனுக்கு நல்கித் தக்க பரிசு பெற்று மீண்டனன். அதுமுதல் அந்தச் செட்டியார் எங்குச் சென்றாலும் அம் மந்திரவாளைக் கைக்கொண்டு செல்லும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர்.

சின்னாள் சென்றபின்னர் நம் செட்டியார் வர்த்தகஞ் செய்யும் பொருட்டுத் தம் சொந்தவூரிலிருந்து வடதிசையிலுள்ள பழையனூர் ஆலங்காட்டுக்குப் போகும் பொழுது, சமயம் பார்த்திருந்த அவர் முற்பிறப்பின் மனைவியாகிய நீலியென்னு மப்பேய் அவரைக்கண்டு பழிக்குப்பழி யுயிர்க்கொலை வாங்கக்கருதி, அவர் மனைவியைப்போலுருவங்கொண்டு, ஆங்கு கிடந்த கள்ளிக்கட்டை யொன்றைக் குழந்தையாக்கி எடுத்துக்கொண்டு செட்டியாரைப் பின்தொடர்ந்துவர, வணிகருஞ் சில குறிகளால் அது பேயென் றுணர்ந்து தம் கையிலிருக்கும் மந்திரவாளின் பலத்தால், சிறிதுமஞ்சாமல் அடுத்த வூரையடைந்து ஆங்குள்ள வேளாளர்களிடத்துப் புகலடைந்தனன். பின்தொடர்ந்து வந்த அப்பேயு மவர்களையண்மி, "ஐயன்மீர்! இவர் என் கணவர். இவர் நெடுநாளாக என்னுடன் பேச்சின்றி விரோதப் பட்டிருக்கின்றார். நான் எவ்வளவு தாழ்மையாக வேண்டிக்கொண்டாலுஞ் சிறிது மிரக்கமற்று வென்னை வெறுக்கின்றார். ஐயோ! இவருக்கு நானென்ன தீங்குசெய்தேன்? ஒன்றுமில்லையே! நீதிமான்களாகிய நீங்கள் அவருக்கு என்மீதிலுள்ள கோபத்தைமாற்றி எதிரிலுள்ள இம்மண்டபத்தில் அவரையு மென்னையும் போக விடுவீர்களாயின், அவருடன் சில வார்த்தைகள் பேசிப் போகின்றேன்." என்று சொன்னது. அதைக் கேட்டுக்கொண்டிருந்த செட்டியார் அவர்களைப் பார்த்து "எந்நாளுங் காப்பாரே வேளாளர்காண்" என்று கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பரால் புகழ்ந்து பாடப்பெற்ற வேளாளப் பிரபுக்களே! இவள் என் மனைவியென்று நீங்கள் நினைக்கவேண்டாம். இது ஒரு கொடிய பேய் இது என்னைக் கொல்லவந்திருக்கிறது. இதன் பேச்சில் நம்பிக்கை வைக்கவேண்டாம். இது நடுகாட்டி லிருந்து என்னைத் தொடர்ந்தது" எனப் புகன்றனர். அதற்கு நீலியாகிய வப்பேய் "ஐயா, இவர் என் கணவரேயாகும் அதை உங்களுக்கு நிச்சயமாய்த் தெரிவிக்கின்றே"னென்று இடுப்பில் வைத்துக்கொண்டிருந்த கள்ளிக்கட்டையாகிய அம்மாயக் குழந்தையைக் கீழேவிட அது எவரிடமுஞ் செல்லாது, செட்டியாரிடஞ் சென்று மேல்விழுந்தேறி விளையாடிற்று. அப்பொழுது இதன் சூட்சியறியா வேளாளர்கள் அவரைப்பார்த்து, "செட்டியாரே! நீர் ஏன் பொய் சொல்லுகிறீர்? உமமுடைய மனைவி துன்படையாமல் இம்மண்டபத்தி லவளுடன் புகுந்து அவளுக்கு ஒரு சமாதானஞ்சொல்லிவாரு"மென்று அனுப்பச் செட்டியார் மந்திரவாளைக் கைப்பிடித்துக்கொண்டு சென்றார். அதைக்



கண்ட நீலி "ஐயா! இவர் கையிலுள்ள கத்தியை நீங்கள் வாங்கிக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால் இவர் என்னைக் கொன்றுவிடுவா"ரென்று கூற, அவர்களதனை நிச்சயமாகவெண்ணி அந்த வாளை வணிகரிடமிருந்து வாங்கிக் கொள்ளவும் வணிகர் பயந்து "ஐயோ! இந்த ஆயுதமிருக்கிறபடியால்தான் நானிதுவரையில் பிழைத்துவந்தேன். இல்லாவிட்டால் இந்த எமன் அப்போதே வாயில்போட்டுக்கொள்ளுமே. வேண்டாம், என்னைக் காப்பாற்றுங்கள்" என்று மிகவும் பணிந்து கேட்டுக்கொள்ளவும் செவிகொடாராய் அவ்வேளாளர்கள் வணிகரை நோக்கி "ஓய் செட்டியாரே, நீர் ஒருவர் இறந்தால் உமக்காக நாங்கள் எழுபதுபேரும் உயிர்விடுகிறோமென்று தேறுதல் வார்த்தைகளைச் சொல்லி யம்மண்டபத்திலுள்ளே யனுப்பினார்கள். அவ்வாறு வணிகர் உட்புகுந்தவளவில் அந்தப் பேய் அவனைக்கிழித்துக் கொன்றுவிட்டு பின்னர் அவ்வணிகரின் தாய்போல் வேஷங்கொண்டு அவ்வேளாளப் பிரபுக்களைப் பார்த்து "உங்களிடத்து வந்த என் மகனை என் செய்தீர்கள்?" என்று கேட்க, அவர்கள் செட்டி வருவாரென்று வெகு நேரங்காத்திருந்தும் அவர் வாராமையால் அம்மண்டபத்தின் கதவைத் திறந்து பார்த்தபொழுது அவ்வணிகருடலங் கிழிக்கப்பட்டு அவர் மாய்ந்திருப்பதைக் கண்டனர். அதுகண்ட அவ்வெழுபதின்மரும் "ஐயகோ என் செய்வோம்? ஆளைக்கண்டு ஏய்த்துவிட்டதே ஆலங்காட்டுப்பேய்" எனக்கூறி தங்கள் அறியாமைக்காக வருந்திக் கொடிய பேயினால் விளைந்த தீங்கென் றுன்னித் தாங்கூறிய மாற்றம் பொய்யாது ஒரு பெரிய குழியைத்தோண்டி அதில் தீமூட்டி யத்தீயினிடமாகக் குதித்து உயிரைக் கொடுத்தார்களென்பது சரித்திரம். இதனை

"மாறுகொடு பழயனூர் நீலி செய்த
வஞ்சனையால் வணிகனுயி ரிழப்பத் தாங்கள்
கூறியசொற் பிழையாது துணிந்து செந்தீக்
குழியிலெழு பதின்மர்களு முழுகிக் கங்கை
ஆறணிசெஞ் சடைத்திருவா லங்காட் டப்ப
ரண்டமுற நிமிர்ந்தாடு மடியின் கீழ்மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை யெம்பாற்
பிரித்தளவிட் டிவளவெனப் பேச லாமோ."

என்னுந் திருத்தொண்டர் புராண வரலாற்றானறிக. எனவே யித்தொடர்மொழியானது பழயனூர் நீலியின் காலமாய அவ்வேளாளப் பிரபுக்களின் காலத்திருந்தே நந்தமிழ்நாட்டில் வழங்கி வரலாயிற்றென்ப.

(தொடரும்.)

வை. ச. இராமலிங்க முதலியார்,
துணைத்தலைவர், சைவசித்தாந்த செங்குந்தர் சமாஜம்,
கண்டாச்சிபுரம்.

## அறிவியல் பகுதி

### வானவில் உண்டாவ தெப்படி?

வானவில்லானது மழைத்திவலைகளால் உண்டாக்கப்படுகிறது; அதாவது ஆகாயத்தில் மிதந்து கொண்டிருக்கிற நீர்த்திவலைகளிலிருந்து எதிரொளிக்கப்படும் சூரிய ஒளியால் உண்டாகிறது. சூரிய ஒளியானது மழைத்துளிகளில் ஊடுருவிச் செல்லும்போது அவற்றின் பின்புறத்தின் உட்பக்கத்திலிருந்து எதிரொளி செய்யப்பட்டு பல பாகங்களாகப் பிரிக்கப்படுகின்றது. அவ்வாறு பிரிக்கப்பட்டவைகளே பல நிறங்களாகத் தோன்றுகின்றன. அப்பல நிறக் கூட்டத்தையே நாம் வானவில் என்கிறோம்.

வெண்ணிற ஒளியானது பல நிறங்களின் கலப்பினால் உண்டாகிறதென்று சென்ற ஆண்டு மித்திரனில் 'ஞாயிற்றின் கதிர்கள்' என்ற தலைப்பின் கீழ்த் தொடர்ச்சியாக வெளிவந்த வியாசத்தில் தெளிவாகத் தெரிவித்திருப்பது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அந்நிறங்களாகிய ஒளி அலைகள் மழைத்திவலைகளில் பிரவேசித்துத் திரும்புகின்ற அளவுக்கு அவை [illegible]த்தியாசப்படுகின்றன. ஆகையால் அவை மழைத்திவலைகளிலிருந்து வெளியே வரும்போது பிரிக்கப்படுகின்றன. அதாவது முன்னர் வெண்ணிறத்தோடிருந்த சூரிய ஒளியானது நீர்த்திவலைகளில் பிரவேசித்துப் பல நிறங்களாக வெளியே வருகின்றது. ஆகையால் நாம் வான

வில்லில் பார்ப்பது சூரிய ஒளியின் இயற்கையான ஏழு நிறங்களே (சப்தவரணங்கள்) யாகும்.

### வானவில் எங்கே முடிகிறது?

வானவில்லின் இரு முனைகளையும் உற்று நோக்குவோமாயின் கடைசியில் பூமியைத் தொடுவதாகத் தோன்றும்; ஆயினும் உண்மையில் வானவில்லிற்கு முடிவே கிடையாது. ஏனெனில் அது ஆகாயத்திலுள்ள சிறு நீர்த்திவலைகளால் உண்டாக்கப்படும் ஒரு தோற்றமேயாகும். இல்லை, அது 'முடிகிறது' என்ற பதப்பிரயோகத்தையே செய்ய வேண்டுமென்றால், அவ்விதமாக நமக்குத் தோன்றும்படி சூரிய ஒளியின் எதிர் ஒளியை உண்டாக்கக்கூடிய நிலைமையிலிருக்கும் நீர்த்திவலைகள் எங்கே முடிவடைகின்றனவோ அங்கேதான் வானவில் முடிகிறதென்று சொல்லவேண்டும். வானவில்லை ஒருவர் பார்த்தபடியே மற்றொருவர் பார்க்க முடியாது. இருவருடைய கண்களும் ஒரே இடத்தில் இருந்தாலொழிய அவ்வாறு பார்க்க முடியாது. நாம் செல்லச்செல்ல வானவில்லும் செல்லுகிறது.

### மழை பெய்தபின் காற்று ஏன் ஆரோக்கியமானதா யிருக்கிறது?

இக்கடாவினுக்கு விடுக்கும் விடைகள் அநேகமிருக்கின்றன. அவற்றுள் ஒன்று நீரானது அநேக பொருள்களைச் சுத்தம் செய்வதுபோலவே மழை காற்றைச் சுத்தம் செய்கிறது என்பதாம். பெரிய நகரங்களிலும் மற்றைய விடங்களிலுமிருந்து உண்டாகி அணுக்களாய்க் காற்றில் கலந்து அதை அசுத்தமாக்கும் புகை முதலியவற்றை, விண்ணிலிருந்து வாயுமண்டலத்தின் மூலமாய் பூமியில் விழும் மழையானது தன்னோடு கீழே கொண்டு வந்து விடுகிறது. இதனால் காற்றில் கலந்திருக்கும் புகை முதலியவற்றின் பரமாணுக்களால் உண்டாகும் கந்தகம் முதலியவற்றின சம்பந்தமான வாயுவின் தீய பாகங்கள் ஒழிக்கப் படுகின்றன. பின்னர் மழையானது பெரும்பாலும் காற்றிலுண்டாகும்மின சாரத் தாக்குதல்களால் பெய்கிறது. இந்த மின்சாரத் தாக்குதல்கள் ஒருவித புதிய நறுமணமுள்ள ஆஸோன் (ozone) என்னும் ஒருவகை பிராணவாயுவை உண்டாக்குவதற்கு அனுகூலமாயிருக்கின்றன. பிறகு மழைத்தெருக்களையும் சாலைகளையும மற்றும் அசுத்தமான இடங்களையும் சுத்தம் செய்து துர்நாற்றப் பொருள்களை அடித்துக்கொண்டு போய்விடுகிறது. பெரிய நகரங்களைச் சுத்தப்படுத்துவதில் மழை எவ்வளவு தோட்டிவேலை செய்கிறதென்பதை அநேகர் சரியாய் உணராது 'நகரங்களுக்கு மழை ஏன்?' என்பதுண்டு. சாதாரணமாய் நம்முடைய மூக்கு பூமிக்கு அருகாமையி லிருக்கிறபடியால் பூமியிலிருந்து கிளம்பும் துர்நாற்றத்தை நாம் மூக்கின்மூலமாய் ஸ்வாசிக்கிறோம். நமது தேகாரோக்கியத்திற்கு விரோதமான இத்தகைய துர்நாற்றங்களைப் போக்கும் பொருட்டுக் கடவுளால் அனுப்பப்பட்ட தெய்வீகத்தோட்டி என்றே மழையைச் சொல்லவேண்டும். 'பட்டணங்களுக்கு மழை ஏன்?' என்பாரை 'நெடுங்கடலும் தண்ணீர்மை குன்றும் தடிந்தெழிலி தான் நல்கா தாகிவிடின்' என்னும் திருக்குறளின் பொருளை உய்த்துணரவேண்டுகின்றேன். மழைக்கே ஆதாரமாயும், என்றும் வற்றாத மாபெருநீர் நிலையாயுமிருக்கிற கடலே மழை தன்னிடத்துப் பெய்யாவிட்டால் தன் வளப்பத்திற் குன்றும் என்றால் நிலத்திலுள்ள பட்டணங்களுக்கு மழை அவசியமென்று சொல்லவும் வேண்டுமோ? நிலப்பரப்பின் அருகிலிருக்கிற நாம் ஸ்வாசிக்கும் காற்றின் மணத்தைவிட பூமிக்கு 500 அல்லது 600 அடி உயரத்திலுள்ள காற்றின் மணம் மிகவும் மாறுபட்டதாகவே இருக்கிறது.

### கிரகணங்கள் எப்படி உண்டாகின்றன?

பண்டைய காலத்தில் கிரகணமென்றால் ஜனங்கள் பயப்படுவதுண்டு. சூரிய கிரகணமென்றால் அதிசயம். நமது தேசமாகிய பரத கண்டத்தில் வசித்த நமது முன்னோர்கள் கிரகணங்களைக் கண்டு பயப்படாவிட்டாலும் உலக நடைபேற்றிற்கு மிகவும் அனுகூலமாயிருக்கிற சூரியனையும் சந்திரனையும் இராகு கேது என்னும் பாம்புகள் விழுங்குவதாக நம்பி இருந்தார்கள். கிரகண சம்பந்தமான நம்பிக்கைகளும் செயல்களும் நம் நாட்டில் பல உண்டு எனபதைக் குறித்து யாவரும் உணர்வர்.

#### சூரிய கிரகணம்.

முழு சூரிய கிரகணம் பிடிப்பது மிகவும் அருமை. முழுகிரணம் பிடிக்கும்போது அதன் பயன் வெகு ஆச்சரியமானதாகவே இருக்கும். திடீரென நடுராத்திரியைப் போல் இருண்டுவிடும்; உடனே குளிர் உண்டாகும்; பனிபெய்யும்; பறவைகள் தங்கள் கூடுகளின சென்றடையும்; மலர்ந்த பூக்களும் சுருங்கிவிடும். இத்தனையும் பட்டப்பகலில் நடக்கும். பிறகு திடீரெனப் பழையபடியே சூரிய ஒளிதோன்றும்.



பூமிக்கும் சூரியனுக்கும் நடுவே சந்திரன் வரும்போது சூரியவொளி பூமியின்மேல் படாதபடி சந்திரன் தடுக்கிறது. இதைத்தான் சூரிய கிரகணமென்கிறோம். அப்போது சூரியன் குறுக்கே செல்லுவதை நாம் நன்றாய்க் காணலாம். சூரிய கிரகணம் அடிக்கடி உண்டாகிறதாயினும் சூரியன் முழுதும் மறையும்படிச் செல்வது மிகவும் அருமை என முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறு நேருங்காலத்தில் ஜனங்கள் பயந்து நடுங்குவது சகசமே. கிரகணம் எந்தக்காலத்தில், உலகத்தின் எந்தப் பாகத்தில், எவ்வளவு நேரம் பிடிக்கும் என்பதை நாம் முன்னரே பஞ்சாங்கம் முதலியவற்றின் மூலமாக அறிந்துகொள்ளுகிறோம். ஆகையால் முழு சூரிய கிரகணம் பிடிப்பதானால் அதை முன்னிட்டுப் பல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. சில நிமிஷங்களில் பிடித்துவிடும் கிரகணத்திற்காகப் பெரும் பொருள் செலவு செய்து அநேக வானசாஸ்திரிகள் தூரதிருஷ்டிக் கண்ணாடி, படமெடுக்கும் பெட்டி முதலிய கருவிகளோடு கடலின் மத்தியிலுள்ள தீவுகளுக்குச் செல்லுகிறார்கள். அக்குறுகிய காலத்தில் நாம் பார்த்து அறிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் அநேகமிருக்கின்றன. ஆகையால் இத்தகைய சந்தர்ப்பங்கள் கிடைப்பது மிகவும் அருமையென்று சொல்லவேண்டும். சமீபத்தில் முழுசூரிய கிரகணம் ஒன்று பிடிக்கப்போவதாய் வான சாஸ்திரிகள் அறிந்து அச்சமயம் தூரதிருஷ்டிக் கண்ணாடி முதலிய கருவிகளைக்கொண்டு சௌகரியமாய்ச் சூரியனைப் பார்க்கக்கூடிய இடம் மலேயா பினாங்கு சிங்கப்பூர் முதலிய தேசம் நாடென எண்ணி ஒவ்வொன்றும் சுமார் 20 டன் பாரமுள்ளதும் விலை மதிக்கப் பெறாததுமான நூற்றுக் கணக்கான கருவிகளை அச்சமயம் அந்நாட்டிற்கு 3000 மைல் தூரத்திற்கப்புறமிருந்தும் கொண்டுபோய் உபயோகிக்க வேண்டிய ஏற்பாடுகள் இப்போது செய்து கொண்டு வருகிறார்கள் எனத் தெரியவருகிறது. இதற்காக அநேக வானசாஸ்திரிகளன்றி, சங்கங்களும் இராப்பகலாக வேலைசெய்து வருகின்றனவாம். அப்போது சூரியன் வெளிப்பரப்பும், சூரிய ஒளியின் ரகசியங்கள் முதலிய பல அரிய விஷயங்களைக் குறித்து முடிவான தீர்மானத்திற்கு வரலாமெனக் கருதியிருக்கிறார்கள். இவற்றை யெல்லாம் அறிந்துகொள்ள சாதகமான காலம் ஒரு மணி நேரமேயாம். அக்குறுகிய காலத்தில் முறை தவறினாலும் மறுபடியும் முயலக் காலமின்மையால் அபாரமான அளவு பிரயாசையும் பயனற்றவை யாகிவிடும். ஆகையால் இதை ஒரு பெரிய சூதாட்டம் போன்றதென்றே சொல்லுகிறார்கள்.

#### சந்திரக்கிரகணம்.

நமது பூமி வருஷத்திற் கொருமுறையாகச் சூரியனைச் சுற்றிக்கொண்டே வருகிறதென்றும் சந்திரன் மாதத்துக்கொரு முறையாகப் பூமியைச் சுற்றிக்கொண்டே வருகிறதென்றும், பூகோளம் வாசித்த ஒவ்வொருவரும் அறிவர். சந்திரன் ஒளியுள்ளதாகத் தோன்றினும் உண்மையில் அதற்கு ஒளியே கிடையாது. இயற்கையாய் ஒளியில்லா திருந்தும் சூரியன் விளக்கு முதலியவற்றைப்போன்ற ஒளியுள்ள பொருள்கள் தன்னிடத்து வீசும் ஒளியை எதிரொளி செய்யும் கண்ணாடிபோன்றதேயாகும் சந்திரன். ஆகையால் சந்திரன்மீது சூரிய ஒளி படும்போது அவ்வொளியைச் சந்திரன் முகக்கண்ணாடியைப்போல் எதிரொளி செய்கிறது. அவ்வெதிரொளி பூமியின் மேல் படும்போது அதை நாம் சந்திர ஒளி அல்லது நிலவொளி என்கிறோம். சூரியனுக்கும் சந்திரனுக்கும் நடுவே பூமியிருக்கும் காலமாகிய பௌர்ணமியில் சூரியனுடைய ஒளி சந்திரன் மீது வீழ்ந்து எதிரொளி செய்யப்படாதபடி பூமி நேராய்க் குறுக்கே நிற்குமாயின் பூமியின் நிழலால் சந்திரன் ஒளியற்று நிற்கின்றது. இதையே சந்திரக் கிரகணமென்கிறோம்.

கிரகணம் ஆரம்பிக்கும்போது கவனித்துப் பார்ப்போமாயின் சந்திரனிடத்தில் ஒரு வட்டமான நிழல் கொஞ்சங் கொஞ்சமாய்க் குறுக்கே செல்வதைக் காண்போம். சில சமயங்களில் அந்நிழல் (பூமியின் நிழல்) ஒரு பாகத்தைத் தொடுகிறது. மற்றுஞ் சில சமயங்களில் முழு சந்திரனையும் சிறிது நேரம் மறைத்து விடுகிறது. அதை நாம் முழு சந்திரக்கிரகணமென்கிறோம். அந்நிழல் வளைவா யிருப்பதால் அது ஒரு பொருளின் நிழலென நாம் சுலபமாய் அறிந்து கொள்ளலாம். பூமி வட்டமாயிருக்கிறதென்பதற்கு இது ஒரு சாக்ஷியாகும்.

கிரகணங்களை அன்னிய தேசத்தார் பின்னால் நேரவிருக்கும் பெருந்தீங்கிற்கு அறிகுறி யென்றும் நம் தேசத்தவர் பாம்பு விழுங்குவதாகவும் நம்பி யிருந்தார்கள். இப்போது உண்மை இதுவென அறிந்துகொண்டோம்.

மா. அ கனகசபை முதலியயர்.

## மாதர் பகுதி

குருவாராஜப் பேட்டையில் 14-12-28-ல் கூடிய செங்குந்த சங்கக்கூட்டத்தில் சுமார் 13 வயதுள்ள ஒரு செங்குந்த மாணவி செய்த உபந்யாசத்தின் சாராம்சம் கீழ்வருமாறு :

### பால்ய விவாகம்.

அக்ராசனருக்கும் மற்றுமுள்ள பெரியோர்களுக்கும் வந்தனம். இச்சிறுமி சொல்லப் போகும் விஷயங்களில் உள்ள குற்றங்களைப் பொறுத்து ஆட்கொள்ளுமாறு மிகவும் வணக்கமாய் வேண்டிக் கொள்ளுகிறேன்.

ஏனெனில், இச்சமயம் ஸ்திரீகளின் கெட்டகால மாகையால் பெண்பால் என்று அலக்ஷியமாய்க் கருதக்கூடும். முற்காலத்து, என்னைப் போலொத்த பெண்மக்கள் அடைந்த எல்லாவித நன்மைகளும் முடிவுபெற்று, கஷ்டங்களை யனுபவிக்கும் இக்காலத்தில் பெண்ணுகிய எனக்கு இக்கூட்டத்தில் பேசவும் உரிமையுண்டோ இல்லையோ என்னும் சந்தேகம் தோன்றுகிறது.

முற்காலத்தில் எங்களுடைய பெருமையை என்னவென்று சொல்வது! அக்காலத்து ஆடவர் எமக்கிடம் காட்டிய பேரன்பையும் சுதந்திரத்தையும் அறியாத ஆடவரும் உண்டோ? பரமசிவன் தன் மனைவியிடத்து தனக்கிருந்த அன்னபக்காட்டும் பொருட்டு, தன் உடலோடு உடலாக அவளைச் சீருடன் பாராட்டி வந்ததாகவும், விஷ்ணுமூர்த்தியோ வென்றால் தனது இருதயத்தின் இருப்பிடமாகிய மார்பில் தன் மனைவியை அணிந்து இல்லறத்தை நடத்தியதாகவும், பிரமனோ சகலவித இன்பத்துக்கும் காரணபூதமாகிய நாவினிடையே வைத்துத்தன் மனைவியை அன்புடன் ஆதரித்ததாகவும் புராணங்கள் கூறும். இவ்விதச் செல்வாக்குக்களில் இப்பொழுது கோடியில் ஒரு பாகமாவது ஸ்திரீகள் அடைந்திருக்கிறார்கள் என்று யாராவது சொல்ல முன் வர முடியுமா? ஐயோ! எமது சுதந்திர மெல்லா மொழிந்த இக்காலத்தை நினைக்க உடல் நடுங்குகின்றது. "நான் கோரிய இவரைத் தவிர மற்றவர்களை மணந்து கொள்ள முடியாது" என்று சொல்லக்கூடிய ஒரு சாவித்திரி இக்காலத்தில் நம் குலத்தில் இருப்பாளேயாயின், அவள் கதி என்ன வாகுமோ தெரியாது. சுயம்வர மண்டபத்தில் தன் மனத்துக்கேற்ற, தன் கண்ணுக்குத் தகுந்த புருடனைத் தெரிந்தெடுக்கும் எமதுகாலம் கடந்துபோனதை நினைத்தால் மனம் உருகுகிறது இன்னும் காந்தர்வ விவாகம் எவ்வாறு ஒளிந்ததோ தெரியாது.

பூர்வாசாரமென்று சொல்லுகின்றனரே தவிர மேற்குறிப்பிட்டுள்ளவைகளெல்லாம் பூர்வாசாரங்களல்லவா? எனக் கருதுவதில்லை அவைகளை இப்போது அநுஷ்டானத்தில் கொண்டுவந்தால் சுகமடைய மாட்டோமா? "புருஷனே தெய்வம்." அது பூர்வாசாரமென்கிறீர். எமது சுதந்திர விஷயத்தில் மாத்திரம் ஏன் பூர்வாசாரம் அனுஷ்டிக்கக் கூடாது. தமயந்தி இப்போது நமது குலத்தில் நடப்பதுபோல அறியாப் பருவத்தில் தன் புருஷனை மணந்துகொண்டாளோ? அன்னப்பறவையின் மூலம் நளனுடைய சரித்திரங்களைத் தெரிந்து கொண்டது பெரிய வயதிலா? சிறிய வயதிலா? சீதை இராமனைக்கோரி இருந்ததும், ருக்மணி கிருஷ்ணனுக்குத் தூது அனுப்பியதும் சிறிய வயதில் தான் என்று சொல்ல முடியுமா? இவ்விஷயங்களையெல்லாம் மூலையில் ஒதுக்கிவிட்டு எம்மை யறியாப் பருவத்திலேயே மனைவிகளாக்க எத்தனிப்பதின் காரணம் தெரியவில்லை. அப்படிச் செய்வதால் எமக்கு உண்டாகும் கஷ்டங்கள் அநேகம் படிப்புக்கோ வசதி கிடையாது. படிக்கவேண்டும் என்கிற வெண்ணம் உண்டாவதற்கு முன்னமே புருஷன், மாமி, மாமன், மைத்துனன் என்கின்ற அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளக் கற்றுக்கொள்ளவேணுமாம். போதுமான படிப்பும் வயதும் இருந்தால் இவ்விஷயங்களில் சரிவர நடந்துகொள்ள சாத்தியப்படுமே தவிர அச்சிறுவயதில் இவைகளை யுணர்வது முடியாத காரியம். நாங்கள் எவ்வளவு சிறியவர்களாக இருந்தபோதிலும் கலியாணமானவுடன் பெரியவர்கள் போலவே மாறுதல்கள் அடையவேண்டி இருக்கிறது. இவைகள் எங்கள் இயற்கை வளர்ச்சிக்கும் அறிவின் அபிவிருத்திக்கும் தடையாக இருக்கின்றன. ஆண்மக்களைப் போலவே பெண்மக்



களுக்கும் கல்வி பயின்று விருத்தியாக வேண்டும் என்னும் நோக்கம் கிடையாது. எதற்காகவோ பெண் பிள்ளைகள் என்றால் ஆடவர்கள் மறுக்கின்றனர்.

ஒரு மாது பிரசவித்தவுடன் என்ன குழந்தையென்று யாராவது விசாரித்தால் பெண்குழந்தையென்று சொல்லிவிட்டால் உடனே "சீ சனியன். ஆண் குழந்தை பிறக்கக்கூடாதா?" என்கிறார்கள். ஆதிமுதல்கொண்டு நாங்கள் தாயின் கர்ப்பத்திலிருந்து உதித்தது முதல் இவ்வளவு வெறுக்கப்படுவதன் காரணம் புலப்படவில்லை.

சில மஹான்கள் மாதர் அநீதி யென்னும் புஸ்தகங்களை யெழுதி அவர்களுடைய கல்விச் செறுக்கால் எங்களை இழிவு படுத்துகின்றனர். இதர வகுப்புக்களில்உள்ள மாதர்கள் கொஞ்சங் கொஞ்சமாய் நாகரிகத்திலும் கல்வியிலும் நடையுடை பாவனை முதலியவைகளிலும் மேன்மை யடைந்துவரும் இக்காலத்தில் கூட நாங்கள் தாழ்ந்திருப்பதைக் கண்டுஆடவர் மனம் இரங்காததைக் காண மிகவும் வருத்தமாய் இருக்கிறது. பெரியோர்களே! கனவான்களே! பிள்ளைகளைப்பெற்ற புண்ணியவான்களே! எங்களையும் உமது ஆண்மக்களைப் போலக் கருதி சம உரிமை தந்து ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். எமது அறிவை அபிவிருத்தி செய்யாவிட்டால் குடும்ப வேலைகளைச் சுகாதார முறைகளில் நாங்கள் நடத்த முடியாது என்பது உங்களுக்கும் புலப்படவில்லையா? அஞ்ஞானம் ஒழிந்து ஞானம் விருத்தி யடைந்தாலொழிய குழந்தைகளைச் சீருடன் வளர்க்கச் சக்தி யில்லாமல் போய் விடும் என்பது உங்களுக்கும் தெரிந்த விஷயம் தான். விவாகம் ஆனவுடன் வயதில் சிறியவர்களாக இருந்த போதிலும் கொண்டவர்கள் எங்களை அடிமைகளாகப் பாவிக்கின்றனர். அதை யொழித்துத் தக்க வழியில் நடப்போமென்றால் அறிவும் வயதும் போதியனவாக இல்லை. ஆகையால்தான் எமது இயற்கை வளர்ச்சி விருத்தியான பிறகு எமது விவாகத்தை நடத்துவீர்களென பிரார்த்திக்கின்றேன்.

விவாகங்களில் எமது அபிப்பிராயங்களையும் அனுசரிக்க வேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் பெண் மக்களைக் கருணையுடன் ரக்ஷிக்குமாறு கருணை கூர்ந்து அருள்புரிவாக.

இத்துடன் எனது [illegible] முடித்துக் கொள்கிறேன். மேற்படி வியாசத்தில் உள்ள குற்றம் குறைகளைப் பொறுத்து ஆட்கொள்ளுமாறு வேண்டுகின்றேன். யாவருக்கும் வந்தனம்.

காமாக்ஷியம்மாள்,
மாணவி

---

### "தமிழர் மணமுறை"

மக்களுள் இல்லற வாழ்க்கை இனிதாகிப் பயன் மிக நடைபெறுவதற்கு மணமுறையானது செவ்வனே அமைதல் வேண்டும். "காதன் மனையாளும் காதலனும் மாறின்றி, தீதில் ஒரு கருமஞ் செய்பவே" என்ற வண்ணம் இல் வாழ்க்கையை நடத்தும் தலைவனும் தலைவியும் ஒத்த மனமுடையவராய் நற்செய்கைகள் செய்யக் கடமைப் பட்டுள்ளார். இருவர்க்கும் உணர்ச்சி யொருமை முதற்கண்ணேயே அமைக்கப்பட்டு வாழ்க்கைப்படுதலே முறையாகும். ஓர் ஆண்மகனும் பெண் மகளும் ஒரு மனப் பான்மை யுடையவராய் காஸ்ாம், ரஜ்ஜு, ரஷி, முதலிய பலவகைப் பொருத்தங்கள் அமையப் பெற்று மணம்புரிதல் பண்டைக் காலப் பழக்க மாகும். இவ்வரிய கருத்துக்களை உள்ளத்தில் பதித்துக் கொள்ளாமல் தலைவன் தலைவியர் கூட்டுறவு ஏற்படுவது நவீன நாகரிகத்தின் பான்மை யாகும்.

தமிழ் மக்களுள், முக்கியமாக நமது செங்குந்த வகைகளில், ஓர் இளைஞனது பெற்றோரும் ஒரு சிறுமியின் தாய் தந்தையரும் தமது சிறுமகாரது மணத்தினை முடிப்பதற்குத் தமது கருத்து ஒப்புமை, செல்வநிலை, வெளி அந்தஸ்து இவற்றையே நாடுகின்றனர். சிறுவர் இருவரும் மணம் என்பது இத்தகையது என்று அறிந்து அதற்குத் தமது இணக்கத்தைத் தெரிவிக்க இயலாத காலத்து அன்னோரது பெற்றோர் மணம் முடிக்கக் கருதின், அவர்கள் தங்கள் கருத் தொற்றுமையையே கருதக் கூடுமே யன்றி மணமக்களது இஃசவினை அறிய முடியாது. குழந்தை மணம் நடக்கும் இடங்களிலெல்லாம் இப் பெருங்குறை நிகழற்பாலதே. மணம் முடிந்து இல்வாழ்க்கை தொடங்கும் போதுதான் அம் மணத்தால் நேரும் குறைபாடுகளை மணமக்கள் உணர்வார்கள். அங்

வுணர்ச்சி பிறந்தகாலத்தே மணமக்கள் தமது தொடர்பை நீக்க முயன்றால், அஃது அவர்களுக்கு எளிதான தொன்றல்ல. இது காரணம் பற்றியே தற்சமயம் சட்ட சபைகளில் விவாதம் நடைபெற்று வரும் ஹபில் சார்டா என்னும் பெரியாரது திட்டமும் (Habil Sarda's Bill on the Age of Marriage), டாக்டர் முத்துலக்ஷிமி அம்மையாரது சீர்திருத்தங்களும், சட்ட சம்மதக் கமிட்டியின் ஆராய்ச்சிகளும் சமூக முன்னேற்றத்திற்குப் பேரணியாகும்.

ஈராயிர மாண்டுகட்கு முந்திய பண்டைக் காலத்தே தமிழகத்தில் வாழ்ந்த நன்மக்கள் தலைவன் தலைவியரது உள்ள ஒற்றுமையால் ஏற்பட்ட மண வாழ்க்கையினையே சிறந்ததெனக் கொண்டாரென்பது அகப்பொருள் இலக்கணங்களாலும், நச்சினார்க்கினியரின் நூல்களினாலும், சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி முதலிய சங்க காவியங்களினின்றும் அறியக்கிடக்கின்றது. இருவருடைய கருத் தொற்றுமையை உணர்வதற்கு ஏதுவாகிய களவொழுக்கம் நிகழாமலும் கற்பெனப்படும் இல்லற வாழ்க்கை நிகழ்ந்திருத்தல் கூடும். இருவருடைய காட்சி முதலியன நிகழ்ந்தபின் அமையும் கற்பொழுக்கம் சிறந்ததென்பது களவியலுரையுள் கூறப்பட்டது. ஒரு பொழிலகத்தேயாதல் அல்லது பிற எவ்விடத்தேயாதல் தலைவன் தலைவி என்பார்க்குக் காட்சி முதலியன நிகழ்ந்து அன்னோரது குறிப்பறிவு முற்றுப்பெற வேண்டுமென்பதே அகப்பொருள் இலக்கணத்திலும் அதன் வழித்தாய இலக்கியங்களிலும் நன்று நாட்டப் பெற்றது. பல பிறவிகளிலும் ஒத்த அன்பினராய் இல்வாழ்க்கை நடத்திய இரண்டு உயிர்கள் இப்பிறப்பிலே ஆணும் பெண்ணுமாக ஒருவரை யொருவர் தலைப்பட்டஞான்று அன்னோரது உழுவலன்பு வெளிப்பட்டு அவ் விருவரையும் ஒற்றுமைப் படுத்தும்.

மணிமேகலை யென்பாள் அருந்துறவு பூண்ட பின்னும், உதயகுமாரன் என்பானைக் காண்டலும், பிறர் ஒருவர் பாலும் செல்லாத அவளுள்ளம் அவன்பாற் சென்றமை எவ்வாறு? அதன்றே உழுவலன்பிற்கு ஒரு சீர்பெறு சான்றாகும்.

கவிச்சக்கிரவர்த்தி யாகிய கம்பர் தமது இசைக்கரங்களால் ஸ்ரீராமனும் ஸ்ரீதேவியும் ஒருவரை யொருவர் கண்டு எவ்வாறு காதலுற்றனர் என்று எடுத்துக் காட்டுகையில்,

"எண்ணரு நலத்தினாளிளைய ணின்றுழி
கண்ணொடு கண்ணினை கவ்வி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினா ளவளு நோக்கினள்"

(கம்பராமாயணம்.)

'இருவரு மாறிப்புக் கிதய மெய்தினர்
ஒருங்கிய இரண்டெற்கு உயிரொன் றாயினர்'

(இராமாயணம்).

எனக் கூறியுள்ளார்.

சேக்கிழார் தமது அரிய காவியத்தில் பரவையாரும் ஸ்ரீ சுந்தரமூர்த்தியைக் காதலுடன் கண்டதைப் பின்வருமாறு விளக்குகின்றார் :

"தண்டரள மணித்தோடுந் தகைத்தோடுங்
கடைபிறவே
கொண்டைநெடுங் கண்வியப்பக் கிளரொளிப்பூ
ணுரவோனை
யண்டர்பிரான் திருவருளா லயலறியா
மனம்விரும்பப்
பண்டைவிதி கடைகூட்டப் பரவையா
ருங்கண்டார்."

(பெரிய புராணம்.)

ஒத்த அன்பிலாதார் தலைப்பட்ட போது கருத்தொற்றுமை நிகழக் காரண மில்லை. கருத்தொற்றுமை யில்லாதவர்கள் மணவாழ்க்கை நிறுத்தும் கருத் தில்லாது தவறிய ஒழுக்கத்தைக் கைக்கொண்டால் அவர்கள் அரசனால் ஒறுக்கப்படுதல் பண்டை வழக்கமாக விருந்தது.

இனி மணம் எவ்வகைப் படுமென்றும், தமிழர் மணமுறைகளின் இலக்கணம் ஆரிய முறைகளினதினின்று எவ்வாறு மாறுபடுகின்றதெனவும் சற்று ஆராய்வோம். சட்ட சாஸ்திரங்களின் மூல விக்ரஹமான மனு என்பார் பண்டை வேதகாலத்தில் மணம் எண்வகைப்படுமெனவும், (Sutras) சூத்ர காவியக்காரர்களாகிய நாரதர், யாஞ்ஞவல்கர், ஆபஸ்தம்பர், வசிஷ்டர் முதலியவர் இன்னும் விரியுமெனவும் கூறியுள்ளார்.

"மறையோர் தோத்து மன்றல் எட்டனுள்" எனவும், "அந்தண ரருமறை மன்றல் எட்டனுள், கந்தருவ வழக்க மென்மனார் புலவர்" என்றும், களவியலுரையுள் காணப்படும் பகுதிகளினின்று ஒருவாறு நிர்ணயிக்க முடிகின்றது. எண்வகை மணத்துள்ளும் சுயம்வரம் ஒன்



றெனத் தெளிவாகக் கூறவியலாது. எண்வகை மணத்தை எழுதிணையுள் அடக்கிக் கூறுவதுமுண்டு.

என்வகை மணமாவதென்ன ?

"அறநிலை யொப்பே பொருள்கோ டெய்வம்
யாழோர் கூட்ட மரும்பொருள் வினையே
யிராக்கதம் பேய்நிலை யென்றிக் கூறிய
மறையோர் மன்ற லெட்டிவை"

(களவியலுரை.)

அறநிலை என்னும் பிரம்ம மணமென்பது சுஅ ஆண்டு நிறைந்த வேதத்தில் நிபுணனும் நன்னெறி கடைப்பிடித் தொழுகியவனுமாகிய மணமகனுக்கு 12 ஆண்டுள்ள மணமகளைத் தத்தம் செய்து மணம் செய்வித்த லாகும். இப்பிரம மணத்தில் தலைவர் தலைவியின் கருத்தொருமை எளிதில் தெரியற்பால தன்று. மணமகன் மணமகளின்பாற் காத லுறுதல்எளிதாயினும், மணமகள் அன்பு காட்டுதல் திண்ண மல்ல. இது கைக்கிளையின்பாற் படும். களவியலுள் தலைவிக்கு 12 ஆண்டும், தலைவனுக்கு 16 ஆண்டுமே அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால், இவ்வகை மணத்தைப் பற்றித் தமிழர் கருத வேண்டியது யாது மில்லை.

பிரசாபத்தியமென்பது மைத்துன வரையிலுள்ளார் பெண் வேண்டிச்சென்றால் மறுது கொடுப்பது. முறைப்பெண் மணம் என்பது இதன் சார்பாக இன்னும் தமிழர்க்குள் உள்ளதே. சிறப்பாகச் செங்குந்த மக்களுள் இத்தீய பழக்கம் வேறூன்றிக் கிடப்பது நமது அறியாமையைக் காட்டுகின்றது. நெருங்கிய இனத்தாருள் மணம் நிகழ்வதும், இரத்த சம்பந்தமுடையோர் சம்பந்தம் செய்துகொள்ளலும் அன்னோர் உடல் வலிக்கு ஏற்றதன்று ; அல்லாமல் சமூக விருத்திக்கும் குடும்ப வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாகும். தலைவன் தலைவி யாவோர் நெருங்கிப் பழகுவதற்கு இருவரது குடும்பத்திற்குமுள்ள உறவு இடங் கொடுத்து நிற்றலின் இஃது ஐந்திணை யொழுக்கத்தோடு ஒருசார் ஒற்றுமையுடையது.

ஆரிடமென்பது ஆரிய முனிவரது முறையாகத் தெரிகின்றது. அது பொற்கொம்பு, பொற்குழம்பு முதலியவற்றை யுடைய பசுவினையும் காளையையும் பெண்ணிற்கு உரிமைப் பொருளாக மணஞ்செய் காலத்தே கொடுப்பது.

தெய்வம் என்னும் மணம் வேள்வியாசிரியர்க்கு வேள்வித் தீமுன் வைத்துப் பெண்ணை மணஞ்செய்து கொடுப்பது. இதுவும் தமிழ் வழக்கமன்று.

காந்தருவமென்பது கந்தருவர்க்குள் இருவர் ஒத்தால் தாமே கூடும் கூட்டமென்று ஆரியத்துள் கூறப்பட்டது. இது கந்தருவர்என்னும் ஒருவகைத் தேவர்க்குள் முதலில் நடைப்பெற்றதாக ஆரியர்கள் கருதுகின்றார்கள். தற்காலத்தில் க்ஷத்திரியற்குள் முக்கியமாக ராஜபுத்திரர்க்குள் (Rajputs) அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றதென்றும், அவ்வித மணம் நீதிஸ்தலவாயிலாகச் சட்ட அங்கீகாரம் பெற்றிருக்கிறதென்றும் 1817, 1850, 1853-ம் ஆண்டுகளிலுள்ள வங்காள சத்தர் கோர்ட்டு தீர்ப்புக்களினின்றும் அறியக்கிடக்கின்றோம். சமீப காலத்தில் ஜஸ்டிஸ் சர் டி. முத்துசாமி அய்யர் K.C.I.E., சர். டி. சதாசிவய்யர் என்னும் நீதிபதிகள் அக்னி ஹோமம் முதலிய மணச் சடங்குகளினால் முறையே நடத்தப்படாத கந்தர்வ மணமானது முறையானதென்றும் அதன்வழியே உண்டாகும் சங்கங்களும் சகல உரிமைகளும் பொருந்தியவைகளென்றும் கூறியுள்ளார் (Brindavan V. Radhamani 12, Madras p. 72)

ஆனால் சென்ற ஆண்டு விவாதிக்கப்பட்ட சின்னகிமிடி ஜமீன்தார் வழக்கில் கந்தர்வமணம் புராதீனமான பழக்க மென்றும், தற்கால முறைகளில் கையாளப் படவில்லை என்றும் ஜஸ்டிஸ் சர். வி. குமாரசாமி சாஸ்திரியாரும் ஜஸ்டிஸ் ரெயிலுதுரையும் அபிப்பிராயப் படுகின்றனர்.

இது தமிழரது ஐந்திணை யொழுக்கத்தோடு ஒத்த தென்று கூறப்பட்டது.

இனி, அசுர மென்பது ஏதாவது வீரச்செய்கை செய்தோருக்கு ஒரு பெண்ணை மணஞ்செய்து கொடுப்பது. விரும்பினார்பால் மாலை சூட்டி மணஞ்செய்யும் சுயவரம் என்னும் முறையும் இதனுள் அடங்கு மென்று வைக்க வேண்டி யிருக்கின்றது. இதுவும் தமிழ்நாட்டில் சிறப்பாக நடைபெறவில்லை.

இராக்கத மென்பது வலிந்து தானே ஒரு பெண்ணைக் கொள்வது. இது தக்கதோர் முறையன்று. அவ்வாறே துயின்றாளைக் கொள்வதும் களித்தாளை அபகரித்தலு மாம். தன்னின் மூத்தாளை மணப்பதும் இதிலடங்கு மென்ப. ஷேக்

ஸ்பியர் என்னும் ஆங்கிலக் கவி அரசும், ஜான்சன் என்ற இலக்கிய நிபுணரும் தங்களினும் முதிர்ந்தவர்களை மணந்ததாகச் சரித்திரங்கள் கூறுகின்றன. பைசாச மணமென்பதே கடைசி வகையாகும்.

தமிழரது மணமுறைகளை ஆரிய மணமுறைகளோடு பிறழக் கொள்ளாது ஆராய்ச்சிசெய்து அவற்றுள் சிறந்த முறைகளையே நமது செங்குந்த மக்கள் கையாளவேண்டும். நமது பெண் மக்களுக்குச் சிறப்பாக இல்லாண்மையும், சமையல் முறையும், குழந்தைகளை வளர்க்கு முறையும், தலைவனோடு ஒத்த கருத்துடையராய்ப் பொருள் முதலியவற்றைச் செட்டாகச் செலவுசெய்து குடும்பத்தைப் பாதுகாக்கும் முறைமையும், வறியார்க்கும் தக்கார்க்கும் தமது அளவுக் கேற்பஉதவும் வண்மையும், அடக்கமும் ஏனைய கலைகளோடு பயிற்றப்படுதல் வேண்டும். முத்தமிழும் கற்பிக்கப் படலாம். காலத்திற்கேற்றவாறு நாகரிக ஒழுக்கங்களையும் அவர்களுக்குக் கற்பித்தல் குற்ற மாகாது. ஆண் மக்களுக்கும் ஏனைய கல்விகளோடு தமது பிழைப்பிற் குரிய ஊதியம் ஈட்டப் பயன்படும் தொழிற்கல்வியும் நல்லொழுக்கமும் பயிற்றப் படுதல் வேண்டும். இருபாலர்க்கும் நன்னெறியும் பயன் மிக்க கல்வியும் கைவந்த பின்னர் அவர்கள் மணவாழ்க்கை புகுதற்பாலர். அன்னோர் மணம் புரியுமுன் காட்சியாலும் கேள்வியாலும் தத்தமக்கு உரியாரைத்தேர்ந்து கொள்ளும் உரிமையுடைய ராதல் வேண்டும்.

ஒத்தகுணம், அழகு, கல்வி முதலியவற்றின் பின்னரே செல்வம் என்பது கருதற்பாலது. மண விழாவிற்கும் நகைகட்கும், பரிசத்திற்கும் பெரும் பொருள் செலவிட்டு நம்மில் பலர் வறியராகின்றனர்.

மணத்தில் சம்பந்திகட்கு உபசாரங்கள், வரிசைகள் முதலிய வெளி யாடம்பரங்கள் காரணமாக உளதாகும் மனவேற்றுமையை அறவே ஒழித்தல்வேண்டும். கணவன் மனைவி இவரது பெற்றோரும் சுற்றத்தாரும் தமது நன்மக்களது கருத் தொருமைபற்றி நிகழும் நல்வாழ்க்கையினையே தமது முழு நோக்கமாகக் கைக்கொள்ள வேண்டும்.

குறுந்தொகையில் காதலன் காதலியாய இருவரது கருத் தொருமையைச் செவிலித் தாயின் வாயிலாக பின்வருமாறு விரித்துள்ளார்: ஒரு தலைவி தனது கணவனுக்கு உணவு செப்பஞ் செய்யுங்காலை, தயிர் கடைந்த கையைக் கழுவுவதன் முன்னே அடுப்பின்மேல் கொதித்துக் கொண்டிருந்த நறுமண மிக்க புளிக் குழம்பு பாகந் தவறிவிடக்கூடாதென்று தெரிந்து, விரைந்து கழுவக் கையோடு நெகிழ்ந்த தனது தூய ஆடையினையும் கட்டிக்கொண்டு அஃது அழுக்குப்படுதலையும் தங்கண்ணுள் தாளிதப்புகை பாய்வதையும் பொருட்படுத்தாது, அக்குழம்பினைச் சமைத்து முடித்துத் தயிரும் அன்னமும் அதுவுங்கலந்து, கணவனுக்கு இட, அவன் அவ்வுணவினை இனிது இனிதெனக் கூறி உண்ணுதலைக் கண்டு, மகிழ்ந்தனள். அதனைக்கண்ட செவிலித்தாய் இருவரது மண வாழ்க்கைச் சிறப்பினைப் பெரிதும் பாராட்டி நற்றாய்க்கு உரைத்தாள். இவ்வரிகளில் காணும் அரும் பெரும் கருத்துக்களை ஈண்டு விரிக்கிற்பெருகுமென விடுத்தோம்.

ஆனதுபற்றி, தமிழரது மணவாழ்க்கை கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்னும் மூவகையொழுக்கங்களையும் அடிப்படையாக வுடையதென்றும், ஆரியரது மணம் எண்வகைப்படுமெனவும், இவைகளில் ஒப்பு, கந்தருவம், அசுரம் ஒரு சில நமது முறையைத்தழுவி நிற்குமெனவும் அறியக்கிடக்கின்றோம். தற்காலம் தமிழருள் நடைபெறும் மணம் பண்டைச் சிறப்பு முறைகளை தழுவிய தல்ல வென்றும், பண்டைக் கொள்கைக் கேற்றவாறு இக்காலத்துத் தமிழ் நன்மக்களுக்கு ஒத்த கல்வி யறிவொழுக்கங்கள் பயிற்றப்படுதல் வேண்டு மென்றும் வற்புறுத்துவது அவசிய மாகும். குறிப்பாக நமது செங்குந்த சமூகத்தில் நவீன மண முறைகள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. ஒரு சாரார் ஆரியர்களைத் தழுவிக் குழந்தை மணம் செய்யவும், மற்றொரு சாரார் செல்வச் சிறப்பினையே நாடவும், வேறு சிலர் தமது இனத்தார்களிலேயே கொண்டும் கொடுத்தும் உஜ்ஜீவிக்கின்றனர். அபிவிருத்தி நோக்கங்களையுடைய எந்தச் சமூகமும் தங்கள் இனத்தாரிலாயினும் தாராளமாக சம்பந்தஞ்செய்து ஜாதியைப் பெருக்கவேண்டும். ஒத்த நலனுடைய ஆடவரும் பெண்டிரும் தத்தம் வாழ்க்கைக் கடமைகளை உணர்ந்து வாழ்க்கைக்குத் தகுதியாகிய பின்னரே தமது கருத் தொருமையையே முதன்மையாகக் கொண்டு பயனில் செயல்களை ஒழித்து இனிய எளிதாய முறையில் தத்தம் மணச் செயல்களை நடத்திக்கொள்ள வேண்டுமென்றும், இதனை இல்லற வாழ்க்கைக் குரிய இருதிறத்தாரும் அவர்களைச் சார்ந்தாரும் போற்றி வாழவேண்டுமென்றும் உய்த்துணர்ந்து கொள்வோமாக. சுபம்.



குறிப்பு:—கைக்கிளை என்பது ஒருதலைக் காமமெனப்படும்;

பெருந்திணை என்பது ஒவ்வாக் காமம்;

இருவரது அன்பினால் பரஸ்பரமாய் நேர்வதே ஐந்திணையாகும்.

வீ. இரத்தின முதலியார், பி.ஏ., பி.எல்.

## சுகாதாரப் பகுதி

### சுகாதாரம்.

இதனைத் தேகசுகம், ஆன்மசுகமென இரு பிரிவாக்கி ஆராய அவாவுகிறேன். "அரிதரிது மானிடராதலரிது" எனப்பட்ட மானிடதேகம் பெற்றபின் வாழ்க்கை வலையில் சிக்கி, ஆசை அலையில் மூழ்காது ஆன்ம சுகத்தையும் செங்குந்தர்கள் தேடுதல்வேண்டும். ஆயின், "சுவற்றை வைத்துக்கொண்டே சித்திர மெழுத வேண்டும்." முற்றுந் துறந்தோரும் காயகற்பந் தேடி யோகசாதனங்களி லீடுபட்டனரெனின் மூவாசையில் முதிர்ந்த நமக்கு இத்தேகத்தி னவசியம் விளங்கும். ஆகையால் தேகசுகத்தை முதலில் கவனித்துப் பிரபல வாழ்க்கை எய்தி, பின் ஆன்ம சுகங் கருதி ஜீவன் முக்தி நிலையினின்றும் விதேகமுக்தி பெற்று ஜனன சாகரத்தினின்றும் அறுமுகவன் அடிக்கரை ஏறவேண்டும்.

ஆனால் "சகல சுகத்திற்கும் காரணமான பணத்தைச் செலவழித்து வலிவைத்தரும் வஸ்துக்களைப் புசித்துக் கொண்டிருப்பின் சுகாதார விதிகளைக் கவனிக்காமலே சுகத்துடன் நீடு வாழலாமே" எனின் அது ஒவ்வாது. பல முயற்சிகளால் திரவியந் தேடுதல் அவசியமே. ஆயினும் சுகாதார ஒழுக்கங்களைக் கையாளாத பெருஞ் செல்வவந்தரும் நோய்வாய்ப் பட்டுத் தங்களுக்குச் செல்வத்தை யனுபவிக்க இடமில்லை எனப் பிரலாபிப்பதைக் காண்கையில் பணம் மட்டும் சுகத்தைக் கொடாதென்பது வலியுறுகிறதன்றோ? எத்துணைச் செல்வமிருப்பினும் குன்ம நோயன்ன பிணிகளால் வருந்துபவனுக்குச் சுகமேயில்லை. திடகாத்திரனோ, செல்வமில்லாவிடினும் தன் உழைப்பினால் சம்பாதித்துச் சந்தோஷமாக ஜீவிக்கிறான். பொருள் சம்பாதித்தற்கும் உடல் நலன் அவசியமாம். பின்னும், "நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்".

ஒருவனைப் பற்றிய நோய் அவன் குடும்பத்தையும் சில குடும்பங்களைப் பற்றியது ஒரு ஊரையும் இனத்தையும் பாழாக்கலாம். இதனால் தேக சுகத்தி னவசியம் புலனும். ஆகவே நம்குலம் விருத்தியடைய வேண்டு மாயின் நம்மவர் கெட்ட பழக்கங்கள் நடக்கைகளை விட்டு நன்னடக்கையையும் நல்லாசாரத்தையும் கைக்கொள்ளுத லவசியம்.

இனிச் சுகாதாரம்பற்றிக் கொள்ள வேண்டியவற்றையும் தள்ள வேண்டியவற்றையும் கவனிப்போம். ஜீவராசிகளுக்கு முதலில் வேண்டியது தூய வாயு. ஆதலால் இறைவர் இதனை நமக்கிலவசமா யருளியதுடன் நாம் வெளிவிடும் கரிபமில வாயுவாகிய கெட்ட வாயுவால் கெடுதி நேராவண்ணம் அதனை உட்கொண்டு காற்றைச் சுத்தமாக்கி நாம் உட்கொள்ளும் பிராணவாயுவைக் கொடுக்கும்படித் தாவரங்களை யுண்டாக்கி அவற்றிற்கும் நமக்கும் பரஸ்பர சம்மந்த மேற்படுத்தி யுள்ளார். இயற்கையானமைந்த விதனை கெடுக்காது வைத் தனுபவித்தல் நம் கடமை. இதைப்பற்றிய விபரத்தை மித்திரனில் சுகாதாரப் பகுதியில் பின் கூறுவோம்.

பிராணிகளுக்கு இரண்டாவதாக வேண்டுவது சுத்த ஜலம். அதனைக் கடவுள் நமக்கு மழையாக அளிக்கிறார். இது முற்காலத்தில் மாத மூன்று தடவைகள் பெய்திருந்து இப்பொழுது நமது நடத்தைகளுக் கேற்ப பல மாதங்களாக பெய்யா திருத்தலாலும் அகாலங்களில் பெய்தலாலும் தீமை விளைகிறது. "மாரி யல்லது காரிய மில்லை." ஜலத்தைக் கெடுத்து உட்கொள்வதாலேயே வாந்தி பேதி முதலிய கொடிய நோய்கள் பரவுவதால் அதனையும் தூயதாய்

வைத்திருத்தலவசியம். இதைப்பற்றியும் பின் பறிக.

பின்னர், தேகத்தைச் சுத்தமாக வைத்திருத்தல்வேண்டும். அதிகாலையில் சுத்தஜலத்தில் தேய்த்துக் குளித்தலால் தோலிலுள்ள துவாரங்கள் அடைபடாமல் தோல் தன் வேலையைச் செய்து அசுத்தங்களை வெளித்தள்ள இயலும். நாம் தெரிந்துகொள்ள வேண்டிய தேகத்தின் அவயவங்கள், அவற்றின் அமைப்பு, தொழிலாகியவற்றைப் பின் கூறுவோம். அடுத்தபடியாகக் கவனிக்க வேண்டுவது உடை. நாம் காலத்திற்கும் சீதோஷ்ண ஸ்திதிக்கும் தக்க உடைகளை அன்றாடம் தோய்த்துலர்த்தி உடுக்கவேண்டும். இனி நம்மில்லங்கள் நற்காற்று, வெளிச்சம் படுபவைகளா யிருப்பதோடு சமய லறை, படுக்கையறை முதலியவை தக்கபடி விசாலமாயும் இருக்கவேண்டும். ஜலதாரை, கம்சு முதலியவையும் தக்க நிலைமையிலிருக்கவேண்டும். இவற்றைப்பற்றியும் பின்வரும்.

சரீராப்பியாசம் பெரிது மவசியமாகும். உபயோகத்திலில்லாத அயக்கருவிகள் துருபிடிப்பது போலவே தக்க உபயோக மின்றேல் நமது அவயவங்களும் தத்தம் வேலைகளைச் சரியே செய்யா. இதை அநேகர் கவனியாதது பரிதாபத்துக்கிடமே. அப்பியாசங்களைச் சொல்ல இங்கு இடமில்லை. இப்பொழுது வெளிவந்துள்ள "சூரிய நமஸ்காரம்" என்னும் ஒரு புத்தகத்தில் கூறப்படும் அப்பியாசம் கருவிகள் முதலிய பிற சகாயங்க ளின்றியே செயக்கூடியதோடு அதனைச் செவ்வனே செய்பவர்க்குப் பலன் திண்ணமாக அளிப்பதுமாகும்.

பிறகு நாம் உட்கொள்ளும் ஆகாரத்தைக் கவனிககவேண்டும். வியாதிகள் வருவதும் போவது மதனாலேயே. கடவுள் நாம் பக்குவப்படுத்தி யுண்டுய்வதற்காகக் காய், கிழங்கு, கீரை, பருப்பு, பழம் முதலியவைகளை அளித்துள்ளார். நமது கருவிகள் சரியே உழைக்க ஆகார மவசியம். ஆனால் அதற்காகக் கண்டதை யுண்டால் வந்தது தண்டனை. இனி எத்தகைய பொருள்களை யுண்டு எத்தகையனவை விலக்க வேண்டுமெனப் பார்ப்போம். ஜீவராசிகளின் அவயவங்கள் சரியே உழைத்து, வேண்டிய உஷ்ணமும் உற்சாகமும் பெற்று, வளரவேண்டும். தேகமோ, தசை, நரம்பு, எலும்பு முதலியவற்று லாகிய ஒரு கூடு. இவைகளை அதிகப்படுத்துபவை அரிசி, கோதுமை, பயறுகள், பருப்புக்கள், கேழ்வரகு முதலிய தானியங்கள், பால், தயிர், நெய், எண்ணெய், சர்க்கரை, கீரைகாய் பழவர்க்கங்கள், உப்பு முதலியன என்பது அனுபோகத்தில் கண்டது. இவற்றின் குணா குணங்களைப்பற்றி நமது 'மித்திரன்' அவ்வப்போது கூறுவான்.

இனி, போஜனத்தில் தள்ளவேண்டியவை எவை? மது மாம்சங்கள் தள்ளவேண்டியவற்றில் முக்கியமானவை. இவற்றை விலக்கத்தான் நல்லுலகம் வேண்டுகிறது. இவற்றின் கெடுதிகளை விரிவாக நம் மித்திரனில் பின் காண்க. மது மாம்சங்களை விலக்கச் சொல்லுவதற்காக மித்திரனை வெறுக்க வேண்டாம். சிறுவர்க்குப் பிணிபோக மருந்துண்பது கஷ்டமே. ஆனால் உண்டபின் சுகமே. பள்ளிக்கேகுவது கஷ்டமென எண்ணும் சில பிள்ளைகளும் அதனால் பின் நலனே எய்துகின்றனர். ஆகையால் மித்திரனையே உன்னி உய்யுங்கள்.

மானிடர் புசிக்கும் மாம்சாதிகளைக் கூறவும் நாவெழவில்லை. கூறு திருக்கவும் முடியாது. ஆடு, மாடு, கோழி, புறா, பன்றி முதலியவற்றைக் கொன்று தின்கிறார்கள். வேறென்னத்தான் பாக்கி? ஆ! என்ன கொடுமை, என்ன பாதகம்! கர்னகடூர வார்த்தைகளுக்கு நா தயங்குகிறது. "கொல்லா விரதமொன்று கொண்டோரே நல்லவர்கள் மற்று அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே" என்றார் தாயுமானவரும். அவர்கள் இன்னோரெனக் கூற அவரும் துணிந்திலர். "ஊனைத்தின்று ஊனைப்பெருக்காமை முன்னினிதே" என்பதும் ஆன்றோர்மொழி. வேறு பல வாக்கியங்களுமுள. ஆடு கோழி முதலியனவும் நம்போன்றவன்றோ? அவையும் நோயுறுவது பிரத்தியக்ஷம். அவற்றின் மாமிசத்தை உண்போர் அவை நல்ல தேகஸ்திதியி லிருந்தவை எனக்கூற இயலுமா? பின்னும் மிருகங்களின் மாமிசத்தில் 'யூரிக் ஆசிட்' (Uric Acid) முதலிய பாஷண வகைக ளிருப்பதால் அவை வியாதிக்குக் காரணமென ஆராய்ந்து மேல்நாட்டாரும் அவற்றைப் புசிக்காது விடுகின்றனர். மற்றும் உயிரற்ற உடலாகிய பிரேதத்தை மானிடர் பிடுங்கித் தின்று வாழ்வது என்ன கேவலம். மாமிச முண்பதால்தான் பல முண் டென்பது மதியீனம். குதிரை முதலிய சாகச பக்ஷணிகள் பலத்தோ டில்லையா? கோதுமை, பருப்பு, கிழங்கு முதலியவற்றில் அத்தகைய பலமுண்டு. மாமிசம் புசிப்போ



ரது தேக மிப்படி எனின் அவர் சாந்தமற்று கோபம், மூர்க்கம் முதலிய, தாமசகுணங்கள் உடையவர்களாகவே இருக்கிறார்கள். விதைக்கேற்ற மரமே பலிதம்.

மதுபானத்தைப் பற்றிக் கவனிப்போம். இதனால் விளையும் கெடுதிகள் எட்டிலடங்கா. கள், சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்கள் அவற்றைக் குடிப்போருக்குக் குடிகாரர் என்னும் ஒரு இழிவான பெயரை யளித்து, அவர்களது புத்தியை மயக்கி, நரம்புகளைத் தளர்த்தி, மூளையைக் கெடுத்து, அவர்களைப் பல நோய்களுக்கும் கெடுதிகளுக்கு மாளாக்கி எமலோகம் சேர்க்கின்றன. மானமுள்ள ஒரு குடியன் வெளியில் தலைகாட்ட நாணுகிறான். அவனது குடும்பம் நசித்துப் போகிறது. இவ்வா றழிந்த குடும்பங்கள் பல. இத்தகைய கேட்டை விளைக்கும் குடியை அறவே ஒழிக்க வேண்டும். அதிலும் அதனைச் சேர்க்கையால் கைக்கொண்ட செங்குந்தர் அடியோடு தொலைக்க வேண்டும். அவர்களதனைச் சேர்க்கையான் கொண்டதுபற்றி யொரு பழங் கதையு முண்டு. தொல் சிறப்பு வாய்ந்த நங்குலம் தாழ் வடைந்தமைக்குக் குடியே ஒரு பெருங் காரணமாம். இதனில் கொஞ்சம் பழகியவனும் இதனை விடுவது துர்லபம். ஆனால் உண்மையாக விட முயல்பவர் அளவில் முதலில் குறைத் துண்டு, பின் ஒருநாள் விட்டொரு நாளுண்டு, பின் சில நாட்கள்விட்டு, இவ்விதமாகப் படிப்படியே முழுதும் விட்டு விடலாம்.

சுகாதாரத்திற்கு மதுவும் மாமிசமும் வேர்ப்புழுக்கள். இவ்விரண்டு துஷ்டர்களும் நெருங்கிய நேயர்கள். மாமிசமின்றி மது இறங்காது. இவற்றைக் கைக்கொண்டவர் பொய்புகன்று, மானமழுங்கி வீடுவாசல் பெண்டுபிள்ளைகளை இழந்து எமபாசத்தில் சீக்கிரமே சிக்குவர். ஆதலால் இவ்விரண்டையும் தீமையுணராது கைக்கொண்ட செங்குந்தரே விட்டொழிமின்.

காசி, இராமேசுவரம் முதலிய ஸ்தலங்கள் சென்று வந்தோர் தமது பந்துமித்திரர்க்குத் தீர்த்தங்களைக் கொண்டு கொடுப்பதுபோல் நமது மகாநாட்டில் மூதறிவாளர்கள் மொழிந்த அமுத மொழிகளாகிய தீர்த்தங்களைத் தமது புத்தியாகிய பாத்திரங்களில் முகந்து சென்று அவற்றைத் தமது ஊரார்க்கும் சுற்றத்தார்க்கும் நண்பர்க்கும் போதிக்க வேண்டுகிறேன். மது மாமிசங்களும் நாளடைவில் தள்ளப்படுமென நம்புகிறேன். நம் குலமுன்னேற்றங் கருதி இச்சிறந்த மகாநாடு போன்றவற்றில் உழைத்தற்குப் பிணி யற்றிருப்ப தவசியம். அதற்குச் சுகாதார விதிகளைக் கவனித்தல் இன்றியமையாதது.

இன்னும் நம்மவரிடையுள்ள கக்ஷிபேதங்களும் நமது முன்னேற்றத்தைத் தடுக்கும் மலைகளாகும். ஆகையால் அவற்றையும் வெட்டியெடுக்கவேண்டும். நாம் பாதரசம் போன்று பார்வைக் கொற்றுமையும் நெருங்கில் வேற்றுமையு முடையவரா யிராது இரும்புபோல் கஷ்டங்களை யெல்லாம் தாங்கி ஒற்றுமையாக வாழவேண்டும்.

சீர் கெழுமிய செங்குந்த குலத்துத்தோன்றிய நாம் தேக சுகத்தைமட்டும் பாராட்டி உலக வாழ்க்கையிலேயே காலங்கழிக்காது, யாவையுந் துறந்த தவமுனிவர்கள் காயகற்பந் தேடித் தேகத்தைச் சரியே வைத்துக்கொண்டு ஆன்ம லாபத்தையும் தேடி யடைவதுபோல் இல்லறவாழ்க்கையில் சுகாதார ஒழுக்கங்களைச் சரியே கவனித்துத் தேகத்தைச் சுகமாக வைத்துக்கொண்டு ஆன்ம சுகத்தையும் தேடி நமது குல குருவாம் குகப் பெருமானாது திருத்தாட்கமலங்கட்கு ஆளாக முயலவேண்டும்.

மா. பரமகுருநாத முதலியார்.

---

தான் வாங்கி வந்து சமைத்த பதார்த்தை வெறுத்துத் தள்ளிய தன் மகளைப் பார்த்துத் தாயார் "என் கண்ணே! நீ அந்தப் பதார்த்தத்தையே விரும்பிச் சாப்பிடும் காலம் ஒன்றுவரும், தெரியுமா?" என்றாள்.

அதற்கு அச்சிறுமி "ஆம், நான் அதற்காகத்தான் இன்று முதலாகவே சேர்த்துவைக்கிறேன் அம்மா" என்று பதில் கூறினாள்.

* * *

தகப்பனார்:—என் குமாரன் எந்தத் துறையிலேனும் பிற்காலத்தில் தலை சிறந்து விளங்குதற் குரிய அறிகுறி பெற்றிருக்கிறானா?

ஆசிரியர்:— ஆம்; ஒரு காலத்தில் அவன் வெகு மிக்க பிரபுவாக விளங்குவான் என்பதற்கு எல்லா வித அறிகுறிகளும் தோன்றுகின்றன. பாடசாலையில் தான் செய்யவேண்டிய கணக்கு முதலிய எல்லாவற்றையும் தனக்குப் பதிலாகச் செய்வதற்கு அநேக பிள்ளைகளைப் பெற்றிருக்கிறான்.

* * *

மணி! நீ எப்பொழுது கல்யாணம் செய்துகொள்ள வேண்டு மென்று நினைக்கின்றாய்?

எப்பொழும் நினைத்துக்கொண்டே யிருக்கின்றேன்

# குலதிலகர் பகுதி

## மந்திரி முதலியார்

மலையாளத்தில் குடியேறியுள்ள செங்குந்தர்களுள் ஒரு சிலர் தவிரப் பெரும்பாலோர் மிக ஏழைகளாகவும் இதர ஜில்லாக்களிலுள்ளவர்களைக் காட்டிலும் கல்வியில் பிற்போக் கடைந்தவர்களாகவும் காணப்படுகிறார்கள். இவர்கள், தமிழ் நாட்டி லிருந்து போய்க் குடியேறினமையாலும் அன்றாடம் வேலை செய்து சம்பாதிக்கும் சொற்ப வருவாயைக் கொண்டு ஜீவிக்க வேண்டியவர்களா யிருக்கிறபடியாலும் போதிய செல்வாக் கின்மையாலும் சாதிக் கொடுமை மிகுந்த மலையாள தேசத்தில் அங்குள்ள மற்றையோரால் கேவலமாக மதிக்கப்படுகிறார்கள். இவர்களுக்குள் மதுபானமும் மாம்ச பக்ஷணமும் சகசமாக இருந்துவருகிறது. பல செங்குந்த சிகாமணிகள் பல தடவைகளில் மதுபானத்தை அறவே ஒழித்துச் சீர்திருத்துவதன்றி அவர்களது பொருளாதார நிலைமையையும் விருத்தி செய்ய வேண்டுமென்று முயன்றதாகவும் தெரிய வருகிறது. அன்னோர் இதன் பொருட்டுச் செய்த ஏற்பாடுகளும், கட்டுப்பாடுகளும் கொஞ்ச காலத்திற்குப் பிறகு, ஜனங்களின் கல்வி இன்மையா லுண்டான அறியாமையாலும்,ஒற்றுமை யின்மையாலும் கெட்டுப் போயின. ஆயினும் அவர்கள் கருதிய முழு பயனைத் தராவிடினும், பயன் தராமற் போனதாகச் சொல்ல முடியாது.

பெரு நோக்கங் கொண்டு சுயநலமற்று உழைத்துவந்த அத்தகைய குலாபிமானிகளுள் திரு. N. மந்திரி முதலியார் என்பவரும் ஒருவர். இவர் மலையாளத்தில் ஒத்தபாலத்தை யடுத்த பாலப்புரம் என்னும் கிராமத்தில் செல்வாக்குள்ள ஒரு செங்குந்த குடும்பத்தில் தோன்றியவர். தமிழ், மலையாளம், ஆங்கிலம் ஆகிய மூன்று பாஷைகளும் கற்று ஒத்தபாலம் ஜில்லா முன்சீப்பு கோர்ட்டில் அலுவல் பார்த்து வந்தவர். இவர் ஒரு செல்வாக்கு நிறைந்த குடும்பத்தில் பிறந்தவரா யிருந்தும் ஏழைகளிடத்தில் பரிவும், மிகுந்த சுருசுருப்பும், ஊக்கமும், விடாமுயற்சியும், வைராக்கியமும், குலாபிமானமும் உடையவர். மலையாளத்துச் செங்குந்தர்கள் பரிதாபகரமான நிலைமையைக் கண்டு சகியாது தமது இளமையிலேயே அவர்களைச் சீர்திருத்தவேண்டுமெனக் கருதி இவர் பெரும் பாடுபட்டு வந்தார்.

இப்பெரியார் செய்யக் கருதிய சீர்திருத்தத்திற்காக மதுவிலக்கு, சுகாதாரம் ஆகிய இரண்டு முறைகளையே முக்கியமாகக் கையாண்டு வந்தார். ஆகையால் தமது எண்ணத்தை நிறை வேற்றும்பொருட்டுச் செங்குந்தர் சங்கங்களையும் வாலிப சங்கங்களையும், ஐக்கிய நாணய சங்கங்களையும் ஸ்தாபித்தார். அடிக்கடி கூட்டங்கள் கூட்டி மதுவிலக்கைப் பற்றியும், சுகாதார முறைகளைப் பற்றியும் உபந்யாசங்கள் செய்தும், வாலிபர்களோடு தெருத் தெருவாகவும், வீடு வீடாகவும் சென்று சுகாதார முறைகளைப்பற்றி ஜனங்களுக்கு அறிவு புகட்டியும் வந்தார். பல தடவைகளில் சொல்லியும் கவனியாது குப்பைகளை அப்புறப் படுத்தாது கண்ட விடங்களில் யாராவது சேர்த்து வைத்திருக்கக் கண்டால் சிறுவர்களோடு தாம் அவற்றை வாரி அவ்வீட்டார் வெட்குமாறு அப்புறப்படுத்துவார். மதுபானத்தா லுண்டாகும் தீமைகளைப் பலவாறு எடுத்துரைத்தும் திருந்தாதவர்கள் பொருட்டுச் சிலகால் உண்ணாவிரதமும் கொண் டிருந்தார். அதாவது தாம் குறித்தக் கிராமத்திலுள்ள செங்குந்தர்கள் மதுபானத்தை விட்டொழிக்கும் வரையில் ஒரு பிடி பச்சரிசியும் சில வாழைப் பழங்களும் தவிர வேறொன்றும் புசிப்பதில்லை எனத் தீர்மானித்துக்கொண்டு அவ்வாறே செய்துவந்தார். இதனால் சீர்பட்டோர் பலர். இவரன்றோ முற்காலத்தில் ஆரியாதிகளையேயன்றி, ஈழம், வங்கம், கலிங்கம், மலையாளம் முதலிய பல நாடுகளையும் ஜெயித்துத் தங்கள் கீர்த்தியை நிலை நாட்டிய வீரர்களது பரம்பரையிற் றோன்றிய உத்தம வீரவைராக்கிய செங்குந்த குலதிலகராவர் ? இவரது ஆர்வம் அளவு கடந்தது; குலாபிமானம் சிலாக்கிக்கத் தக்கது; வைராக்கியம் வியக்கத்தக்கது.

நமது தலைச்சங்கம் ஸ்தாபிக்கப்பெற்ற விஷயத்தைத் தினசரிப் பத்திரிகைகள் மூலம் அறிந்து



கிறது. இவ்விஷயம் அந்நாட்டுப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட போது அதை வாசித்து அமெரிக்காவே யன்றி உலகமுழுதும் ஆச்சரியப்பட்டது.

நாளுக்கு நாள் செல்வமும், ஜனத்தொகையும் அதிகரித்துகொண்டே வருகிறபடியால் செலவு செய்யும் தொகையும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. விஷயத்தை நன்குணர்ந்தவர்கள் உத்தேசப்படி 1929 வருஷத்தில் அத்தெருவிலுள்ள குடும்பமொன்றுக்கு 4200000 ரூபாயாகத் தெரு மொத்தத்தில் 1,000,000,000 ரூபாய் செலவாகுமெனத் தெரிகிறது. இவ்வீதியின் செல்வத்தையும், செலவையும் உள்ளபடிச் சிறப்பித்து வாசகர்கள் மனதில் படியுமாறு சொல்லுவதற்குத் தகுந்த சொற்கள் இல்லையென்றே சொல்ல வேண்டும். நியூயார்க் நகரத்தில் 1928 வருஷம் கல்விக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட தொகையைக் காட்டிலும் $3\frac{1}{2}$மடங்கு அதிகமாக இந்த வீதியிலுள்ளோர் செலவு செய்திருக்கிறார்கள். வேறொரு வகையாய்ச் சொல்லின் சிங்காரவன வீதியானது நியூயார்க் நகரத்தின் மூன்னூற்றில ஒரு பாகமே யாயினும் இதன் ஜனத்தொகை அமெரிக்கா ஐக்கிய ராஜ்யத்தின் ஜனத்தொகையை நோக்க மிகச்சிறியதே யாயினும்,1925—26 வருஷத்தில் அந்நாடு முழுதும் கல்விக்காகச் செலவிட்ட மொத்தத் தொகையில் ஐந்தி லொருபாகத்திற்குச் சமமான தொகை இத்தெருவிலிருந்து வியாபாரிகளிடம் சென்றிருக்கிறது.

### வருஷாந்தாச் செலவு.

சிங்காரவன வீதியில் வசிப்போர் வருஷா வருஷம் செய்யும் இரண்டொருவகைச் செலவுகளைப்பற்றி மாத்திரம் ஈண்டு தனித்தனியே குறிக்க விரும்புகிறேன். உணவு, உடை, வாடகை ஆகிய மூன்றிற்கும் குடும்பம் ஒன்றிற்கு 1850000 ஆகத் தெரு மொத்தத்தில் 925,000000 ரூபாயும்;வேடிக்கை சங்கீதம் பிரயாணம்,மோட்டார், படகு முதலியவற்றிற்காகக் குடும்ப மொன்றிற்கு 900000 ஆக மொத்தத்தில் 450,000000 ரூபாயும், சென்டு முதலிய வாசனைச் சாமான்கள், புஷ்பங்கள், தருமம், மதுபானம் முதலியவற்றிற்காகக் குடும்ப மொன்றிற்கு 1450000 ரூபாயாக மொத்தத்தில் 725,0000000ரூபாயும் செலவிடப்படுகின்றன.

### சிங்கார வனவீதி இல்லாமற் போதுமானல் என்ன நேரும்?

உலக க்ஷேமத்திற்கும், வியாபார விர்த்திக்கும், பெரிதும் உபயோகப்பட்டு வரும் நுண்ணிய அறிவாற்றலோடும், குன்றே அனைய நிதியோடும் இவ்வீதிவாசிகள் இன்றைக்குத் திடீரென வேறோருலகத்திற்குப் போய் விடுவார்களானல் நமது உலகம் என்ன கதியடையும் என்று பார்ப்போம். நம்முலகமானது மிகவும் நசித்துப் பெருநஷ்டமடையுமென்பதிற் சந்தேகமே யில்லை.. அநேக மாபெருங் கைத்தொழிற்சாலைகளையும், அவை நடைபெறுதற்குக் காரணரா யிருக்கிற பேரறிவாளர்களையும் நாம் இழக்க நேரிடும். அதனால் உண்டாகும் நஷ்டத்தை நிவர்த்தி செய்துகொள்ள நாமெல்லோரும் இடைவிடாது உழைத்து வருவோமாயின் குறைந்தது ஒரு தலைமுறை காலம் செல்லும்.

ஆரம்பத்தில் கூறியபடி செல்வத்திற்கு இவ்வீதியே தாயகமா யிருக்கிறது. அதுவே உலகம் நாளுக்குநாள் மேன்மையடைவதற்கு முக்கிய காரணமாயு மிருக்கிறது. அதைவிட மனிதர் வசிப்பதற்குச் சௌகரியமான இடம் வேறொன்றில்லை. ஒரு பெரிய நகர மத்தியி லிருந்தும் நகரவாசத்தா லுண்டாகும் அசௌகரியம் ஒன்றுங் கிடையாது. கிராம வாசத்தா லுண்டாகும் சௌகரியங்களைக் காட்டிலும் மேம்பட்ட சௌகரியங்களு முண்டு என்று சொல்லுமாறு அவ்வளவு திறமையுடன் அது அழகாய் அமைக்கப் பெற்றிருக்கிறது.

மா. அ. கனகசபை முதலியார்.

# செங்குந்தர் கிளர்ச்சி

நாளது விபவ ஹூ தை, மாசி, பங்குனி மாதங்களின் செங்குந்த மித்திரனை நமது மூதலாவது மகாநாட்டுச் சம்பந்தமான விஷயங்கள் அடங்கிய ஓர் புத்தமாக வெளியிட்டபடியால், பல ஜில்லாக்களிலுமுள்ள நமது கிளைச்சங்கங்களின் நடவடிக்கைகளைப் பிரசுரிக்கச் சந்தர்ப்ப மில்லாமற் போயிற்று. அத்தகை சங்கங்களில் சென்ற மூன்று நான்கு மாதங்களாக நடந்த நடவடிக்கைகளை யெல்லாம் விவரமாய் இதில் பிரசுரிப்பது இடமின்மையாற் கூடாமையின் அவற்றை மிகச் சுருக்கி யுரைக்க நேர்ந்தமைபற்றிச் சகோதரர்கள் பொறுத்துக் கொள்வார்களென நம்புகிறோம்.

### சென்னை ஜில்லா.

#### சென்னைச் செங்குந்த வாலிபர் சங்கம்.

மேற்படி சங்கத்தின் கூட்டமொன்று 25-2-29உ மாலை சுமார் $5\frac{1}{2}$-மணிக்குத் திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியாரவர்கள் M.A., L.T., தலைமையின் கீழ்க் கூடியது. அதுகாலை B.A., வகுப்பு மாணவர் திரு. K. வஜ்ஜிரவேலு முதலியாரவர்கள் 'சுயமரியாதை இயக்கம் ஜனசமூகத்துக்கு நன்மைபயக்குமா?' என்னும் விஷயத்தைப்பற்றிய வாதத்தைத் தொடங்கிப் பேசினர். இச்கூட்டத்தின் தொடர்ச்சி 27உ மாலை $7\frac{1}{2}$-மணிக்கு நடந்தபொழுது அவர் சுயமரி

யாதை இயக்கத்தின் முக்கிய நோக்கங்களை ஒத்துக் கொள்வதாயும் அதன் செய்கைகளில் சிலவற்றை கண்டிப்பதாயும் கூறினர். அவரோடு ஒன்றியும் மாறுபட்டும் சிங்காரவேலு முதலியார் B.A., மா. அ. கனகசபை முதலியார், ஜெ. தங்கவேலு முதலியார், பக்கிரிசாமி முதலியார், குமாரசாமி முதலியார், அண்ணாமலை முதலியார், ராஜவேலு முதலியார் முதலியோர் பேசினர். தலைவர் முடிவுரையானதும் காரியதரிசி வந்தனோபசாரங்கூறக் கூட்டம் இனிது கலைந்தது.

திருமயிலை செங்குந்த வாலிபர் சங்கம்.
முதலாண்டு நிறைவு விழா.

சென்ற தை௴ 1௳ காலை 8-மணிக்குத் தலைவர் திரு. ச. குழந்தைவேலு முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் ஷை சங்கத்தின் முதலாண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது. அறிக்கைப் பத்திரம் வாசித்தல் முதலியவை நடந்தேறியபிறகு கீழ்க்கண்ட புதிய உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்:

தலைவர் : திரு ச. குழந்தைவேலுமுதலியார் ; உபதலைவர்கள் : திருவாளர்கள் எ. தக்ஷிணாமூர்த்திமுதலியார், T. S. சிங்காரவேலு முதலியார்; காரியதரிசிகள்: திருவாளர்கள் மு. சரவண முதலியார், M. K. பாலசுந்தர முதலியார்; பொக்கிஷதாரர்கள் : திருவாளர்கள் மு. விநாயக முதலியார், மு. சம்பந்த முதலியார்; நிர்வாக அங்கத்தினர்கள்: திருவாளர்கள் எ. இராமசாமி முதலியார், ம. சுந்தர வடிவேல் முதலியார், P. S. பால சுப்பிரமணிய முதலியர்ர், எ. பாலசுந்தர முதலியார்.

செங்கற்பட்டு ஜில்லா.
காஞ்சிச் செங்குந்த வாலிபர் சங்கம்,
செங்குந்தர் இரவு பாடசாலை
முதலாண்டு விழாக்கள்.

இவற்றின் ஆண்டு விழாக்கள் 9-2-29௳ மாலை கொண்டாடப் பெற்றன. சென்னையிலிருந்து திருவர்ளர்கள் ம. சண்முகசுந்தர முதலியார் M.A., L.T., மா. அ. கனகசபை முதலியார், தி. அ சண்முக முதலியார் முதலியவர்களும் மற்றும் வெளியூர்களிலிருந்து அநேக பிரமுகர்களும் வந்திருந்தார்கள். தலைவர் திரு. ம. த. சாமிநாத முதலியார் அவர்கள் இல்லத்திலிருந்து தலைவர்கள் வாத்தியங்கள் முழங்கக் குடை கொடி முதலிய பல விருதுகளோடு மண்டபத்தெரு மண்டபத்திற்குஅழைத்துச் செல்லப் பெற்றனர். சுமார் 2000 ஜனங்கள் வந்திருந்தார்கள். பாடசாலை விழா, டெபுடி இன்ஸ்பெக்டர் திரு. சீதாராமய்யர் தலைமையின் கீழ் நடந்தேறியது. பின்னர் நடந்த சங்கவிழாவுக்குத் திரு. ம. த. சாமிநாதமுதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைவரது அனுபவம் நிறைந்த பொன்போன்ற முன்னுரையின் பின் அறிக்கைப் பத்திரம் வாசித்தல் முதலியானால் நிகழ்ந்தது. பிறகு திருவாளர்கள் ம. சண்முகசுந்தர முதலியார், மா. அ. கனகசபை முதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார் ஆகிய மூவரும் முறையே 'நம்மவர் முதலாவது மகாநாடும் அதன் தீர்மானங்களும்,' 'நமது முன்னேற்றம்,' 'இரண்டாவது மகாநாடு கூடுமிடம்' என்பவற்றைப்பற்றிப் பேசினார்கள். அச்சமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

(1) "இக்கூட்டம் தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டினை அடுத்த தைமாதத்தில் காஞ்சிபுரத்தில் செங்கற்பட்டு ஜில்லா செங்குந்தர்கள் ஆதரவில் கூட்ட வேண்டுமென இச்சில்லாவிலுள்ள செங்குந்தர் கிளைச் சங்கங்கள் சார்பாகவும், செங்குந்த மகாஜனங்கள் சார்பாகவும் தீர்மானிக்கிறது"

(2) "இக்கூட்டம் அமாவாசை தோறும் தறி ஒன்றுக்குக் குறைந்தது காலணா வீதம் இவ்வூரிலுள்ள ஒவ்வொரு செங்குந்த குடும்பத்திலும் உண்டி மூலம் வசூல் செய்து சேர்ந்த பணத்தைத் தலைச்சங்கத்திற்கு மாதா மாதம் அனுப்பிவிட வேண்டுமெனத் தீர்மானிப்பதோடு வெளி ஜில்லாக்களிலும் வெளி நாடுகளிலும் உள்ள செங்குந்த சகோதரர்கள் அனைவரையும் இதே மாதிரி செய்துவரும்படி கேட்டுக்கொள்ளுகிறது".

மகாநாட்டின் தீர்மானங்களை இவ்வளவு சீக்கிரம் முதல் முதலாக நடவடிக்கைக்குக் கொண்டு வந்த திரு. ம. த. சாமிநாத முதலியார் அவர்கள் குலாபிமானம் மிகவும் போற்றத்தக்கது. கூட்டம் இரவு 10½-மணிக்கு இனிது கலைந்தது.

சிவபுரம் செங்குந்தர் சங்கம்

10-2-29 காலை 11-மணிக்குத் திருவாளர்கள் ம. சண்முகசுந்தர முதலியார் M.A., L.T., பி. செ. மாணிக்கவாசக முதலியார், மா அ. கனகசபை முதலியார், தி. அ. சண்முக முதலியார், காஞ்சி. கந்தசாமி முதலியார், அருணாசல முதலியார், சு. ஆறுமுக முதலியார், முதலிய பிரமுகர்கள் சிவபுரம், சேர்க்காடு, சிவமங்கலம் முதலிய ஊர்ச் செங்குந்த சகோதரர்கள் வேண்டுகோளுக்கிணங்கிப் பழைய சீவரமென வழங்கும் சிவபுரத்திற்கு விஜயஞ் செய்தனர். இவர்களை ஷை ஊர் மாவண்டூர், ஐயூர், வடபாதி, செங்கற்பட்டு முதலிய பேரூர் பலவூர்ப் பிரதிநிதிகள் எதிர்கொண்டு வந்து வாத்திய கோஷங்களுடன் பழையநாட்டு முறைப்படி உபசரித்து வரவேற்றனர்.

மாலை 2-மணிக்குப் பழைய நாட்டுப் பட்டயங்கள் பரிசோதிக்கப் பெற்ற பிறகு திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் ஒரு பொதுக் கூட்டம் கூடிற்று. அப்போது ஸ்ரீலஸ்ரீ வத்ஸலானந்த சுவாமிகளால் நல்வரவேற்புப பத்திரம் வாசிக்கப் பெற்றது. பல சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றன. அச்சமயம் சிவபுரம் செங்குந்தர் சங்கம் என ஒரு சங்கம் நிறுவப் பெற்று உத்தியோகஸ்தர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். பின்னர் இச்சங்கம் சென்னையிலுள்ள தலைச்சங்கத்தோடு இணைக்கப்பட வேண்டுமென்றும், இதற்கு மேற்கூறிய7 ஊர் செங்குந்தர்களும் அங்கத்தினராவாரென்றும், அமாவாசை தோறும் தறி ஒன்றுக்குக் குறைந்தது காலணா வீதம் வசூல் செய்து சேர்ந்த பணத்தைக் கல்விப் பொது நிதிக்காகத் தலைச்சங்கத்திற்கு அனுப்பவேண்டுமென்றும் ஏக மனதாய்த் தீர்மானிக்கப் பெற்றது. கூட்டம் இரவு 10-மணிக்கு இனிது கலைந்தது.

உத்தியோகஸ்தர்கள்: தலைவர், சிவபுரம் திரு. அ. முனுசாமி முதலியார். காரியதரிசிகள், திரு. சி. கதிரைசாமி முதலியார், சேர்க்காடு திரு. மு. சின்னசாமி முதலியார். நிர்வாக அங்கத்தினர், சேர்க்காடு திரு. மு. ராகவ முதலியார், சிவமங்கலம் திரு. சு. முத்துக்குமாரசாமி முதலியார், திரு. வெ. தெய்வநாயக முதலியார், பேரூர் பலஆருக்காகமாவண்டூர் திரு. மா. பரசுராம முதலியார்.

திருப்புலிவனம் செங்குந்தர் சங்கம்.

22-3-29௳ மாலை 7-மணிக்குப் பெரியதனம் திரு. ச. வையாபுரி முதலியார் அவர்கள் இல்லத்தில் திரு மா. அ. கனகசபை முதலியார் தலைமையின் கீழ் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. அச்சமயம் சென்னை சங்கத்தின் கிளைச்சங்கமாக ஷை சங்கத்தை ஸ்தாபித்து உத்தியோகஸ்தர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்று, அடுத்த மகாநாட்டைக் காஞ்சியில் கூட்ட வேண்டுமென்று காஞ்சி வாலிப சங்கத்தார் செய்த தீர்மானத்தை ஆதரித்தல், முதலாவது மகாநாட்டில் நிறைவேறிய எல்லா தீர்மானங்களையும் கூடிய சீக்கிரம் நடவடிக்கைக்குக் கொண்டுவருமாறு தலைச்சங்கத்தை கேட்டுக்கொள்ளல், ஈரோட்டில் மகாநாட்டைச் சிறப்பாய் நடத்தித் தந்த நிர்வாகிகளுக்கு நன்றி செலுத்தல், அவ்வூர்ச் செங்குந்தர் வீதியில் ஒரு கிணறெடுக்க ரூபா 560 சாங்கிஷன் செய்திருந்தும் அதை எடுக்கா திருக்கும் செங்கற்பட்டு தாலூகா போர்டாரைக் கூடிய சீக்கிரம் கிணறு எடுக்கும்படிக் கேட்டுக் கொள்ளல் முதலியவற்றைக் குறித்த பல தீர்மானங்கள் நிறைவேறின. உத்தியோகஸ்தர்கள்: தலைவர், பெரியதனம் திரு. வே சு. வையாபுரி முதலியாரவர்கள்; காரியதரிசி, திரு. சு. அருணாசல முதலியாரவர்கள்; நிர்வாக அங்கத்தினர், திரு. கந்தசாமி முதலியார் அவர்கள், திரு. சி. முருகப்ப முதலியார் அவர்கள், திரு. டொ. ராசு முதலியார் அவர்கள்.

கன்றச்சேரி செங்குந்த வாலிபர் சங்கம்.

சென்ற மார்கழி௴ 6-ந் தேதி இரவு 7-மணிக்குத் திரு. ச. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. அப்போது அநேக முக்கியமான தீர்மானங்கள் நிறைவேறின.

9-2-29 தேதி இரவு 7-மணிக்குத் திரு. சு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் ஒரு கூட்டம் கூடிற்று. அப்போது ஈரோட்டில் வெகு விமரிசையாக முதலாவது மகாநாட்டை நடத்தி வைத்த கொங்கு நாட்டுச் சகோதரர்களுக்கு நன்றி செலுத்தல் முதலியவற்றைக் குறித்த பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

வட ஆற்காடு ஜில்லா.

மின்னல் உண்மைச் செங்குந்த வாலிபர் சங்கம்.

சென்ற தை௴ 30-ந் தேதி மாலை 4-மணிக்குப் பி. என். முனுசாமி முதலியார் ஹாலில் ஊர்ப் பொது கிராமணி பெரியதனக்காரர்கள் ஆதரவில் திரு. பி. கோவிந்தசாமி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் ஒரு கூட்டம் கூடிற்று. சுமார் 200 ஜனங்கள் வந்திருந்தார்கள். தலைவர் நமது உண்மைச் செங்குந்த குலம் தலைச்சங்கம் முதலியவற்றைக் குறித்து உபந்யசித்தார். திரு. க. பாளையத்தா முதலியார் அவர்கள் பிரேரேபித்தபடி சென்னை சங்கத்தின் கிளைச் சங்கமாக ஷை சங்கம் ஸ்தாபிக்கப்பெற்று பஞ்சாயத்து கோர்ட் மெம்பர் ஜவுளி திரு. பி. பரசுராம முதலியார் தலைவராகவும் திரு. க. பாளையத்தா முதலியார் உபதலைவராகவும், திரு. P. S. சுப்பிரமணிய முதலியார் காரியதரிசியாகவும் பொக்கிஷதார் முதலிய நிர்வாக அங்கத்தினரும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அச்சமயம் இச்சங்கத்திற்கு வாசகசாலை ஒன்று ஏற்படுத்திப் பல பத்திரிகைகளும் புத்தகங்களும் தருவித்து முதியோர்களுக்கும் மாணவர்களுக்கும் உதவுமாறு செய்தல், ஆண்பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு பாஷைகளையும கூடியவரையில் கற்பித்தல் முதலிய பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன. இரவு 9-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

குடியேற்றம் டவுன் புதுப்பேட்டை செங்குந்த வாலிபர் சங்கம்.

வாலிபர்களின் புத்துணர்ச்சி.
என்றுங் காணுப் பெருக்கம்.

25-2-29-ந்தேதி இந்நகர் புதுப்பேட்டை சின்ன முதலியார் தெரு விநாயகர் ஆலயத்தில் ஒருபொதுக் கூட்டம் கூடிற்று. திரளான ஜனங்கள் வந்திருந்தார்கள். கூட்டத்திற்கு ஈரோட்டில் நடந்த செங்குந்த வாலிபர் முதலாவது மகாநாட்டிற்குத் தலைவராயிருந்து நம்வாலிபர்களுக்குப் பல அரிய உபதேசங்கள் செய்த மாஜி சேர்மன் உயர் திருவாளர் எம். வீ. பீமராஜா முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைவர் அவர்கள் தமது அரிய முன்னுரையில் 'நம் குலம் முன்னேற்றமடைய வேண்டுமென்றால் வாலிபச் சங்கங்கள் ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பெறல் வேண்டும்' என்னும் விஷயமாக ஒரு பெருபந்யாசம்செய்து 'சங்கம் செய்வது தங்கமும் செய்யாது' என்பது போன்ற பல பழமொழிகளையும் எடுத்துச் சொல்லி விளக்கினார்கள். அப்போதே ஷை சங்கம் ஸ்தாபிக்கப் பெற்று திரு. T. T. சுப்பிரமணியம் தலைவராகவும். திரு. S. M. பொன்னுசாமி உபதலைவராகவும், திருவாளர்கள். K.M. முனிரத்னமும் M. V. துரைசாமியும் காரியதரிசிகளாகவும், T. A. ஐயாசாமி தனாதிகாரியாகவும், மற்றும் 15 நிர்வாக அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிறகு அமாவாசைதோறும் கூட்டம் கூடுதல், சங்கத்திற்கு நிதிசேர்த்தல், சங்க ஆதரவில் இலவச வாசகசாலை ஒன்று ஏற்படுத்திப் பல பத்திரிகைகளையும் தருவித்தல் முதலியவற்றைக் குறித்த பல தீர்மானங்கள் நிறைவேறின. தலைவர் தமது முடிவுரையில் இப்போது உலகின் எல்லாப்பாகங்களிலும் எழும்பியுள்ள புத்துணர்ச்சியைப்பற்றிச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எடுத்துக்காட்டிச் சங்கவாசகசாலைக்குத் தேவையான வர்த்தமானப் பத்திரிகைகளைத் தாமே தமது சொந்த

செல்வில் தருவித்துக் கொடுப்பதாக வாக்களித்தார்கள். இரவு 8-மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

## தஞ்சை ஜில்லா

### வாழமங்கலம் செங்குந்தர் சன்மார்க்க சங்கம்.

31-12-28 தேதி இரவு 7-மணிக்குத் திரு. த. க. பழநியாண்டி முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்க்கூடிய கூட்டத்தில் தலைச்சங்க அமைச்சர் திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்கள் 'செங்குந்தர் ஒழுக்கம்' என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு அரிய சொற்பெருக்கு நிகழ்த்தினர்கள்.

24-1-29-ல் கூடிய கூட்டத்தில் மூன்றாவது ஆண்டுவிழா மாசிமீ 15-தேதி நடத்தவேண்டு மென்றும் வருஷம் 1-க்கு ரூபாய் 5 சங்கத்திற்கு உதவுவதன்றி வெளியூர்களில் பிரசாரம் செய்வதாகவும் ஒப்புக்கொண்ட திரு. ம. வீரபத்திர முதலியார் அவர்களைச் சிறப்புக்காரியதரிசியாக நியமிக்கவேண்டுமென்றும் சங்கச்சார்பில் நடந்துவரும் பள்ளிக்கூடத்திற்கு ஆங்கிலம் நன்குபயின்ற உபாத்தியாயரை நியமிக்க வேண்டுமென்றும் மற்றும் பல விஷயங்களைக் குறித்தும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

இச்சங்கத்தின் மூன்றாவது ஆண்டுவிழா மாசிமீ 14-15உ களில் கொண்டாடப்பட்டது. முதல்நாள் சைவத் திருவாளர் ச. நாகலிங்க முதலியார் அவர்கள் தலைமைவகித்தார்கள். அச்சமயம் நடந்த உபந்யாசங்களில் சிலர் பழையகொள்கைகளைத் தழுவியும், மற்றும் சிலர் அவற்றுள் சிலவற்றை தற்காலத்திற்கு ஒவ்வாதனவென மறுத்தும் பேசினார்கள். இரண்டாம் நாள் சில உபந்யாசங்கள் நடந்த பிறகு நமது சங்கம் எந்த ராஜாங்க கக்ஷிக்காரர்கள் கொள்கைகளையும் ஆதரிக்கக் கூடாதென்றும், அந்நியநாட்டு ஆடையை அறவே ஒழித்து நம்மவர் செய்யும் துணிகளையே அணியவேண்டுமென்றும், சங்கப் பள்ளிக்கூடத்தை விருத்தி செய்யவேண்டுமென்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.

### திருமருகல் செங்குந்த குலாபிமானச் சங்கம்.

8-12-28 தேதி மாலை 6-30-மணிக்குத் திரு. பொ. வ. ரெங்கசாமி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் ஒரு அநுபவக் கூட்டம் கூடிற்று. அப்போது மதராஸ் பளையக்காட் கம்பெனியின் பாகஸ்தராகிய உயர் திரு. தி. மு. அரு. தியாகராய முதலியார் அவர்கள் அருந்தவப் புதல்வருள் ஒருவரும் நமது குலதீபங்களுள் ஒருவருமாகிய திரு. அருணாசலமுதலியார் அவர்களின் ஆத்மா 16-12-28-ல் விண்ணுலகேகியதைப்பற்றி இக்கூட்டம் மிகவருந்துவதோடு அவர்கள் குடும்பத்தாருக்கு இச்சங்கத்தின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு அவர்கள் ஆத்மா சாந்தியடையுமாறும் முருகப்பெருமானை இறைஞ்சுகிறது என்ற தீர்மானம் நிறைவேறியது.

### செங்குந்த மகாஜனசங்கம், மஞ்சட்கொல்லை.

இச்சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று பொங்கல் நாளன்று திரு. ச. பொன்னுசாமி முதலியார் அவர்கள் அவைத்தலைமையின்கீழ் நடந்தது. அப்போது 'நமது வீரஇளைஞராகிய திரு. தி. அருணாசல முதலியார் அவர்கள் தமது இளம்பிராயத்திலேயே அகாலமரண முற்றதைக் குறித்து இச்சங்கம் ஆழ்ந்த அனுதாபப்படுவதன்றி, அவ்வனுதாபத்தை அவரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறது' என்ற தீர்மானம் ஏகமனதாய் யாவரும் நின்ற நிலையில் நிறைவேற்றப்பட்டது. பிறகு மகாநாட்டுப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பெற்று அதற்கு அனுப்ப வேண்டிய பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன எனக் கூட்டுக் காரியதரிசிகள் தெரிவிக்கிறார்கள்.

### திருமலைராஜன்பட்டணம் செங்குந்த வாலிபர்சங்கம் 4-வது கூட்டம்.

விபவவருஷ தைமீ 17 தேதி இரவு 8-மணிக்கு இச்சங்கத்தின் 4-வது கூட்டம் திரு. க. நாகலிங்க முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிற்று. அதுபோது திரு. வீ. கோவிந்தசாமி முதலியார் அவர்களும், திரு. ப. சண்முக முதலியார் அவர்களும் முறையே சண்டேசுர நாயனார் சரித்திரத்தையும், அன்பு என்பதைப்பற்றியும் பிரசங்கித்தார்கள். 10-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது எனக் காரியதரிசி எழுதுகிறார். மேற்படியூர் புண்ணியசீலராகிய திரு. வீ. கு. ரு. மு. முத்தைய முதலியார் அவர்கள் 16-1-29 தேதியில் ஸ்ரீ செங்குந்த விநாயகர் வித்தியாசாலை ஸ்தாபித்து நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

## திருச்சி ஜில்லா

### கரூர் செங்குந்தர் சங்கம்.

11-12-28 தேதியில் காலை 9-மணிக்குச் செங்குந்த வாலிபர் சங்கம்கூடிச் சந்தாவசூலும் தலைக்கட்டுவசூலும் வாங்கி வரவு செலவு கணக்குகளை முடித்து 11-மணிக்குக் கலைந்தது. அன்று மாலை 3-மணிக்குத் திரு. கோ. தெ. ராமசாமி முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் பல சகோதரர்கள் 'புலால்மறுத்தல், பொறுமை, 32 தர்மம், மதுவிலக்கு' முதலிய விஷயங்களைப்பற்றி உபந்யாசங்கள் செய்தார்கள் இரவு 9-மணிக்குக் கூட்டம் நிறைவேறிற்று.

22-2-29 தேதி மாலை ஏழு மணிக்குக் கூடிய பொதுக்கூட்டத்தில் சென்ற தைமீ 7, 8 தேதிகளில் ஈரோட்டில் கூடிய நம் முதலாவது மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானப்படி நம்மவர்கள் செய்யும் எல்லாவிதச் சடங்குகளும் சுயமரியாதை அல்லது தன் மதிப்புக்குப் பங்கமில்லாதவாறு நம்குலத்தவர்களாகிய புரோகிதர்களைக் கொண்டே செய்துகொள்ள வேண்டுமெனத் தீர்மானித்து ஸ்ரீ அன்னை காமாக்ஷியம்மனுக்குப் பூஜை புரிந்துவரும் திரு. உ. க. ஆறுமுக முதலியாரைப் புரோகிதராகவும், பழனை கோஷ்டி தலைவர் திரு. N. ராமசாமி முதலியாரை உபபுரோகிதராகவும் நியமித்து அன்னவரைக்கொண்டே எல்லாச் சடங்குகளையும் செய்தல் வேண்டுமென ஏற்பாடு செய்யப்பெற்றது. பிறகு பெரியதனம் திரு நாச்சியப்ப முதலியார் எழுந்து சபையோருக்கு அறிக்கைசெய்து மேற்படி புரோகிதர்களுக்கு முப்புரிநூலும் பூமாலையும் சாத்தி வந்தனோபசாரம் கூறி அம்பாளுக்குத் தீபாராதனை முதலிய செய்து



எல்லோருக்கும் பிரசாதமளித்தார். இரவு 11-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது எனக் காரியதரிசி எழுதுகிறார்.

### உன்னியூர் செங்குந்த சங்கம்.

13-1-29 தேதி மாலை 4-மணிக்குத் திரு. கு. ஆ. ஆனந்த முதலியார் தலைமையில் 'நமது இயக்கமும் நமது கடமையும்' 'வாலிபர் கடமையும் வாலிபர் மகாநாடும்,' 'மகாநாடும் நமது நோக்கமும்' என்ற பல விஷயங்கள் சகோதரர்களால் உபந்யசிக்கப்பெற்றுப் பிறகு தென்னாட்டு முடிசூடாமன்னராகிய பானகல் அரசர் விண்ணுலகேகியதற்காக அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.

14-2-29 தேதி மாலை 4-மணிக்குத் திரு. கு ஆ. ஆனந்த முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய மேற்படி சங்கப் பொதுக்கூட்டத்தில் நமது சக்கரவர்த்தியார் சுகமடைந்து வருவதைக் குறித்து சந்தோஷப்படுவதோடு அவர் நீடூழி வாழ்ந்துவர இறைவனைப் பிரார்த்தித்தல், காட்டுப்புத்தூருக்குவர இருக்கும் முதல் மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் M.A., D.C.L. L.L.B., அவர்களை இச்சங்கம் வரவேற்றல், ஜில்லா தாலூக்கா போர்டார்களைப் பலதடவைகளில் மகஜர்மூலம் காட்டுப்புத்தூருக்கும் மோகனூருக்கும் (3½ மைல்) ரோட்டு போடும்படிக் கேட்டும் கவனியாததால் முதல் மந்திரியவர்கள் விஜயஞ்செய்தலை முன்னிட்டாவது ரோட்டு போடும்படிக் கேட்டுக்கொள்ளல், நமது முதலாவது மகாநாட்டில் செய்த தீர்மானங்களை நமது மித்திரன் வெளியான பிறகு அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் எனல் முதலிய அநேக தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன. இரவு 7-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது எனக் காரியதரிசி எழுதுகிறார்.

### மண்ணச்சநல்லூர் செங்குந்தர் சங்கம்.

27-12-28 தேதி மாலை 2½-மணிக்குத் திரு. செ. பெ. வீ. பொன்னுசாமி முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய மேற்படி சங்கப் பொதுக்கூட்டத்தில் திரு. க. வீ. சொக்கலிங்க முதலியார் அவர்கள் ஜீவகாருண்யத்தைப் பற்றி நீண்டதோர் உபந்யாசம் செய்தார்கள். 6-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

### கட்டிப்பாளையம் செங்குந்தர் சங்கம்.

11-3-29 தேதி இரவு 8 மணிக்குக் கட்டிப்பாளையம் செங்குந்தர் சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று திரு. கு. மா. கருப்பண்ண முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிற்று. அச்சமயம் திரு. சொ. குழந்தைசாமி முதலியார் அவர்கள் ஒரு அரிய உபந்யாசம் செய்தார்கள். பின்னர், 'நமது முன்னேற்ற விஷயத்தில் அதி தீவிர முயற்சி எடுத்துக்கொண்டு உழைத்துவரும் நமது மித்திரன் பத்திராதிபர் அவர்களுக்கும் மற்றுமுள்ள கல்வியிற் சிறந்த குலாபிமானிகளுக்கும் மகாநாட்டு நிர்வாகிகளுக்கும் நன்றி செலுத்துவதோடு அன்னோர் இம்முயற்சியில் இடைவிடாது உழைத்துவரும்படி அவர்களுக்குத் தேக ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும் அனுக்கிரகம் செய்யுமாறு இக்கூட்டம் கடவுளைப் பிரார்த்திக்கிறது' என்ற தீர்மானமும் நிறைவேறியது. இரவு 11-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது எனச் சங்கத்தலைவர் எழுதுகிறார்.

### ரெட்டியார் துறையூர் செங்குந்தவாலிபர் சங்கம்.

முசிறியில் மார்கழிமீ 12, 13 தேதிகளில் நடைபெற்ற திருமுழுக்காடிநாட்டுக் கூட்டத்திற்கு வருமாறு சில கிராமத்தினரை விரும்பியதற்கிணங்க திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் 10-3-29-ல் சென்னையினின்றும் புறப்பட்டு மண்ணச்சநல்லூர் முதலிய இடங்களைப் பார்த்துக்கொண்டு 12, 13 தேதிகளில் மேற்படி நாட்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். 13ம் தேதி யன்று இரவு பலர் விரும்பியபடி செங்குந்தர் இயக்கம் என்பதுபற்றிப் பேசத்தொடங்கி ஒற்றுமையை வலியுறுத்தியும் ஆலயங்களில் உயிர்ப்பலி இடுதலைக் கண்டித்தும் பேசியதன் பயனால் இரண்டொரு கிராமத்தினர்கள் தங்களுக்குள் இருந்த கட்சியினை ஒழித்துக்கொண்டு ஒற்றுமையானதோடு பலியை நிறுத்திவிடவும் தீர்மானித்தனர்.

மறுநாள் காலை ரெட்டியார் துறையூரடைந்தனர். அங்கு 15உ மாலை ஒரு பொதுக்கூட்டம் திரு. வெங்கடாசல நாயினாரவர்கள் தலைமையில் கூட்டப்பட்டது. அச்சமயம் திரு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் 'நமது மகாநாட்டுத் தீர்மானங்களும் நமது கடமையும்' என்பதுபற்றிப் பேசினார்கள். அதன் பயனாய் செங்குந்த வாலிபர்சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுக் கீழ்க்கண்டோர் உத்தியோகஸ்தராய்த் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

தலைவர்: T. S. V. S. பழனியாண்டி முதலியார்.
காரியதரிசி: ஆ. வி. முத்தைய முதலியார்.
பொருட்காப்பாளர்: V. P. S. M. பழனியாண்டி முதலியார்.

மற்றும் 20 அங்கத்தினர்கள் பதிவு செய்யப்பெற்றதும ஒவ்வொருவரும் மாதந்தோறும் இரண்டணா சந்தா செலுத்தவேண்டுமென்றும், வெள்ளிக்கிழமைதோறும் கூட்டங்கூடவேண்டுமென்றும் ஒரு வாசகசாலை சங்க ஆதரவில ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டு இரவு 10-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

## சேலம் ஜில்லா.

### சேலம் அம்மாப்பேட்டை செங்குந்த மகாஜன சங்கம்.

11-1-29 தேதி இரவு 8-மணிக்கு உபதலைவர் ஸ்ரீமான் S. P. பொன்னுசாமி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க்கூடிய சங்கப்பொதுக்கூட்டத்தில் 'இல்வாழ்க்கை' 'செய்ந்நன்றியறிதல்' 'சங்கத்தின் பெருமை' 'குடும்பம்' 'இகபரசாதனம்' முதலிய பல அரிய விஷயங்கள் பல அறிஞர்களால் உபந்யசிக்கப் பெற்றன.

25-1-29, இரவு 8-மணிக்குத் தலைவர் ஸ்ரீமான் K. மாரிமுத்து முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்க்கூடிய பொதுக்கூட்டத்தில் பல உபந்யாசங்கள் நடைபெற்றன. இம்மாதம் ஈரோட்டில் கூடிய நமது முதலாவது மகாநாட்டிற்கு நம்மாயினர் வ

தெந்த ஜில்லா தாலூக்கா கிராமங்களிலிருந்து வந்தனரென்று மித்திரன் மூலம் தெரிவிக்குமாறு தலைச்சங்கத்தைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

28-1-29 தேதி மாலை 7-மணிக்குத் தலைவர் ஸ்ரீமான் K. மாரிமுத்து முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்ச் சங்கத்தின் விசேஷக் கூட்டம் ஒன்று கூடிற்று. அச்சமயம் தலைச்சங்கப் பிரசாரகர்களாகிய திருவாளர்கள் மா. அ. கனகசபை முதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார், தி. அ. சண்முக முதலியார் ஆகிய மூவரும் 'நமது முதலாவது மகாநாடு' 'நமது முன்னேற்றம்' முதலிய விஷயங்களைக் குறித்து விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். நூற்றுக்கணக்கான சகோதரர்கள் விஜயஞ் செய்திருந்தார்கள். இரவு $10\frac{1}{2}$-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறிற்று.

9-2.29 தேதி பிற்பகல் 3-மணிக்குச் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் தலைவர் ஸ்ரீமான் K. மாரிமுத்து முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்ச் சங்கப்பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று அங்கு இளையோரும் முதியோருமாகப் பெருந்திரளான ஜனங்கள் வந்திருந்தார்கள். அவர்களுள் ஸ்ரீமான்கள் க. வையாபுரி முதலியார் மு. ரங்கசாமி முதலியார், க. பழநியப்ப முதலியார், பெ. விஸ்வலிங்க முதலியார் கா. ச. சொக்கலிங்க முதலியார் ஆதியோர் குறிப்பிடத் தக்கவர்கள். அச்சமயம் பல மெம்பர்கள் குறிப்பிட்ட 20 நிமிஷத்திற்குள் 'செங்குந்தர்கடமை' 'நமது ஏழை மக்களின் நிலைமை' 'ஒற்றுமை' 'மனிதர் கடமை' முதலிய பல விஷயங்களைக் குறித்துச் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தது மிகவும் பாராட்டத் தக்கது. அன்று நிறைவேறிய பல தீர்மானங்களுள் மிக முக்கியமானவை:

(1) நமது சமூகத்தில் பழங்காலந்தொட்டு கக்ஷிப் பிரதிகக்ஷிகள் இருந்து வருதலின் பலனாய்ப் பல முக்கிய காரியங்களுக்கெல்லாம் இடையூறுகள் ஏற்பட்டு நம சமூகத்தையே நாளுக்குநாள் க்ஷீணதசைக்குக் கொண்டுபோகிறபடியால் (குலமுன்னேற்றத்தின் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட) இச்சங்கத்தில் எக்காலத்திலும், எக்காரணத்தாலும், நம்மைப் பிரிவுபடுத்தும் எவ்விவகாரமும் சமூக சம்பந்தமாய் ஏற்படக்கூடாது என்று இக்கூட்டம் அழுத்தமாய்த் தீர்மானிக்கிறது.

(2) நமது சிறுவர்கள் கல்வி அபிவிருத்தியின் பொருட்டும், இளையோரும் முதியோரும ஓழிந்த நேரங்களில் பத்திரிகைகளும் புத்தகங்களும் படிக்கும்பொருட்டும் இச்சங்கத்தின் ஆதரவில் 'செங்குந்தா வாசகசாலை' ஒன்று ஏற்படுத்தவேண்டும் என்றும் அதற்குத் தேவையான நிதி சேர்க்க வேண்டுமென்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

(3) இக்கூட்டம் செங்குந்த மித்திரனை ஆதரிப்பதன்றி இக்கிராமத்திலுள்ள ஒவ்வொரு செங்குந்த குடும்பத்தினரையும் சந்தாதாரராக்க இச்சங்கத்தின் பொறுப்பாளிகள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தலைச்சங்கப் பிரசாரகர்களிடம் இச்சங்கத்தலைவர்களும காரியஸ்தர்களும் வாக்களித்த பிரகாரம நமது பரபந்தத்திரட்டின பிரதிகளை வரவழைத்துக் கூடுமானவரையில் விற்பனைசெய்து கொடுக்க வேண்டுமெனத் தீர்மானிக்கிறது. பிறகு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

16-2-29 தேதி இச்சங்கத்தின் மாதாந்தர 2-வது பொதுக்கூட்டம் மாலை 4மணிக்குச் சங்கக்காரியதரிசி திரு. S. பழநியாண்டி முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ்க் கூடிற்று. பெருந்திரளான ஜனங்கள் வந்திருந்தார்கள். கடவுள் வாழ்த்தும் தலைவர் முன்னுரையும் முடிந்த பிறகு இவ்வூர்ச் செங்குந்த வாலிபர் சங்கத்தலைவர், உபதலைவர், உள்ளிட்ட பல பெரியோர்கள் பல விஷயங்களைக் குறித்து விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். வந்தனோபசாரத்துடன் இரவு 8-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது எனச் சங்கக் காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

### சேலம் அம்மாப்பேட்டைச் செங்குந்தவாலிபர் சங்கம்.

25-1-29ல் மாலை $2\frac{1}{2}$-மணிக்கு இச்சங்கத்தின் இரண்டாவதாண்டின் 9வது கூட்டம் திரு. S. R. அருணாசல முதலியார் அவர்கள் தலைமையில் கூடிறறு. அச்சமயம் பல உபந்யாசங்கள் நடைபெறறன. செங்குந்தர்கள் தேக வலிமையைக் காப்பாற்றல், மேட்டூர் தேக்கத்திலிருந்து சேலத்திற்கு ஜலவசதி செய்யும் விஷயமாக நமது மகாநாட்டில் செய்த தீர்மானம் ஈரோடு மகாநாட்டு வரவேற்புக் கமிட்டியாருக்கு நன்றி செலுத்துதல் முதலியவை சம்பந்தமான தீர்மானங்கள் நிறைவேறின. கூட்டம் வந்தனோபசாரத்துடன் மாலை $5\frac{1}{2}$-மணிக்கு இனிது நிறைவேறியது எனக்காரியதரிசி எழுதுகிறார்.

### மோகனூர் உண்மைச் செங்குந்தர் சங்கம்.

29-12-28-ல் தலைவர் திரு R. சபாபதி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் ஷை சங்கத்தின் 5-வது கூட்டம் கூடிற்று. அச்சமயம் அநேக தீர்மானங்கள் நிறைவேறின. அறிஞர்கள் சொற்பெருக்குகளும நிகழ்த்தினார்கள். இரவு $8\frac{1}{2}$-மணிக்குக் கூட்டம இனிது முடிந்தது, எனக்காரியதரிசி தெரிவிக்கிறார்.

*எல்லாத் தமிழ் ஜில்லாக்களிலும், மலையாளம், கொச்சி, திருவாங்கூர், இலங்கை முதலிய இடங்களிலுமிருந்து பல ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். நமது மகாநாடுபோன்ற மாபெருங்கூட்டத்தில் வந்திருந்தவர்கள் தாலூக்காக்களையும், கிராமங்களையும் குறிப்பிடல் அசாத்தியமான காரியமாகும். மகாநாட்டு நிர்வாகிகள் தரவேண்டிய இவ்விபரம், இது முதல் மகாநாடாகையாலும் அவர்கள் இதை முன்னமே அவசியமெனக் கருதாமையாலும் விடுபட்டது. இவ்விபரம் அவசியமென்று தோன்றுமாயின் அடுத்த மகாநாட்டு நிர்வாகிகள் கூடியவரையில் தகுந்த ஏற்பாடுகள் செய்வார்களென நம்புகிறோம்.—ப-ர்.



### வெண்ணந்தூர் செங்குந்த குலாபிமானச் சங்கம்.

28-1-29ல் பிற்பகல் 4-மணிக்கு ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி கோயிலில் திரு. N. வேங்கடரமண ஐயர் தலைமையில் ஒரு பொதுகூட்டம் கூடிற்று. திரு. S. R. சின்னுசாமி யவர்கள் 'நமது முதலாவது மகாநாடு' என்பது பற்றியும், திரு A. V. ஆறுமுகம் அவர்கள் 'கல்வியின் அவசியம்' என்பது பற்றியும், நீண்ட சொற்பெருக்குகள் நிகழ்த்தினார்கள். தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கிளையாக "செங்குந்த குலாபிமான சங்கம்" என ஒரு சங்கம் நிறுவப்பெற்று உத்தியோகஸ்தர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அநேக அவசியமான தீர்மானங்கள் நிறைவேறின. தலைவர் திரு. அ. பெ. செங்கோட்டையா முதலியார், உபதலைவர். திரு. அ. சு. முத்துசாமி முதலியார், காரியதரிசி க. க. சித்த முதலியார், உபகாரியதரிசிகள் திரு. க. சி. இராமசாமி முதலியார், திரு. S. R. சின்னுசாமி முதலியார், பொக்கிஷதார் எ. வி. குப்புசாமி முதலியார், 13 இதர நிர்வாக அங்கத்தினர்.

11-2-29தேதி இரவு $8\frac{1}{2}$-மணிக்குத் திரு. கு. பழநியப்ப முதலியார் அவர்கள் தலைமையில் ஷை சங்கப் பொதுக்கூட்டம் கூடியது. அப்போது பல அரிய பிரசங்கங்கள் நடந்தன. வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

சென்ற தை௴ 28தேதி இரவு $7\frac{1}{2}$-மணிக்குத் திரு. கு. சுப்பராய முதலியார் அவர்கள் தலைமையில் சங்கப் பொதுக்கூட்டம் கூடிற்று பல உபந்யாசங்கள் நடை பெற்றன. இரவு 11-மணிக்குக் கூட்டம் இனிது முடிவுபெற்றது.

### கோவை ஜில்லா.
### ஈரோடு செங்குந்த வாலிபர் அபிவிருத்தி சங்கம்

விபவ௵ தை௴ 30-ந்தேதி இரவு $7\frac{1}{3}$-மணிக்கு முத்துக்குமாரஸ்வாமி சந்நிதியில் ஸ்ரீமான் ம. லக்ஷ்மண முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்ச் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. அப்போது ஷை சங்கம் ஸ்தாபிக்கப்பெற்றுக் கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

தலைவர், ஸ்ரீமான் லக்ஷ்மண முதலியார் உபதலைவர், ஸ்ரீமான் செ. ராமசாமி முதலியார், காரியதரிசி: ஸ்ரீமான் M. S. மாரியப்ப முதலியார், உபகாரியதரிசி: ஸ்ரீமான் மு. கணபதி முதலியார், பொக்கிஷதார்: ஸ்ரீமான் நா. மு. கிருஷ்ணசாமி முதலியார், உபபொக்கிஷதார்: ஸ்ரீமான் V. S. M. நஞ்சப்ப முதலியார், 11 நிர்வாக அங்கத்தினர்: அநேக சகோதரர்கள் சாதாரண அங்கத்தினராகவும் சேர்ந்தார்கள். தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி இச்சங்கத்திற்குச் சில கனவான்கள் நன்கொடை யளித்தனர்.

### மருதவாரைநீழல் வடவழிச் செங்குந்தர் நன்னெறிக் கழகம்.

3-2-29 தேதி அன்று இரவு மருதாபுரம் நா. ஒதிமலை முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிய கூட்டத்தில் கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்:—

தலைவர்: திரு. நா. அங்கண்ண முதலியார் அவர்கள், நாட்டாண்மை வடவழி; உபதலைவர்கள்: திரு. ஆ. அய்யாவு முதலியார் அவர்கள், பெரியதனம் திரு. ம. நஞ்சப்ப முதலியார் அவர்கள், மருதாபுரம் காரியதரிசி; திரு. S. ராமசாமி முதலியார் அவர்கள், பெரியபட்டம் ஏழூர்நாடு; உபகாரியதரிசி: N. ராமசாமி முதலியார் அவர்கள், நிதிக்காப்பாளர்; திரு. U. P. மருதப்ப முதலியார் அவர்கள், இதர நிர்வாக அங்கத்தினர் 12. பின்னர் ஈரோட்டில் கூடிய மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட எல்லா தீர்மானங்களும் அங்கீகரிக்கப்பட்டதாகவும் வடவழியிலும், மருதாபுரத்திலும் தனித்தனியே இரவு பாடசாலைகள் ஏற்படுத்துவதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றுத் தமிழ் மறையோதிக் கூட்டம் இனிது கலைந்தது.

9-2-29 அன்று இரவு வடவழிக்குத் திரு. பேச்சியண்ண முதலியார் அவர்கள் இல்லத்தில் 'செங்குந்தர் சிவானந்த இரவு பாடசாலை'யும் மருதாபுரத்திற்கும் சுல்தானிபுரத்திற்கும் திரு. ம நஞ்சப்ப முதலியார் அவர்கள் இல்லத்தில் 'செங்குந்தர் முத்துக்குமாரசாமி இரவு பாடசாலை'யும் நிறுவப்பெற்றுப் பெரியபட்டம் திரு. S. ராமசாமி முதலியார் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றன. இவற்றிற்கு முறையே திரு. V. P. மருதப்ப முதலியார் அவர்களும், திரு. A. வெள்ளியங்கிரி முதலியார் அவர்களும் ஆசிரியர்களாக நியமிக்கப்பெற்றனர். பிறகு மருதாபுரத்தில் திரு. ஒதிமலை முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிய கூட்டத்தில் 'ஒட்டக்கூத்தர், படிக்காசுதம்பிரான்' சரித்திரங்கள் உபந்யசிக்கப்பெற்றன. வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

11-2-29 அன்று இரவு 'செங்குந்தர் சிவானந்த இரவு பாடசாலையில் திரு. அங்கண்ண முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் நடந்தேறிய கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

1. அமாவாசைதோறும் வடவழி செங்குந்தர் சிவானந்த இரவு பாடசாலையிலும் ஒவ்வொரு பௌர்ணமிதோறும் மருதாபுரம் செங்குந்தர் முத்துக்குமாரசாமி இரவு பாடசாலையிலும் இக்கழகத்தின் நிகழ்ச்சிகள் நடைபெறவேண்டும்.

2. ஷை மூன்று கிராமங்களிலுள்ள ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் மாதம் ஒன்றுக்கு இக்கழகத்திற்கு ஒரு அணா வீதம் சந்தா செலுத்தவேண்டும்.

3. செங்குந்த மித்திரனை எல்லோரும் கண்டிப்பாய் ஆதரிக்கவேண்டுமென்று தீர்மானித்த பின்னர் குறைந்தது இருபத்தைந்து சந்தாதாரர்கள் மித்திரனை ஆதரிப்பதாக வாக்குறுதி செய்தனர். ஆகையால் அவர்களிடம் பணத்தைச் சீக்கிரம் வசூல்செய்து மகாஜன சங்கத்திற்கு அனுப்ப வேண்டுமென்றும்,

4. தொண்டர்படையொன்று சேர்த்துச் செவ்வனே பயிலுவித்தல் வேண்டுமென்றும்,

5. கிளைச்சங்கங்கள் நிறுவப்பெறாத ஒவ்வொரு கிராமத்திற்கும் நமது கழகத்திலிருந்து பிரசாரம் செய்து கிளைச்சங்கங்களை நிறுவச் செய்தல் வேண்டு

மென்றும் எல்லோரும் ஏகமனதுடன் தீர்மானித்தார்கள் எனக் காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

### வெள்ளி பாளையம் செங்குந்தர் நன்னெறிச் சங்கம்.

15-1-29 தேதி மாலை வெள்ளிபாளையம் காமாக்ஷியம்மன் சந்நிதியில் மிராஸ்தாரரும், பெரியதனக்காரருமாகிய திரு. V. N. ரங்கசாமி முதலியார் அவர்கள் (தலைமையின் கீழ்ச் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. அக்கூட்டத்திற்கு வச்சனம் பாளையத்துச் சகோதரர்களும் விஜயஞ் செய்திருந்தார்கள். அச்சமயம் தலைமை யாசிரியர், திரு. F. V. துரைசாமி முதலியார் அவர்கள் 'தலைச்சங்கத்தின் நோக்கங்கள்' என்னும் விஷயத்தைப் பற்றிப் பேசினார்கள். பிறகு பெரியதனம் திரு. V. N. ரங்கசாமி முதலியார் அவர்கள் ஈரோட்டில் கூடும் முதலாவது மகாநாட்டிற்கு ரூபாய் 10 கொடுப்பதாய் வாக்களித்தனர். அப்போது 'செங்குந்தர் நன்னெறிச் சங்கம்' என்னும் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் பெற்றனர்.

தலைவர், திரு. V. N. ரங்கசாமி முதலியார் அவர்கள் பெரியதனம், மிராஸ்தார். உபதலைவர், திரு. N. நஞ்சப்ப முதலியார் அவர்கள், நாட்டாண்மை, திரு. V. K. வெங்கிடசுப்ப முதலியார் அவர்கள் பெரியதனம். காரியதரிசிகள் திரு. E. V. துரைசாமி முதலியார் அவர்கள் ஆசிரியர், திரு. S. பழனியப்ப முதலியார் அவர்கள், வச்சனம்பாளையம் பெரியதனக்காரர். பொக்கிஷதாரும், நிர்வாகசபை அங்கத்தினரும் அடுத்த கூட்டத்தில் நியமிக்கப் பெறுவர். கூட்டம் இரவு 1 மணிக்கு இனிது கலைந்தது.

### மலையாளம் ஜில்லா.

### கொல்லங்கோடு செங்குந்த வாலிபர் சங்கம்.

விபவ ௵ தை ௴ 29௳ இரவு 9-மணிக்குச் செங்குந்த வாலிபர் பொதுக்கூட்டம் ஒன்று திரு. P முத்துவேலு முதலியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. தலைவர் தமது முன்னுரையில் இத்தகைய கூட்டங்களின் அவசியத்தைப் பற்றியும் வாலிபர்கள் சமூகத்திற்குச் செய்யவேண்டிய கடமையைப் பற்றியும் விளக்கிக் கூறினார்கள். பின் திரு. S. சிவராம முதலியார் 'சங்கமும், பத்திரிகையும்' என்பதைப் பற்றிப் பேசும்போது வாலிபர் சங்கத்தின் அவசியத்தைப்பற்றியும் ஒவ்வொரு செங்குந்தரும் நமது மித்திரனை ஆதரிக்கவேண்டியதைப் பற்றியும் வற்புறுத்தினார். மற்றும் சில அறிஞர்கள் கல்வி, ஒழுக்கம் என்பவற்றைக்குறித்து அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பிறகு கொல்லங்கோடு செங்குந்த வாலிபர் 'சங்கம்' ஸ்தாபிக்கப் பெற்று ஞாயிற்றுக்கிழமை தோறும் கூட்டம் கூடுதல், சந்தா வசூலித்தல், இச்சங்கத்தைச் சென்னையிலுள்ள தலைச்சங்கத்திற்குக் கிளையாக்கி வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 5 கட்டணமாகச் செலுத்தல், அங்கத்தினர் ஒவ்வொருவரும் சூதாடுதல் மதுபானம் செய்தல் முதலிய தீய பழக்கங்களை விட்டுவிடுதல் முதலிய வற்றைக் குறித்த தீர்மானங்கள் நிறைவேறின. கீழ்க்கண்ட உத்தியோகஸ்தரும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். தலைவர் திரு. கு. முத்துக்குமாரசாமி முதலியார். காரியதரிசிகள் P. முத்துவேலு முதலியார், திரு. R. அருணாசல முதலியார். பொக்கிஷதார் திரு. S. சிவராம முதலியார். இச்சங்கத்திற்கு அங்கத்தினராக 60 பேர் சேர்ந்தார்கள். இரவு 12 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது எனக் காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

### திருநெல்வேலி ஜில்லா

### வீரவநல்லூர் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

இச்சங்கத்தின் நிர்வாகக்கூட்டம் 16-2-29 சனிவாரம் மாலை 5-மணிக்கு ஸ்ரீமான் V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் B.A., B.L. அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிற்று. அப்போது மகமை வசூலித்தல், கணக்குப்பரிசீலனை செய்தல் முதலியவை ஆனபிறகு தமிழ்நாடு தினசரிப் பத்திரிகை வாங்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பெற்றது.

பின்னர் 5-மணிக்கு இச்சங்கத்தின் 12-ஆவதாண்டு 8-வது சாதாரணக்கூட்டம் ஸ்ரீமான் ஆவுடையநாயக முதலியார் அவர்கள் தலைமையில் கூடியபோது செங்குந்தர் திருஞானசம்பந்தர் ஸ்கூல் தலைமை உபாத்தியாயர் திரு. S. ஆதிநாராயண பிள்ளையவர்கள் 'இலங்கையின் வரலாறும் குபேரன் உற்பவமும்' என்பது பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள் வந்தனோபசாரத்துடன் சபை இனிது கலைந்தது எனக் காரியதரிசி எழுதுகிறார்.

### இராமநாதபுரம் ஜில்லா

### மண்டலமாணிக்கம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

11-2-29 தேதி இரவு 9-மணிக்கு இச்சங்கத்தின் 14 வது கூட்டம் தலைவர் திரு. மு. அ. பாதம்பிரியா முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிற்று.

அவ்வமயம் ஒவ்வொரு செங்குந்தரும் சங்கத்தின் அங்கத்தினராக வேண்டுமென்று திரு. ஞா. சு. மு. பாதம்பிரியா முதலியார் தலைவர் முதலியவர்கள் வற்புறுத்தி அங்கத்தினர் அனுஷ்டிக்கவேண்டிய ஒழுக்கத்தைப்பற்றியும் பேசினார்கள். திரு. இ. முனியப்ப முதலியார் அவர்கள் முதலாவது மகாநாட்டு வைபவத்தைப்பற்றியும் தலைவர்கள் பேருரைகள் முதலியவற்றைப்பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். 11-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

### மதுரை ஜில்லா

### மதுரைச் செங்குந்தர் சங்கம் மாபெருங்கூட்டம்.

3-2-29 ஞாயிற்றுக்கிழமை இரவு 7-மணிக்கு இச்சங்கத்தின் மாதாந்தரக்கூட்டம் திரு. V. வீரபத்திர முதலியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. அச்சமயம் கடவுள் வாழ்த்திற்குப் பிறகு திரு. S. மாணிக்க முதலியார் ஈரோட்டில் நடந்த மகாநாட்டின் வைபவங்களைப்பற்றி மலர் தொடுத்தாங்கு கூறினார்கள். பின் உயர் திரு. N. K. நாகப்ப முதலியார் அவர்கள் கொங்குநாட்டுச் சகோதரர்களின் இடைவிடா முயற்சியைப் பேசி மதுரை ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு செங்குந்த கிராமத்திலும சங்கம் நிறுவத் தாம் உடல் பொருளாவியைத் தத்தம்செய்வதாகக் கூறினார்கள். மாணவர் அங்குசாமி மகாநாட்டுத் தீர்மானங்களை விளக்கிக் கூறினார். அடுத்தபடி கம்முலக் கல்லூரி மாணவன் ம. இராமலிங்கம் அகால மரணமடைந்தமைக்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. வந்தனோபசாரத்துடன் 10½-மணிக்குக் கூட்டம் கலைவுற்றது எனக் காரியதரிசி எழுதுகிறார்.



### சோழவந்தான் செங்குந்தர் சங்கம்.

இச்சங்கத்தின் திறப்புவிழா தினமாகிய 24-3-29 தேதி முள்ளிப்பள்ளம் குருநாதசுவாமி கோயிலில் இதற்கென வாழை, கமுகு, தோரணங்கள், நல்வரவு கூறும் வளைவுகள் முதலிய அமைக்கப்பெற்ற விசித்திரகொட்டகை வெகு கெம்பீரமாய் விளங்கிற்று. மாலை 6-மணிக்கு மதுரை திருப்பரங்குன்றம் முதலிய இடங்களிலிருந்து வந்த பிரமுகர்களை இவ்வூரார் பெருங்கூட்டமாக ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று வரவேற்றனர். கூட்டம் மாலை 7-மணிக்கு ஆரம்பித்தது. ஏதோ அசந்தர்ப்பத்தால் சிவகங்கை இராஜா ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் திரு. S. மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்கள் வராததால் இராமநாதபுரம் ஜில்லா போலீஸ் சுபரிண்டெண்டு ஆபீஸ் திரு. R. லோகநாத முதலியார் அவர்கள் அவைத் தலைமை வகித்தார்கள். தலைவர் முகவுரை கூறிச் சங்கத்தைத் திறந்து வைத்தனர். பின்னர் 'சங்கத்தின் நோக்கம்,' 'கல்வியின் அவசியம்' 'பத்திரிகையின் பயன்' ஒழுக்கம் உயர்வு தரும்' 'புலாலுண்ணாமை' முதலியவை பற்றி முறையே திருவாளர்கள் அங்குசாமி S. V. வீரப்பன், S. மாணிக்க முதலியார், K. சண்முக முதலியார், A. P. சுப்பு முதலியார், ஆகியவர்களும், 'பெண்கல்வி'யைப் பற்றி செள. பிச்சையம்மாளும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். அப்போது நிறைவேறிய தீர்மானங்களுள் முக்கியமானவை கீழ் வருமாறு.

(1) சோழவந்தான் செங்குந்தர் சங்கம் என வழங்கப் பெறும் இச்சங்கம் சென்னையிலுள்ள தலைச்சங்கத்திற்குக் கிளையாக இணைக்கப்பெறல் வேண்டும்.

(2) இச்சங்கம் நம்மவர்கள் முன்னேற்றங்கருதி மாதாமாதம் கூடவேண்டும்.

(3) கீழ்க்கண்ட கனவான்கள் உத்தியோகஸ்தர்களாக நியமிக்கப் பெறல்வேண்டும்:—

தலைவர் திரு. வீ. கு. குருசாமி முதலியார் அவர்கள், உபதலைவர் இ. வீரபத்திர முதலியார் அவர்கள், காரியதரிசிகள் திரு. ஆண்டியப்ப முதலியார் அவர்களும் திரு. அ. ப. சுப்பு முதலியார் அவர்களும், பொக்கிஷதார் திரு. வீ. கு. முத்திருளாண்டி முதலியார் அவர்கள். ஆறு இதர நிர்வாக அங்கத்தினர். தலைவர் முடிவுரையின் பின் 11-மணிக்குக் கூட்டம் முடிவு பெற்றது. சகோதரர்கள் அறுசுவையுடன் விருந்தளிக்கப் பெற்றனர் எனக் காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

### பிரெஞ்சு இந்தியா

### புதுச்சேரி

### செங்குந்தர் கல்விநிதிக்காக மகமை சேர்ந்தது.

சென்னையிலிருந்து நமது தலைச்சங்க அமைச்சர் திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியாரவர்கள் M.A., L.T., புதுவைக்குச் செல்ல அங்கு 30-3-29 மாலை 4-மணிக்குப் புதுவை அரசாங்க அமைச்சர் திருவாளர் ஆ. வே. முத்தையா முதலியாரவர்கள் B.A., B.L., தலைமையின்கீழ் ஒரு கூட்டம் கூடியது. அதற்குத் திருவாளர்கள் சிங்கப்பூர் அண்ணாமலை முதலியார், சு. அண்ணாமலை முதலியார், சு. சண்முக முதலியார், S. S. வரதராஜ முதலியார், அ. சேனாதிபதி முதலியார், V. கிருஷ்ணசாமி முதலியார் முதலிய பெரியோர்கள் விஜயஞ்செய்தனர். அக்கூட்டத்தில் தலைவர், திரு. ம. சண்முகசுந்தர முதலியார் இவர்களது பிரசங்கங்களுக்குப்பின் தலைச்சங்கத்தின் கண்ணிய நோக்கத்திற்கு இன்றியமையாத கல்வி நிதிக் கவசியமான மகமை ஏற்பாடு அனைவருடைய மனத் திருப்தியுடனும் செய்யப்பட்டது. அதன்படி முதல்தர வருமானமுள்ளவர் மாதமொன்றுக்கு 4 அணா வீதமும், இரண்டாம் தரத்ததுடையவர் 2 அணா வீதமும், மூன்றும்தர வரும்படியுள்ளவர் 1 அணா வீதம் தட்டாது தர ஒத்துக்கொண்டனர். பின்னர் கூட்டம் இனிது கலைந்தது. இவற்றிற்குப் பெருமுயற்சி எடுத்துக்கொண்ட சு. அண்ணாமலை முதலியார், சு. சண்முக முதலியார், சிங்கப்பூர் அண்ணாமலை முதலியார் ஆகியவரது ஊக்கத்திற்குச் செங்குந்த உலகம் நன்றிபாராட்டும். (காஞ்சிபுரம், சிவபுரம் முதலிய ஊர்களிலும் இந்த மகமையை ஒத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டமையை அன்பர்கள் கவனிக்க.)

### கதிர்காமம்.

1-4-28-ல் தலைச்சங்க அமைச்சரும், புதுவை அரசாங்க அமைச்சரும் புதுவையினின்றும் கதிர்காமம் செல்ல அங்குத் திருவாளர் ஆ. வே. முத்தையா முதலியாரவர்கள் B.A., B.L., தலைமையின் கீழ் காலை சுமார் 10-மணிக்கு ஒரு கூட்டம் கூடியது. அதற்குத் திருவாளர்கள் சு. அண்ணாமலை முதலியார், அ. சேனாதிபதி முதலியார், மு. அ. அருணாசல முதலியார், கைலாச நடேச முதலியார் ஆகிய பிரமுகர்கள் வந்திருந்தனர். அதுபோது திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியாரவர்கள் M.A., L.T., 'நமது முன்னேற்றம்' என்பதுபற்றி ஒரு சிறந்த சொற்பொழி வாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது கலைந்தது.

### டிரான்ஸ்வால் செங்குந்தர் சங்கம்.

24-2-29-ல் டிரான்ஸ்வாலின் தலைநகராகிய ஜோஹன்னஸ்பர்கில் தமிழ்ப் பாடசாலையில் இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அச்சமயம் (1) 'இச்சங்கத்தைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தோடு இணைத்து அதன் நோக்கப்படி வேலைசெய்து வர வேண்டும்.

(2) இச்சங்கத்தின் அங்கத்தினர் வாரம் ஒன்றுக்கு ஒரு ஷில்லிங் வீதம் சந்தா செலுத்தவேண்டும்

(3) அவ்வாறு சேர்ந்த தொகையைத் தலைச்சங்கத்திற்காகவாவது, செங்குந்த மித்திரனுக்காகவாவது அனுப்பவேண்டியது.

(4) நமது 'மித்திரனை' ஒவ்வொரு செங்குந்தரும் ஆதரிக்கவேண்டியது. என்ற தீர்மானங்கள் நிறைவேறின எனக் காரியதரிசிகள் எழுதுகிறார்கள். இச்சங்கத்தின் உத்தியோகஸ்தர் அங்கத்தினர் முதலிய விபரங்கள் அடுத்த மாத 'மித்திர'னில் வெளியிடப் பெறும்.

## ஒரு நிரூபம்.

செங்குந்த மித்திரன் பத்திராதிபருக்கு.

குலத்தொண்டிற்குன்றா ஊக்கமுடைய குணக்குன்றாய ஐயா,

நமது புதுவருட 'மித்திரன்' வெளிவருவதற்கு முன் "'செங்குந்த மித்திரன்' காரியாலய மானேஜருக்கு" என ஒரு கடிதமெழுதி யிருந்தேன். அதனோடு இதனை ஒத்திட்டுப் பார்ப்பீராயின் இரண்டும் ஒன்றோடொன்று கருப்பும் வெள்ளையும் இரவும், பகலுமென முரண்படும்.

ஐயா, மானிடராது ஆத்திரக்காரனென்னே! அது அறியாமையால் பெருகுவதென்பதனை! நமது குலமகாநாட்டின் பயனாக நமது மித்திரனுக்குப் புதிய சந்தாதாரர்களாகச் சேர்ந்தவர்களில் நானொருவன். நம் மாபெரும்நாடு கூடி மூன்று மாதங்களாகியும் நம் குலத்தருந்தவப் புதல்வனும் 'செங்குந்த மித்திரன்' வெளிவாராததால் பலர் பலவாறு எண்ணியிருப்பரென நினைக்கிறேன்.

யானறிந்தவரையில் "இவ்வளவுதான் ஆடம்பரம்" என்றார் சிலர். "மித்திரனாவது சத்ருவாவது" என்றார் சிலர். "நான் அப்பொழுதே நினைத்தேன்" என்றார் சிலர். இவ்வாறு வாயில் வந்தபடி உளரிய கோஷ்டியில் நான் மதிமயங்கி நபர் ஆனேன். மகாநாட்டில் 'செங்குந்த மித்திரன் ஆபீஸ்' என நியமிக்கப்பட்ட இடத்திலிருந்த பெரியாரிடத்தில் நானும் என் நண்பர் சிலரும் சந்தாத் தொகையினைச் செலுத்தினோம். அவர் மிக்க அன்பும் பரிவுமான குரலோடு எங்களனைவருக்கும் பத்திரிகை மாதா மாதம் தவறாதனுப்புவதாகக் கூறி இன்னும் எங்களூரில் புதிதாகச் சந்தாநேயர்களைச் சேர்க்கும்படியும் எங்களை வேண்டிக்கொண்டார்.

'செங்குந்த மித்திர'னுக்குப் புதிய சந்தாநேயர் சேர்க்கவேண்டுமென்னும் எண்ணம் நான் எங்கள் ஊரையடையுமுன்னமே என் மனத்தைவிட்டுப் பறந்துவிட்டது. சில நாட்களான பின் 'செங்குந்த மித்திரன்' எங்களுக்கு வாராததுகண்டு நான் முன் சொன்ன கோஷ்டிப் பிதற்றல் ஏற்பட்டது. நாளுக்கு நாளாக எனது ஆத்திரம் மேலேறிக்கொண்டே வந்தது. கொடுத்த ரூபாய் தத்தமோவென எண்ணினேன். இத்தகைய எண்ணங்களின் பயனாகவே முற்குறித்த கடிதமெழுதினேன். அதில் அடங்கியதை நாணமிகுதியுடன் வெளியிடுகிறேன். மகாநாட்டில் என்னிடம் ரூபாய் வாங்கியவர் என்னை மோசம் செய்துவிட்டாரென்றும், தலைவர்களெல்லாம் இவ்வளவுதானோ வென்றும், உடனே எனது சந்தாத் தொகையினை எனக்குத் திருப்பி அனுப்புவதே யோக்கியதையென்றும் எழுதி யிருந்தேன். இன்னும் நான் பலவாறெழுதியிருந்ததை எடுத்துரைக்க எனக் கச்சமாக விருக்கிறது.

பின் சில நாட்களாயின. ஒருநாள் காலை தபாற்காரன் ஒரு புத்தகக்கட்டை என்னிடம் கொண்டு வந்து கொடுத்தான். நான் இதற்குமுன் கண்ட பத்திரிகையைப்போல் இது நான்கு பங்கிருப்பதைக் கண்டு திகைத்தேன். எனது கோபத்தின் பயனாக மூன்றுமாதப் பத்திரிகைகளும் எனக்குமாத்திரம் ஒன்று சேர்த்தனுப்பப்பட்டனவோ வென எண்ணினேன். முக்கால் பங்கு சந்தோஷத்துடனும் கால் பங்கு அசட்டையுடனும் பிரித்தேன். காற்றுப்பட்ட மாத்திரத்தில் அட்டைதிறந்தது. நான் என்ன கண்டேன்? நம்குலத்தவர் முன் தம் தலைகளைத் தாராளமாகக்கொடுக்க, அவற்றின் மீதமர்ந்து ஈட்டியெழுபது பாடியருளியவரும் புலியாசரஞ்சி யேத்திய கவியரசருமாகிய ஒட்டக்கூத்தப் பெருமானாரைக் கண்டேன். என்னை யறியாமலும் எனது கால் கைகள் உதறின. கண்ணங்களில் போட்டுக்கொண்டேன். "எம்பெருமானே, மன்னிக்க வேண்டு"மென்றேன். "அறியாமல் எழுதிவிட்டேன். ஆத்திரக்காரனானேன். எனக்குப் புத்திமட்டே" என்றேன். சில நிமிஷங்களாயின. என்மீது ஒருவர் கைபட்டது நீரொழுகுங் கண்களோடு திரும்பிப் பார்த்தேன். என்னைத் தொட்டவர் நான் சொன்ன கோஷ்டியில் ஒரு நபர். அவர் "என்னவையா அழுகை? என்ன வெழுதிவிட்டீர்? என் புத்திமட்டு?" என்ற கேள்விகள் கேட்டார். நான் அவருக்கு "ஐயா நீரும் என் குற்றத்தில் பாதி செய்தீர்" என்றேன். அவர் விழித்தார். பின்பு நான் "நாமும் இன்னும் சிலரும் சேர்ந்து 'செங்குந்த மித்திரன்' வாராததற்காகத் தலைவர்களை இகழ்ந்து பேசினோமல்லவா? நான் அதிலும் மீறி அவர்களுக்கு என் ஆத்திரமெல்லா மடங்கிய ஒரு கடிதமும் எழுதிவிட்டேன். இதோ பாரும் இந்தச் சஞ்சிகையை. முதலில் பாரும். எனது குற்றத்துக்காக என்னைத்தண்டிக்கவே நமது குலத்தெய்வம் போன்றவர் வந்தாரென நடுங்கி மன்னிப்புக் கேட்கிறேன்" என்று கூறி அவருக்குச் சஞ்சிகையைக் காட்டினேன்.

இருவரும் பார்த்தோம். 'கூத்தர்பெருமான் படமா இது? என்றவர் தம் கண்களில் ஒட்டக்கூத்தர் திருவடிகளை ஒத்திக்கொண்டு "நாம் மன்னிக்கப்படுவோம்" என்றார். பின்னர் அவ்வேட்டைத் திருப்பினோம். அறிவும், ஆற்றலும் விடாமுயற்சியும் ஜொலிக்கும் தங்களுருவத்தைக் கண்டோம். "இரண்டாம் ஒட்டக்கூத்தர்" என்றோம். சென்னிமேற் கரங்கூப்பினோம். சிறிது நேரத்தில் நமது குலத்தீபங்களை யெல்லாம் கண்டோம். முருகப் பெருமானாரனைய திருவாளர் முத்தையாரவர்களை ஆம்முத்தே; மாணிக்கமே வேறென்ன கூறுவதென்



யர்ங்கள் அறியோம்.—கைகூப்பித் தொழுதோம். இவ்வாறே சபாபதிச் சற்குணவள்ளல், முத்துக்குமார முதல், செங்கோட்டையச் செல்வர், ஆறுமுகத் தண்ணல், கந்தப்பக் கருணையார், பீமராஜப் பெருந்தகை முதலிய தலைவர்களைத் தரிசித்தோம். கடைசிபக்கமும் வந்தது. "அன்பர்களுக் கறிக்கை" என்பதை வாசித்தோம் 'மித்திரன்' வாரத் தாமதித்ததற்குக் காரண முணர்ந்தோம். அனைவருக்கும் இப்பொழுதுதான் சென்றிருக்குமென உணர்ந்தோம். எனது நண்பரும் தமக்கும் தம்மில்லத்தில் வந்திருக்குமென ஓடினார்.

பின்பு நான் தலைவருரைகளையும், மகாநாட்டு யாத்திரைவாசி யொருவர் எழுதியுள்ளதையும், தங்களது பேருரையைப்பற்றிச் சின்ன பழனியப்ப முதலியார் எழுதியிருப்பதையும் ஆழ்ந்து வாசித்தேன். எனது குற்றம் வரவரப் பெரிதாகத் தோன்றியது. எனது கண்கள் நீர்த்திவலைகளாயின. காது ஏனைய விஷயங்களுக்குச் செவிடாயது. எனது வருத்தம் மிகுதியால் நெஞ்சில் ஏதோ அடைத்துக்கொண்டாற் போன்றிருந்தது. ஐயாவே, என் குற்றத்திற்குச் சரியான தண்டனை யடைந்தேன். பின் சற்றுத் தெளிந்து, எதிரில் எனது 10 வயது மகன் நிற்பதை யறிந்தேன். அவனும் என்னைக் கண்டழுதவண்ணமே "அப்பா, என்ன கஷ்டம்? ஏன் அழுகிறீர்?" என்றான். நான் ஒன்றும் பதில் கூறாது கண்களைத் துடைத்துக்கொண்டு புத்தியைச் சுவாதீனம் படுத்திக்கொண்டு "என் கண்ணே, இதோ பார் நமது குலதெய்வம். இதோ நமது தலைவர்கள்" என்றேன் அவனும் ஆநந்தத்தோடு பார்த்துக் கும்பிட்டு விட்டு ஓடித்தன் தாயை யழைத்துவந்தான். பின்பு அனைவரும் மறுபடியும் உருவங்களையும் மகாநாட்டுப் பந்தல், கொடியேற்றுவிழா, தலைவர்கள் ஊர்வலம் இவைகளையும் ஊக்கத்துடன் பார்த்தோம். என் மனைவி "இத்தனை வைபவங்களுக்கும் என்னைக் குருடியாக்கினீரே. நான் இனி எப்பொழுது இவைகளைக் காணப்போகிறே"னென வருந்தினாள். நானும் பதில் என்ன சொல்வதெனயோசிக்க, என் கை தானே நமது மித்திரனேடுகளைப் புரட்டிற்று ஒன்றில் இரண்டாவது மகாநாட்டு விளம்பரத்தைக் கண்டேன். உடனே என் மனைவிக்கும் மகனுக்கும் "இன்னும் சில நாட்களில் நமது தலைநாடாகிய காஞ்சிபுரத்தில் இத்தகைய வைபவங்களைக் கண்டு களிக்கலாம்" எனக்கூறி அவர்களைத் தேற்றினேன்.

பின்பு மூவரும் தலைவர்களையும் மகாநாட்டையும் பற்றிய பேச்சுடன் போஜன மருந்தினோம். 'செங்குந்த மித்திர'னை வெகு ஜாக்கிரதையாகப் பொக்கிஷத்தில் வைத்தேன். மாலையில் 'மித்திர'னைப் பற்றி இகழ்ந்து பேசிய அனைவரும் ஒன்றுகூடி எங்கள் குற்றங்களைப் பற்றிக் கூறி வருந்தினோம். சிலர் மடத்தனமாகப் பத்திரிகையைக் கோபத்தோடு திருப்பிவிட்டதாகக் கூறி வருந்தி மறுபடியதைற அனுப்பும்படிச் 'செங்குந்தமித்திரன்' காரியாலயத்துக் கெழுதவதுடன் ஸ்டாம்பு அனுப்பவேண்டுமென்றும் தீர்மானித்தனர்.

பொறுதலைப் போற்றும் புண்ணியரே! தாங்கள் மகாநாட்டில் பொழிந்த அன்பு மாரியும் ஊறாத எங்கள் மனங்கள் கல்மலைகளோ? தாங்கள் தாங்கி நிற்கும் இயக்கத்தில் மோசத்தின் நிழலும் படுமோ? சுயநலத்தைச் சுட்டெரித்த சுகுணபூஷணர்களை மோசக்காரரென்றும் ஊக்கமற்ற ஆடம்பரக்காரரென்றும் எண்ணிய செங்குந்தர்களாகிய எங்களது மனக்குன்றங்களை எக்குன்றங்கொண்டு குத்தி நெகிழ்விப்பது? ஆயினும் ஐய, இப்பொழுது திருந்திவிட்டோம் தாங்களும் தங்களோடுழைக்கும் தகைமையாளரும், என்னிடம் சந்தா பெற்று என்னைப் புண்ணிய உலகத்தில் புகுத்திவிட்டக் கண்ணிய சிலரும் ஆகிய அனைவரும் என்னையும் எனது அறியாமையைப் பங்கிட்டுக்கொண்ட எனது நண்பர்களையும் மன்னிப்பீர்களென நம்புகிறேன் "சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயிற் பொருப்பது கடனே" யாங்கள் செய்த பெருங்குற்றத்தைத் தாங்கள் பொருப்பது கடன் எனக்கூற அஞ்சுகிறேன். தயவுசெய்து சிறியோங்கள் பிழையை மறந்துவிடவும்.

இன்னும் என்னைப்போன்று எத்தனை நண்பர்கள் குற்றம் செய்தார்களோ? தாங்கள் அணுவளவும் லாபங்கருதாது கஷ்டப்பட்டுப் பதிப்பித்துச் சுருட்டச் செய்து, தபால் மூலமாக அனுப்புவதை இலேசில் வேண்டாமென்று திருப்பும் செங்குந்தரும் செங்குந்தரோ? நமது 'மித்திர'னிடம் அளவளாவுவதினும் பாக்கியம் வேறுண்டோ? அவனுக்குப் பல்லாயிரம் பொன் தரினும் தக்க நன்றியாகாதே. பல நூறு ரூபாய் கள்ளுக் கடைக்காரன் பையில் சேர்த்தாலும், பல்லாயிரம் ரூபாய்கள் வக்கீல் பெட்டியில் சேர்த்தாலும் பல பத்தாயிரங்கள் சோம்பேறி மடங்களுக்கு வைத்தாலும் ஒன்றரை ரூபாய் நமது குலச் செல்வக் குழவிக் களித்து அவன் ஏழைமானவர்க்குப் புரியும் உதவியாகிய பெருந்தருமத்தில் ஈடேபடத் தயங்கிப் பின்வாங்கும் மக்களும் மக்களோ? அனைத்தையும் நான் 'மித்திரன்' வந்தபிறகே அறிந்தேன். இப்பொழுதுதான் புதிய சந்தாநேயர் சேர்க்கவேண்டுமென மகாநாட்டில் எங்களிடம் சொல்லப்பட்டது கவனத்திக்கு வருகிறது. இனி நானும் எனது நண்பரும் நங்குலத்திற்காக எங்களாலானவரை உழைப்போம். எங்கள் அறிவிலா இகழ்ச்சிக் கோஷ்டி, ஊக்க மிகுதியுடன் நங்குல நலத்திற்கும் பொதுநலத்திற்குமுழைக்கும் சற்சங்கமாயிற்று. எங்களைப்போல பல சகோதரர்கள் அறியாது குற்றமிழைத்திருக்கக் கூடுமெனக் கருதி அத்தகைய குற்றங்கள் இனி வாராதிருக்க வேண்டி இந்த நிரூபத்தைத் தயவுசெய்து நமது 'மித்திர'னில் பதிப்பிக்கத் தங்களைப் பன்முறை வேண்டுகிறேன். என் பெயரை இதோடு வெளியிடுவது எனக்கு வெட்கமாக இருப்பதால் அது வேண்டாமென எண்ணுகிறேன். ஆனால் என் பெயரோடேயே பதிப்பிக்கவேண்டுமென்பது தங்கள் நோக்கமாயின் அதுவும் எனக்கு தக்க தண்டனையே

(அவசரப்படேல்)

அன்பருக்கு அத்தகைய தண்டனையை விதிக்க எமக்கு விருப்பமில்லை. (ப-ர்.)

# "செங்குந்த மித்திரன்"

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

இது உண்மைச் செங்குந்தர்கள் முன்னேற்றமடையும் வண்ணம் வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை. இதில், செங்குந்தர்களின் பண்டைப் புகழைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்களும், குலதிலகர் சரித்திரங்களும், விரதாதி பண்டிகைகளின் ஐதீகங்களும், பொதுவில் அறிவையும் நல்லுணர்வையும் புகட்டும் சிறந்த கட்டுரைகளும், வியாபார விவசாய வைத்தியக் குறிப்புக்களும், தொழில் முறைகளும், உலகவர்த்தமானங்களும், ஆங்காங்கே செங்குந்தரிடையே நிகழும் முன்னேற்றக் கிளர்ச்சிகளின் விருத்தாந்தங்களும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரம் முதலிய தொண்டுகளின் விவரங்களும், வேடிக்கைத் துணுக்குக்களும், விநோதக் கதைகளும் சம்பாஷணைகளும், செங்குந்தர் பஞ்சாங்கம் முதலியவைகளும் வெளிவருகின்றன. அன்பர்களின் ஆதரவு அதிகமாகக் கிடைக்குமாயின், பத்திரிகையைத் துவக்கும் ஆண்டில் முன்னிலும் அழகாகவும், இன்பகரமாகவும், பலசுவையுந் ததும்புமாறு சித்திரங்களோடு கூடிய சீரிய விஷயங்களைக் கொண்டதாகவும், பொதுவில் நம்மவர் அறிவும் ஒழுக்கமும் ஓங்கி உன்னத வாழ்க்கைக்குரிய சாதனங்களை அடையும் நெறியிலும் வெகு சிறப்பாகத் தோற்றுவிக்க உத்தேசிக்கிறோம். ஆகவே, நமது குலப்பத்திரிகைக்கு அன்பர்கள் ஆதரவு அதிகமும் எதிர்பார்க்கப் படுகின்றது. ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் 'செங்குந்த மித்திர'னை வரவழைக்கவேண்டுமென்னும் கொள்கை நம்மவருள் பரவுமானால் நமது 'மித்திர'னுக்கு வலுவேற்பட்டு அதன் வாயிலாக நமது குலமுன்னேற்றம் சீக்கிரம் சித்தியடையுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இக் கொள்கையையே நமது குலப்பிரமுகர்கள் தமது வாக்குச் செல்லுமிடங்களிலெல்லாம் நாட்டி வருவார்களென நம்புகின்றோம்.

| தபாற்கூலி உள்பட வருஷச் சந்தா | ரூ. அ.பை. | |
|---|---|---|
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | 1—8—0 | தனிச்சஞ்சிகை ஒன்றுக்கு |
| பினங்கு, சிங்கப்பூர், ஆப்பிரிகா ,, | 2—0—0 | 0—2—6. |

# 'செங்குந்தர் பிரபந்தத் திரட்டு'

என்னும் அரிய பெரிய நூல் வெளிவந்து விட்டது. இது கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் செய்தருளிய 'ஈட்டி எழுபது', 'எழுப்பெழுபது', மற்றைய பெரும்புலவர் பலர் செய்தருளிய களிப்பொருபது, திருக்கை வழக்கம், பிள்ளைத் தமிழ், கலித்துறை மாலை, தசாங்கம், ஊசல், லாலி, கட்டியம், எச்சரிக்கை, மங்களம் முதலியன செங்குந்த விநாயகர் மாலை, செங்குந்த சிலாக்கியர் மாலை, செங்குந்த வேற் பதிகம், செங்குந்த மரபு விளக்கம், சூருவளி, திருக்கை வழக்கத்தந்தாதி, செங்குந்த குலமாட்சி ஆகிய 15 பிரபந்தங்களும் அடங்கியது.

இப்புத்தகத்தைச் செங்குந்த குலமக்கள் ஒவ்வொருவரும் வாங்கி விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாதலால் இதனைக் கண்ணுறும் சகோதரர்கள் இப்பிரபந்தத் திரட்டை ஆதரிக்க வேணுமாய்க் கோருகிறோம்.

உயர்ந்த பதிப்பு காலிகோபயிண்டில் பொன் கிலிட் செய்தது விலை ரூ. 2-8-0.
தபாற் கூலி பிரத்தியேகம்.

புத்தகம் கிடைக்குமிடம்:—
மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ்,
நெ. 31. அரண்மனைக்காரன் தெரு, சென்னை

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the **South Indian Sengunthar Mahajana Sangam Madras,** at 31 Armenian Street, Madras, and is printed by T. C. Nataraja Mudaliar at the Cambridge Press 8/19-A. Armenian Street, Madras

# ‘செங்குந்த மித்திரன்’ பஞ்சாங்கம்

சுக்கிலஹூ சித்திரைமீ (1929ஹூ ஏப்ரல்மீ — மேமீ) உத்திராயணம், வசந்தரிது.

| ஆங்கிலத் தேதி | தமிழ் | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | நேத்திரம் | ஜீவன் | [illegible] | யோகினி | விசேட நாட்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | 1 | சனி | சது, 24-53 | ரோ 45-48 | அ, 45-48 சி | 1 | ½ | குன் | செ-மே | வருஷப்பிறப்பு |
| 14 | 2 | ஞா | பஞ், 18-23 | மி, 41-23 | சி, 60 | 1 | ½ | பஞ் | செற் | சஷ்டி சுபமுஹூர்த்தம் |
| 15 | 3 | திங் | ஷஷ், 12-20 | தி, 37-25 | சி, 37-25 அ | 1 | ½ | சஷ் சப் | மேற் | |
| 16 | 4 | செவ் | ஸப், 6-48 | பு, 34-3 | சி, 60 | 1 | ½ | அஷ் | வ-மே | |
| 17 | 5 | புத | அஷ், 1-53 நவ, 57-43 | பூ, 31-23 | சி, 60 | 1 | ½ | நவ | வ-கி | ஸ்ரீராமநவமி |
| 18 | 6 | வியா | தச, 54-30 | ஆ, 29-30 | சி, 29-30 அ | 2 | ½ | தச | பூமி | கரிநாள் |
| 19 | 7 | வெ | ஏகா, 52-8 | ம, 28-0 | ம, 28-0 சி | 2 | 0 | ஏகா | கிழ | |
| 20 | 8 | சனி | துவா, 50-48 | பு, 28-30 | சி, 28-30 ம | 2 | 1 | துவா | வட | |
| 21 | 9 | ஞா | திர, 50-33 | உ, 29-35 | அ, 60 | 2 | 1 | திர | தெ-கி | |
| 22 | 10 | திங் | சது, 51-25 | அ, 31-40 | சி, 31-40 மி | 2 | 1 | சது | தெ-மே | |
| 23 | 11 | செவ் | ○, 53-23 | சி, 35-0 | சி, 60 | 2 | 1 | பௌ | தெற் | சித்திராபௌர்ணமி |
| 24 | 12 | புத | பிர, 56-50 | சு, 39-43 | சி, 60 | 2 | 1 | பிர | மேற் | |
| 25 | 13 | வியா | துவி, 60 | வி, 45-8 | சி, 60 | 2 | 1 | துவி | வ-மே | |
| 26 | 14 | வெ | துவி, 1-15 | அ, 51-40 | சி, 51-40 ம | 2 | 1 | திரி | வ-மே | விவாகம் |
| 27 | 15 | சனி | திரி, 6-43 | கே, 58-58 | சி, 60 | 2 | 1 | சது | வ-கிழ | கரிநாள் |
| 28 | 16 | ஞா | சது, 12-40 | மூ, 60-0 | அ, 60 | 2 | ½ | பஞ் | ஆகா | |
| 29 | 17 | திங் | பஞ், 19-6 | மூ, 6-40 | சி, 6-40 ம | 2 | 1 | சஷ் | பூமி | |
| 30 | 18 | செவ் | சஷ், 25-8 | பூ, 14-8 | சி, 14-8 அ | 2 | 0 | ... | கிழ | |
| 1 | 19 | புத | சப், 30-25 | உ, 20-33 | அ, 20-33 சி | 2 | ½ | சப் | வட | சுபமுஹூர்த்தம் |
| 2 | 20 | வியா | அஷ், 34-25 | தி, 26-43 | சி, 60 | 1 | ½ | அ | தெ-கி | |
| 3 | 21 | வெ | நவ, 36-48 | அ, 30-50 | சி, 60 | 1 | ½ | நவ | தெ-மே | |
| 4 | 22 | சனி | தச, 37-23 | ச, 32-55 | அ, 32-55 ம | 1 | ½ | தச | தெற் | அப்பர்சுவாமி திருநக்ஷத்திரம் |
| 5 | 23 | ஞா | ஏகா, 36-3 | பூ, 33-45 | சி, 33-45 அ | 1 | ½ | ஏகா | மேற் | |
| 6 | 24 | திங் | துவா, 32-50 | உ, 23-25 | சி, 60 | 0 | ½ | துவா | வ-மே | பிரதோஷம் |
| 7 | 25 | செவ் | திர, 28-8 | ரே, 29-23 | சி, 60 | 0 | ½ | திர | வ-கிழ | |
| 8 | 26 | புத | ச● 21-45 | அ, 25-5 | ம, 25-5 சி | 0 | 0 | சது அமா | ஆகா | சர்வத்ர அமாவாசை |
| 9 | 27 | வியா | அமா, 14-30 | பு* 19-43 | சி, 19-43 ம | 0 | 0 | பிர | பூமி | கிருத்திகை |
| 10 | 28 | வெ | பிர, 6-28 துவி, 58-13 | கி, 13-40 | சி, 13-40 ம | 0 | 0 | துவி | கிழ | |
| 11 | 29 | சனி | திரி, 50-3 | ரோ, 7-23 | அ, 37-23 சி | 0 | 0 | திரி | தெ-கி | |
| 12 | 30 | ஞா | சது, 42-8 | மி, 1-8 தி, 55-25 | சி, 60 | 0 | ½ | சது | தெ-மே | |
| 13 | 31 | திங் | பஞ், 34-55 | பு, 50-30 | அ, 50-30 சி | 1 | ½ | குன் | தெற் | சங்கரஜயந்தி |

தமிழ்நாடு ... 14440

## அன்பருக்குச் சில விளம்பரங்கள்.

### குலதிலகரின் புகைப்படங்கள்.

‘செங்குந்தமித்திரன்’ ஆபீஸில் நமது குலதிலகரின் புகைப்படங்கள் கீழ்க்கண்ட விலைகளுக்குக் கிடைக்கும்:—

| | ரூ. அ. பை. |
|---|---|
| ஒட்டக்கூத்தர் | 1—8—0 |
| தலைச்சங்கத்தின் நிருவாக அங்கத்தினர் (22 பேர் கொண்ட படம்) | 2—8—0 |
| ம. சண்முகசுந்தர முதலியார். ‘செங்குந்தமித்திரன்’ பத்திரிகாசிரியர் | 1—8—0 |
| தலைச்சங்கப் பிரசாரகர்கள் | 1—8—0 |

இத்தொகையில் படத்தின் கிரயம் பாக்கிங் தபால்செலவு முதலிய அனைத்தும் அடங்கியுள்ளன. வேண்டுவோர் முன்பணமனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

### ‘மகாநாட்டு மலர்’

ஈரோட்டில் விபவஹூ தைமீ கூடிய தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டின் வைபவங்களும், நிகழ்ச்சிகளும், தலைவர்களின் பேருரைகளும், தீர்மானங்களும், அறிஞரின் அபிப்பிராயங்களும், தலைச்சங்கத்தின் முயற்சிகளும் வெளுத்த வளவளப்பான தாளில் வெகு அழகாக அச்சிடப்பெற்று, காற்பதிற்கு மேற்பட்ட ஆப்டோன் படங்களுடன், இம் ‘மகாநாட்டு மல’ரில் அடங்கியிருக்கின்றன. நமது ‘மித்திரன்’ செல்லாத ஒவ்வொரு செங்குந்த குடும்பத்திலும் இப்புத்தகமேனும் ஒன்று இருக்கவேண்டியது அவசியம். இதன் விலை அணா 8 தான். தபாற்செலவு அணா 3. வேண்டுவோர் முன்பணமாக அணா 11 அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

### விளம்பர விகிதங்கள்.

‘செங்குந்த மித்திர’னில் விளம்பரஞ் செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட விகிதம் முன்பணமாகக் கட்டணஞ் செலுத்தவேண்டும். மாதம் மாதம் 5,000 பிரதிகள் அச்சாகின்றன. ஜாதீய பத்திரிகைகளுள் இதற்கு மேலான பத்திரிகை யில்லை. இதில் விளம்பரஞ் செய்வோர்க்கு அதிக பலனுண்டு :—

| | | ஒரு வருஷம். | ஆறு மாதம். | மூன்று மாதம். | ஒரு மாதம். |
|---|---|---|---|---|---|
| ஒரு பக்கம் | ரூ. | 100 | 50 | 26 | 10 |
| ½ பக்கம் | ,, | 60 | 30 | 16 | 6 |
| ¼ பக்கம் | ,, | 40 | 20 | 11 | 4 |

### செங்குந்த மித்திரன் 2-வது ஆண்டு பைண்டு புத்தகம்

சென்ற ஆண்டின் செங்குந்த மித்திரன் வேண்டுமென்று அநேகர் விரும்பியபடியால் செலவழிந்துவிட்ட முதன் மூன்று மாதப்பத்திரிகைகளையும் மீண்டும் பதிப்பித்து மொத்தமாக 12 சஞ்சிகைகளையும் மிக அழகாகப் பைண்டு செய்துள்ளோம். செங்குந்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் இவ்வழகிய புத்தகம் இருக்கவேண்டுவது அவசியம். சொற்ப புத்தகங்களே கைவசமுள்ளன.

விலை தபாற் செலவு உள்பட ரூபா 2—0—0.

இங்ஙனம் :

மானேஜர், ‘செங்குந்த மித்திரன்’ ஆபீஸ்,

31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.